தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:107 | 02-11-2025 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


MLM SOFTWARE Company
• Binary MLM Plan
• Single Leg MLM Plan
• Autopool MLM Plan
• Unilevel MLM Plan
• Matrix MLM Plan
• Stairstep MLM Plan
• Party MLM Plan
• Board MLM Plan
• Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

## இன்றைய பஞ்சாங்கம்

02.11.2025 ஐப்பசி 18
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.03

**திதி:**
இன்று அதிகாலை 3.18 வரை ஏகாதசி பின்பு துவாதசி.

**நட்சத்திரம்:**
இன்று பிற்பகல் 2.04 வரை பூரட்டாதி பின்பு உத்திரட்டாதி.

**யோகம் :**
இன்று இரவு 9.09 வரை வ்யாகாதம் பின்பு ஹர்ஷனம்.

**கரணம் :**
இன்று அதிகாலை 3.18 வரை பத்திரை பின்பு பிற்பகல் 2.31 வரை பவம் பின்பு பாலவம்.

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.02 வரை யோகம் சரியில்லை பின்பு பிற்பகல் 2.04 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

**சந்திராஷ்டமம்**
இன்று பிற்பகல் 2.04 வரை ஆயில்யம் பின்பு மகம்

**நல்ல நேரம்**
காலை 7.45 – 8.45.
மாலை 3.15 – 4.15.
**இராகு காலம்**
மாலை 4.30 – 6.00.
**எமகண்டம்**
பிற்பகல் 12.00 – 1.30.

**குளிகை**
பிற்பகல் 3.00 – 4.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040




29 அறுவை சிகிச்சைகள்! இரண்டு மாதத்தில் புதிய அறிவிப்பு

(செய்தி உள்ளே)

# உலகில் எங்கு பாதிப்பு ஏற்பட்டாலும் முதலில் உதவிக்குச் செல்லும் நாடு இந்தியா

## பிரதமர் மோடி




**ராய்ப்பூர், நவ.2:**
உலகில் எங்கு பாதிப்பு ஏற்பட்டாலும் முதலில் உதவிக்குச் செல்லும் நாடு இந்தியா என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கரின் நவ ராய்ப்பூரில் பிரம்ம குமாரிகள் அமைப்பின் தியான மையமான சாந்தி ஷிகார்-ஐ பிரதமர் நரேந்திர மோடி இன்று திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, "இன்று உலகில் எங்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டாலும், எங்கு ஒரு பேரழிவு ஏற்பட்டாலும் உதவி வழங்க ஒரு நம்பகமான கூட்டாளியாக இந்தியா உள்ளது. இந்தியா எப்போதும் உதவிக்கு முதலில் செல்கிறது.

ஒவ்வொரு உயிரினத்திலும் கடவுளைக் காண்பவர்கள் நாம். நமது பாரம்பரியத்தில், உலகம் செழிக்கட்டும், அனைத்து உயிரினங்களிடையேயும் நல்லெண்ணம் மேலோங்கட்டும் என்ற பிரார்த்தனையுடன்தான் எந்த ஒரு மத நிகழ்வும் முடிவடைகிறது.

மாநிலங்களின் வளர்ச்சியில்தான் இந்தியாவின் வளர்ச்சி இருக்கிறது. இந்தியாவை வளர்ச்சி பெற வைப்பதற்கான பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. வளர்ந்த இந்தியாவை உருவாக்கும் இந்த பயணத்தில் பிரம்ம குமாரிகள் போன்ற அமைப்புகள் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. நான் பல பத்தாண்டுகளாக உங்கள் அனைவருடனும் தொடர்பில் இருக்கிறேன். நான் இங்கு விருந்தினராக வரவில்லை. நான் உங்களில் ஒருவன்.

இன்றைய நாள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இன்று சத்தீஸ்கர் நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைகிறது. ஜார்க்கண்ட், உத்தராகண்ட் மாநிலங்களும் இன்று 25 ஆண்டுகளை நிறைவு செய்கின்றன. இந்த மாநில மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்தார்.

முன்னதாக, நவ ராய்ப்பூரில் உள்ள ஸ்ரீசத்ய சாய் சஞ்சீவனி மருத்துவமனையில் இதய நோய்களால் பாதிக்கப்பட்டு வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்பட்ட 2,500 குழந்தைகளுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். இதில், முன்னாள் இந்திய கிரிக்கெட் கேப்டன் சுனில் கவாஸ்கர் கலந்து கொண்டார்.

## "நக்சல் வன்முறையின் அடையாளமாக இருந்த சத்தீஸ்கர் இன்று செழிப்பின் சின்னம்..."பிரதமர்

மாவோயிஸ்ட் வன்முறையால் பாதிக்கப்பட்ட மாநிலம் என்ற அடையாளத்தில் இருந்து செழிப்பு மற்றும் பாதுகாப்பின் சின்னமாக சத்தீஸ்கர் மாறி இருப்பது ஊக்கமளிப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கரின் புதிய சட்டமன்ற கட்டிடத்தை பிரதமர் மோடி இன்று திறந்துவைத்தார். பின்னர் பேசிய அவர், "சட்டமன்றம் என்பது சட்டங்களை உருவாக்குவதற்கான இடம் மட்டுமல்ல, மாநிலத்தின் விதியை வடிவமைப்பதற்கான துடிப்பான மையம். சட்டமன்றத்தில் இருந்து வெளிப்படும் ஒவ்வொரு சிந்தனையும் சேவை உணர்வையும், வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பையும், இந்தியாவை மிகப் பெரிய உயரத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்கான நம்பிக்கையையும் பிரதிபலிக்க வேண்டும்.

சீர்திருத்தங்களை துரிதப்படுத்தும், மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும், அவர்களின் வாழ்க்கையில் இருந்து அரசாங்கத்தின் தேவையற்ற தலையீட்டை நீக்கும் சட்டங்கள் இங்கு இயற்றப்பட வேண்டும். அரசாங்கமே இல்லை என்ற நிலையோ அல்லது தேவையற்ற தலையீடுகளோ இரண்டுமே கூடாது.

இந்தியா பயங்கரவாதிகளின் முதுகெலும்பை உடைத்துவிட்டது. இப்போது சத்தீஸ்கரும் மாவோயிஸ்ட் வன்முறையில் இருந்து விடுபடுவதை நோக்கி நகர்கிறது. மாவோயிஸ்ட் வன்முறைக்கும், பின்தங்கிய நிலைக்கும் பெயர் பெற்ற மாநிலம் என்ற நிலையில் இருந்து செழிப்பு, பாதுகாப்பு, நிலைத்தன்மை கொண்ட மாநிலம் என்ற நிலையை நோக்கி உத்வேகம் அளிக்கும் பயணத்தை சத்தீஸ்கர் கண்டுள்ளது. மாவோயிஸ்டுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தற்போது வளர்ச்சி அலையும் புன்னகையும் சென்று சேர்ந்துள்ளன. சத்தீஸ்கர் மக்களின் கடின உழைப்பும், அடுத்தடுத்து அமைந்த பாஜக அரசுகளின் தொலைநோக்குத் தலைமையும் இந்த மாற்றத்துக்குக் காரணம்.

இந்தியா ஜனநாயகத்தின் தாய். புனிதமான செங்கோல், நாடாளுமன்றத்தை அலங்கரிக்கிறது. பாரம்பரியத்தையும் வளர்ச்சியையும் ஒன்றாகக் கொண்டு இந்தியா முன்னேறி வருகிறது. அரசாங்கத்தின் ஒவ்வொரு கொள்கை முடிவிலும் இது தெளிவாகத் தெரிகிறது. 2047ம் ஆண்டுக்குள், வளர்ந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை அடைவதில் சத்தீஸ்கர் முக்கிய பங்கு வகிக்கும்" என தெரிவித்தார்.

# மத்தியகிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும்

**சென்னை, நவ.2:**
அடுத்த 24 மணி நேரத்தில் மத்தியகிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இது சம்பந்தமாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் நேற்று நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், கிழக்கு-வடகிழக்கு திசையில் நகர்ந்து, இன்று காலை 05.30 மணி அளவில் மத்தியகிழக்கு மற்றும் அதனை ஒட்டிய வடகிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுகுறைந்து, காலை 08.30 மணி அளவில், அதே பகுதிகளில் நிலவுகிறது.

இது, அடுத்த 24 மணி நேரத்திற்கு, மேலும், கிழக்கு-வடகிழக்கு திசையில், வடகிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் வழியாக, தெற்கு குஜராத் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு மகாராஷ்டிரா கடலோரப்பகுதிகளை நோக்கி நகர்ந்து காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுகுறையக்கூடும்.

தெற்கு மியான்மார் கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் மத்தியகிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும்.

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்று முதல் 7-ந்தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன்காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மத்தியகிழக்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் இன்று மற்றும் நாளை சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# 2026ல் உண்மையான மக்களாட்சியை அமைப்போம்!- விஜய்



**சென்னை,நவ.2:**
தமிழ்நாடு தினத்தையொட்டி தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

தமிழ்நாடு உருவாகக் காரணமான எல்லைப் போராட்டத் தியாகிகளையும் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டக் காரணமானவர்களின் தியாகங்களையும் நினைவுகூர்வோம். அவர்களை எந்நாளும் போற்றுவோம்!

மக்கள் விரோதத் திமுகவிடமிருந்து மக்கள் சக்தியின் துணையோடு தமிழ்நாட்டை மீட்போம்! 2026இல் உண்மையான மக்களாட்சியை அமைப்போம்!

தமிழின் பெருமையும் தமிழ்நாட்டின் புகழும் உலகெங்கும் ஓங்கி ஒலிக்கட்டும்!

இனிய தமிழ்நாடு நாள் நல்வாழ்த்துகள்! என கூறியுள்ளார்.

# ஏகாதசி சிறப்பு வழிபாடு:ஆந்திராவில் கோயில் கூட்ட நெரிசலில் சிக்கி 9 பேர் உயிரிழப்பு



**ஸ்ரீகாகுளம், நவ.2:**
ஸ்ரீகாகுளம் மாவட்டத்தின் காசிபுக்கா நகரில் புதிதாக கட்டப்பட்ட ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி கோயிலில் இன்று ஏகாதசி சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. திருப்பதி பெருமாள் கோயில் வடிவில் கட்டப்பட்டு திறப்பு விழா கண்டு 4 மாதங்களே ஆன இக்கோயில் மினி திருப்பதி என அழைக்கப்படுகிறது.

ஏகாதசியை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் இன்று காலை முதலே இக்கோயிலுக்கு வரத் தொடங்கியுள்ளனர். அதிகபட்சம் 3 ஆயிரம் பக்தர்களை மட்டுமே கையாளும் திறன் கொண்ட இக்கோயிலில் இன்று சுமார் 25,000 பக்தர்கள் வந்ததாகக் கூறப்படுகிறது.

இக்கோயில் தனியாருக்குச் சொந்தமானது. இன்று இவ்வளவு பேர் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பு கோயில் நிர்வாகத்துக்கு இல்லாததால், அவர்கள் காவல்துறை பாதுகாப்பு கோரவில்லை என கூறப்படுகிறது.

எதிர்பாராத விதமாக ஏராளமானோர் கூடிய நிலையில், கூட்ட நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். கூட்ட நெரிசலில் மூச்சு விட முடியாமல் பலர் மயங்கி விழுந்துள்ளனர். இதில், 8 பெண்கள், ஒரு குழந்தை என 9 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து வீடியோ வெளியிட்டுள்ள ஆந்திரப் பிரதேச அறநிலையத்துறை அமைச்சர் அனம் ராமநாராயண ரெட்டி, "காசிபுக்கா நகர் ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி கோயில் அரசின் கட்டுப்பாட்டில்இல்லை. அது தனியாருக்குச் சொந்தமானது. ஹரிமுகுந்த் பாண்டா என்ற நபர் தனது சொந்த நிதியில் 12 ஏக்கர் நிலத்தில் இக்கோயிலை கட்டியுள்ளார்.

இன்று ஏகாதசி என்பதாலும் சனிக்கிழமை என்பதாலும் ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி கோயிலுக்கு வந்துள்ளனர். 2,000 பக்தர்கள் முதல் 3,000 பக்தர்கள் வரை மட்டுமே சமாளிக்கும் திறன் கொண்டது இக்கோயில். ஆனால், சுமார் 25,000 பேர் ஒரே நேரத்தில் கோயிலுக்கு வந்துள்ளனர். ஆனால், அதற்கேற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. அரசு நிர்வாகத்துக்கும் தெரிவிக்கப்படவில்லை. விபத்துக்கு இதுதான் காரணம்.

சம்பவத்தை அடுத்து முதல்வரின் உத்தரவின்பேரில் அமைச்சர்கள் அங்கு விரைந்து வந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். காயமடைந்தவர்கள் அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது" என தெரிவித்துள்ளார்.

விபத்து நிகழ்ந்த கோயில்

இந்த விபத்து குறித்து ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, "ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள காசிபுக்கா வெங்கடேஸ்வரா கோயிலில் கூட்ட நெரிசலில் சிக்கி பக்தர்கள் உயிரிழந்தது மிகவும் வருத்தமளிக்கிறது. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்களுக்கு சிறந்தசிகிச்சை அளிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். சம்பவம் நடந்த இடத்தைப்பார்வையிட்டு நிவாரணப் பணிகளைக் கண்காணிக்குமாறு உள்ளூர் அதிகாரிகளையும், மக்கள் பிரதிநிதிகளையும் கேட்டுக்கொண்டுள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

ஆந்திரப் பிரதேச அமைச்சர் நாரா லோகேஷ் வெளியிட்டுள்ள பதிவில், "காசிபுக்கா வெங்கடேஸ்வரர் கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பல பக்தர்கள் உயிரிழந்துள்ளனர். இது எங்களை ஆழ்ந்த அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்த ஏகாதசி நாளில் எங்களுக்கு ஆழ்ந்த வருத்தம் ஏற்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்ட நெரிசலில் காயமடைந்தவர்களுக்கு அரசு சிறந்த மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறது. தகவல் கிடைத்தவுடன், அதிகாரிகள், மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அச்சன்நாயுடு மற்றும் உள்ளூர் எம்எல்ஏ கவுது ஷிரிஷ் ஆகியோரிடம் பேசினேன். பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உடனடி உதவி வழங்குமாறு நான் அறிவுறுத்தியுள்ளேன்." எனத் தெரிவித்துள்ளார்.

விபத்து குறித்து பிரதமர் மோடி ஆழ்ந்த வேதனை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீகாகுளத்தில் உள்ள வெங்கடேஸ்வர சுவாமி கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசல் குறித்து அறிந்து நான் மிகவும் வேதனையடைந்தேன். தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுடன் எனது எண்ணங்கள் உள்ளன. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். உயிரிழந்தவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து தலா ரூ. 2 லட்சம் நிவாரணம் வழங்கப்படும். காயமடைந்தவர்களுக்கு ரூ. 50,000 வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத், கர்நாடக முதல்வர் சித்தராமையா உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➤ Public Notice ➤ Loss of Share
➤ Legal Notice ➤ Merger
➤ Tender Notice ➤ Acquisition
➤ Society Notice ➤ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

SEND AN EMAIL WITH Hi TO tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY NEWSPAPERS & MAGAZINES

# திருக்குறள் குறள்-427

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார் அஃதறி கல்லா தவர்



அறிவுடையோர் எதிர்காலத்தில் நிகழப்போவதை முன்னே எண்ணி அறியவல்லார், அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவர்.

## சிந்திக்க ஒரு நொடி



உன் வாழ்க்கை பயணத்தில்
உனக்குத் துணை
நீ மட்டுமே...
துன்பத்தை தூ வை
இன்பத்தை
இதயத்தில் வை....
எல்லாம் சரியாக மகிழ்ச்சி
மட்டும் கிடைக்கும்.....

**உஷா முத்துராமன்**

## தியாகராஜ பாகவதரின் 66வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி



மறைந்த பழம்பெரும் நடிகர் தியாகராஜ பாகவதரின் 66வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நாமக்கல் மணிக்கூண்டு அருகில் நேற்று நடந்தது.

## வெளிநாட்டைச் சேர்ந்த சிவனடியார்கள் உழவாரப் பணி



கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு, திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில், வெளிநாட்டைச் சேர்ந்த சிவனடியார்கள் உழவாரப் பணியில் ஈடுபட்டனர்.

## எம்.எஸ்.பாஸ்கர் பேத்தி அகிராவின் முதல் பிறந்தநாள் விழா



பிரபல குணச்சித்திர நடிகர் எம்.எஸ்.பாஸ்கர் பேத்தி அகிராவின் முதல் பிறந்தநாள் விழாவில் குழந்தையை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்தினார்.

## கபாலீசுவரர் திருக்கோயிலில் தொடுதிரை வசதி



சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் பக்தர்கள் அருகிலுள்ள திருக்கோயில்களை அறிந்து கொள்ளும்வகையில் தொடுதிரை வசதியுடன் கூடிய தகவல் பெட்டி செயல்பாட்டை அமைச்சர் சேகர்பாபு நேற்று துவக்கி வைத்தார்.

# ஸ்ரீபேயாழ்வார் திரு அவதார உற்சவம் சாற்று முறை






திருமயிலை தமிழ்த்தலைவன் ஸ்ரீ மாதவப் பெருமாள் திருக்கோவில் ஸ்ரீபேயாழ்வார் திரு அவதார உற்சவம் சாற்று முறை 10 ம்நாள் 1-11-25 திருமஞ்சனம் திருப்பாவை திருமொழி சேவை சாற்று முறை நடந்தது.

## கல்லூரி கலைத் திருவிழா வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுச் சான்று வழங்கும் விழா



**புதுக்கோட்டை,நவ.02:** புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி தன்னாட்சி தமிழ்நாடு அரசால் கொண்டுவரப்பட்ட கல்லூரி கலை திருவிழா 2025 மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் 33 போட்டிகள் தனி குழு அளவில் மாணவர்கள் பங்கேற்று முதல் மூன்று நிலைகளை பெற்றனர் மாணவர்களின் தனித் திறமையை வெளிக்காட்டும் நல்லதொரு வாய்ப்பை வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு நன்றி கூறப்பட்டது.

இவ்விழாவில் பரிசு பெற்ற மாணவர்களை பாராட்டியும் பரிசு வழங்கி தலைமையேற்றார் கல்லூரியின் முதல்வர் முனைவர் புவனேஸ்வரி அவர்கள் மற்றும் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் சி .சேதுராமன் ஆங்கிலத் துறைத் தலைவர் முனைவர் சு .கணேசன் இயற்பியல் துறை தலைவர் மற்றும் தேர்வு நெறியாளர் முனைவர் ஆதவன் மற்றும் வரலாற்றுத் துறை இணைப் பேராசிரியர் முனைவர் சகாதேவன் முனைவர் ஜீவானந்தம் பேராசிரியர் பாலமுருகன் மற்றும் வெற்றி பெற்ற மாணவர்கள் கலந்து கொண்டு வெற்றிச் சான்றுகளை பெற்று மகிழ்ந்தனர்.

## கவிதை, கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு



விருதுநகர் மாவட்டத்தில் தமிழ்வளர்ச்சித் துறை சார்பில் நடந்த கவிதை, கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கலெக்டர் சுகபத்ரா பரிசு வழங்கி பாராட்டினார்.

## இர்ாஜ அலங்காரத்தில் மூல மூர்த்திகள்



**வந்தவாசி, அக் 02:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீபாண்டுரங்கன் ருக்மாயி திருக்கோயிலில் நேற்று மூல மூர்த்திகளுக்கு விசேஷ பூஜைகள் நடந்தேறியது. மூல மூர்த்திகள் பட்டாடை அணிந்து கொண்டு கம்பீரமான தோற்றத்துடன் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.

இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப் பட்டது.

## தருமபுரியில் நடந்த மாரத்தான் போட்டி



அண்ணா பிறந்த நாளையொட்டி தருமபுரியில் நடந்த மாரத்தான் போட்டியை கலெக்டர் சதீஸ் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## தியாகிகள் நினைவிடத்தில் அமைச்சர் மனோதங்கராஜ் மலர் அஞ்சலி



குமரி விடுதலை நாளான நேற்று புதுக்கடை தியாகிகள் நினைவிடத்தில் அமைச்சர் மனோதங்கராஜ் மலர் அஞ்சலி செலுத்தி, தியாகிகளின் நினைவாக மரக்கன்றுகளை நடும் முகாமை துவக்கி வைத்தார்.

## மார்ஷல் நேசமணி திருவுருவ சிலைக்கு மாலை



தமிழகத்துடன் குமரி மாவட்டத்தை நினைவு கூறும் வகையில், நாகர்கோவில் மார்ஷல் நேசமணி மணிமண்டபத்திலுள்ளஅவரது திருவுருவ சிலைக்கு அமைச்சர் மனோதங்கரஜ மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். கலெக்டர் அழகுமீனா, உணவு ஆணையத் தலைவர் சுரேஷ்ராஜன்,விஜய் வசந்த் எம்.பி, உள்பட பலர்உடன் உள்ளனர்.

## நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பேரளத்தில் இலவச கண் பரிசோதனை முகாம்

**இம்முகாமினை முன்னாள் அமைச்சர் இரா.காமராஜ் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்.**



**கொரடாச்சேரி, நவ.2:** திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அருகே பேரளம் பகுதியில் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது.

அரவிந்த் கண் மருத்துவமனை மற்றும் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாமினை திருவாரூர் அதிமுக மாவட்டச் செயலாளரான முன்னாள் அமைச்சர் ஆர். காமராஜ் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்.

இந்த இலவச கண் பரிசோதனை முகாமில், கண் புரை, கண்ணீர் அழுத்த நோய், குழந்தைகளின் கண் நோய், கிட்ட பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து உள்ளிட்ட நோய்கள் முழுமையாக பரிசோதனை செய்யப்பட்டது.

## வண்டறந்தாங்கல் ஊராட்சி சொரக்கால்பட்டில் உள்ளாட்சி தின கிராம சபை கூட்டம்!




**வேலூர், நவ. 2:** வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், வண்டறந்தாங்கல் ஊராட்சி, சொரக்கால்பட்டு வஜ்ரவேல் முருகன் கோயில் மலை அடிவார பகுதியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடந்தது. ஊராட்சி மன்ற தலைவர் பி.ராகேஷ் தலைமை வகித்தார். ஊராட்சி செயலர் இ. சுரேஷ் வரவேற்று அறிக்கை வாசித்தார். துணை தலைவர் முத்துலட்சுமி குமார், ஒன்றிய குழு உறுப்பினர் வி. சாந்தி வீராசாமி, ஊராட்சி வார்டு உறுப்பினர் இ. அல்போன்ஸாகண்ணன், ஜே. கே. குமரேசன், ஜே. தீபலட்சுமி விஸ்வநாதன், சூர்பாராஜேஷ்குமார், கோபி, அன்பு, தனலட்சுமி லட்சுமணன், பிரிஸ்கில்லா ஜெயகுமார், கணினி ஆப்ரேட்டர் நந்தினி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். இருபது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# வங்கிக் கணக்குகளில் நாமினி விவரம் கட்டாயம் அமல்

**சென்னை, நவ.2:**

புதிதாக வங்கிக் கணக்கு தொடங்கு பவர்களிடம் இருந்து வங்கிகள் கட்டாயம் நாமினி பெயரையும் பெற வேண்டும் என்கிற விதிமுறையைக் கொண்டு வந்துள்ளது இந்திய ரிசர்வ் வங்கி. இந்த உத்தரவு நவம்பர் 1 முதல் நாடு முழுவதும் அமலுக்கு வருகிறது. வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் திடீரென்று இறந்துவிட்டால், அந்தக் கணக்கில் இருக்கும் பணத்தை யாரிடம் வழங்குவது என்பதில் எழும் குழப்பங்களை யும் சிக்கல்களையும் சரிசெய்யவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு டெபாசிட் கணக்குகள் மற்றும் லாக்கர்களுக்கும் பொருந்தும். வாடிக்கையாளர் நாமினியை நியமிக்க விருப்பம் காட்டவில்லை என்றால், அந்த நபரிடம் இருந்து வங்கிகள் எழுத்துப்பூர்வ கடிதத்தைப் பெற்று கொள்ள வேண்டும். அதையும் வழங்க மறுத்தால், அதை வங்கிக் கணக்கு திறக்கும் ஆவணங்களில் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இந்தப் புதிய உத்தரவின்படி, வாடிக்கையாளர்கள் நான்கு நாமினிகள் வரை நியமித்துக் கொள்ளலாம். முதலாமவர் இறந்துபோகும் பட்சத்தில், அடுத்தவருக்கு வழங்கப்படும் என்ற வரிசை முறை பின்பற்றப்படும். ஏற்கனவே வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் கேஒய்சி அப்டேட்டின் போது நாமினிகளை நியமித்துக் கொள்வது நல்லது என வங்கி அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

# கரூர் கூட்ட நெரிசல் வழக்கு 3டி லேசர் ஸ்கேனர் கருவியுடன் சிபிஐ ஆய்வு

**கரூர், நவ.2:**

கரூரில் தவெக பிரச்சார கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான வழக்கை சிபிஐ விசாரிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, ஐபிஎஸ் அதிகாரி பிரவீன் குமார் தலைமையிலான சிபிஐ அதிகாரிகள் குழுவினர் வெள்ளிக்கிழமை வேலுச்சாமிபுரத்தில் ஆய்வு மேற்கொண்டனர். 3டி லேசர் ஸ்கேனர் கருவியுடன் சிபிஐ அதிகாரிகள் சம்பவ இடத்தில் ஆய்வு மேற் கொண்டு வருகின்றனர். நெரிசல் ஏற்பட்ட இடத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த காவல்துறையினரிடம் சிபிஐ அதிகாரிகள் விளக்கம் கேட்டனர். வேலுச்சாமிபுரம் பொதுமக்கள் மற்றும் வணி கர்களிடம் சாட்சியங்கள் பெற சிபிஐ சம்மன் அனுப்பி யதை அடுத்து 4 பேர் விசா ரணைக்கு ஆஜராகியுள்ள னர். கடந்த அக்.16 ஆம் தேதி கரூருக்கு வந்த சிபிஐ அதி காரிகள், 1,316 பக்கங்கள் கொண்ட ஆவணங்களை சிறப்பு புலனாய்வுக் குழுவின ரிடம் இருந்து பெற்றனர். தீபாவளி விடுமுறை க்குப் பின்னர் வியாழக்கிழ மை மீண்டும் கரூருக்கு வந்த அதிகாரிகள், இரண்டாம் கட்ட விசாரணையை மேற் கொண்டு வருகின்றனர்.

# மீண்டும் தமிழகம் வந்த போர்டு நிறுவனம்

**சென்னை, நவ.2:**

அமெ ரிக்க வாகன தயாரிப்பு நிறுவனமான ஃபோர்டு, தமிழ்நாட்டில் மீண்டும் உற்பத்தி நடவடிக்கை களைத் தொடங்குவ தற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் வெள்ளிக் கிழமை (அக்.31) மேற்கொள்ளப்பட்டது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலை யில் தலைமைச் செய லகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகரில் ரூ. 3,250 கோடி முத லீட்டில் அடுத்த தலை முறை வாகன இன்ஜின் உற்பத்தி செய்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் 600 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

# சிபிஎஸ்இ தேர்வு அட்டவணை வெளியீடு

**சென்னை, நவ.2:**

மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE), 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான அட்டவணையை வெளி யிட்டுள்ளது. காலை 10.30 மணி முதல் மதியம் 1.30 வரை தேர்வுகள் நடைபெற உள்ளன. 2026 பிப்ரவரி 17 அன்று தொடங்கும் தேர்வு கள், 10-ஆம் வகுப்புக்கு மார்ச் 10 அன்றும், 12ஆம் வகுப்புக்கு ஏப்ரல் 9 அன்றும் முடிவடையும். தேர்வு அட்டவணையை HTTP://CBSE.GOV.IN இணையதளத்தில் பதி விறக்கம் செய்யலாம் என சிபிஎஸ்இ தெரிவித் துள்ளது.

# ‘கார்பன் நீக்கத் திட்டம் புதிய சகாப்தத்துக்கு வழிவகுக்கும் பொருளாதாரக் கொள்கை’: தங்கம் தென்னரசு




**சென்னை, நவ.2:**

தமிழக அரசு மாவட்ட அளவிலான கார்பன் நீக்கத் திட்டங்களுடன் மாநில அளவிலான காலநிலை நடவடிக்கை கண்காணிப்பு திட்டத்தை மற்றொரு முன்னோடி முயற்சியாக அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடுபசுமைகாலநிலை நிறுவனம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனங்கள் துறை மற்றும் வசுதா அறக்கட்டளையுடன் இணைந்து உருவாக்க ப்பட்டுள்ள இந்த முயற்சி யானது, தரவு சார்ந்த, சமூகத்தால் வழிநடத்தப்படும் காலநிலை சவால்களுக்கான தீர்வுகளை வலுப்படுத்தி காலநிலை நிர்வாகத்தில் தமிழ்நாட்டை முன்னணியில் நிலைநிறுத்துகிறது. இந்த திட்டத்தை நிதி, மற்றும் சுற்றுச்சூழல்காலநிலைமாற்ற அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்தார். இது காலநிலைக்கொள்கைமட்டும் அல்ல;ஒருபுதியசகாப்தத்திற்கு வழிவகுக்கும் பொருளாதாரக் கொள்கையாகும். இந்த கொள்கையானது, ஆயிரக்கணக்கான பசுமை வேலைகளை உருவாக்குவது மட்டுமின்றி மீள்தன்மை கொண்ட சமூகத்தையும் நமது தொழில்களையும் வலுப்படுத்துகிறது. மேலும், நமது இயற்கை பாரம்பரியத்தையும் பாதுகாக்கிறது. இதன்மூலம், கார்பன் நிகர பூஜ்ஜிய நிலையை எட்டுவதற்கு இந்தியாநாட்டினைதமிழ்நாடு இட்டு செல்லும் என்று அவர் நம்பிக்கையை விதைத்தார்.

மேலும் இந்த விழாவில், காலநிலை மாற்ற ஆட்சி மாற்றக்குழு உறுப்பினர்கள் மான்டெக் சிங் அலுவாலியா, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, மாசு கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் ஜெயந்தி முரளி, வசுதா அறக்கட்டளையின் தலைமை நிர்வாக அலுவலர் ஸ்ரீனிவாஸ் கிருஷ்ணசாமி, போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் எஸ்.ஜே.சிரு, நகராட்சி நிர்வாகத்துறை முதன்மைச் செயலாளர் டி. கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த திட்டத்திற்கு முதற்கட்டமாக, நீலகிரி, விருதுநகர், கோயம்புத்தூர் மற்றும் ராமநாதபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்நான்கு மாவட்டங்களும், தமிழகத்தின் மொத்த மாநில உள்நாட்டுஉற்பத்தியில் (2022 23) 10.38% பங்களிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தமாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட ஆய்வுகள், இயற்கை எரிசக்தி உபயோகித்தல் மற்றும் பயண முறையில் மாற்றங்களை செயல்படுத்துவதன் மூலமாகவும், தொழில்துறை செயல்திறன் மற்றும் அவற்றுக்கான இயற்கை சார்ந்த தீர்வுகள் ஆகிய செயல்பாடுகளின்மூலம் 2050ம் ஆண்டுக்குள், திட்டமிடப்பட்ட கார்பன் உமிழ்வுகளில் 92% வரை குறைக்கலாம் என்று தெரிவிக்கின்றன. மேலும், இந்த மாவட்ட ங்களில், வன மறுசீரமைப்பு, வேளாண்காடுகள், ஈரநிலப் பாதுகாப்பு மற்றும் கடலோர சுற்றுச்சூழல் அமைப்பை மறுசீரமைப்பதன் மூலம் 2050 ஆம் ஆண்டுக்குள் 2.97 மில்லியன் டன் அளவு கரியமிலவாயுவை நிகரான உமிழ்வுகளைப்மட்டுப்படுத்த இயலும். தமிழ்நாடுகாலநிலை நடவடிக்கை கண்காணிப்பு என்பது உமிழ்வுகள், எரிசக்தி அமைப்புகள், காலநிலை பாதிப்புகள், நில பயன்பாட்டில் மாற்றம் மற்றும் மீள்தன்மை நடவடிக்கைகள் முழுவதும் காலநிலை தரவை ஒருங்கிணைக்கும் ஒரு மின் நுண்ணறிவுத் தளமாகும்.

இந்த தளம் ஆதார அடிப்படையிலானதிட்டமிடல், நிகழ்நேரகண்காணிப்புமற்றும் வெளிப்படையானமுன்னேற்ற அறிக்கை ஆகியவற்றைச் செயல்படுத்துவதுமட்டுமின்றி, நிகர பூஜ்ஜியம் மற்றும் மீள்தன்மைகொண்டவளர்ச்சி நோக்கிய மாநிலத்தின் பயணத்தை ஆதரிக்கிறது.

# டெங்கு, சிக்கன் குனியா நோய்கள் குறைந்துள்ளது சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் தகவல்

**சென்னை, நவ.2:**

வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ளவும், மழைக்கால நோய்கள் பரவாமல் தடுக்கவும் சுகாதாரத்துறை சார்பில் மேற் கொள்ளப்பட்டு வரும் தீவிர நடவடிக்கைகள் குறித்து சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை யில் வெள்ளியன்று (அக்.31) ஆலோசனை நடத்தினார்.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள சுகா தாரத் துறை இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் கல்லூரி முதல்வர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வுக்கூட்டம் நடத்திய பின்னர் செய்தி யாளர்களிடம் அவர் கூறியதாவது:-

இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை தொடங்கி 15 நாட்கள் ஆகியுள்ள நிலையில், சராசரியாகப் பெய்ய வேண்டிய 86.7 செ.மீ மழையில், இதுவரை 24.9 செ.மீ மழை மட்டுமே பதிவாகியுள்ளது. இருப்பினும், சுகாதாரத்துறை முழு வீச்சில் தயாராக உள்ளது.

கடந்த 15 நாட்களில் மட்டும் தமிழ்நாடு முழுவதும் 16,648 சிறப்பு மழைக்கால மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 6 லட்சத்து 78 ஆயிரத்து 34 பேர் மருத்துவப் பயன் பெற்றுள்ளனர். இந்த முகாம்கள் மூலம் 5,829 காய்ச்சல் பாதிப்புகளும், 51,107 இருமல், சளி பாதிப்புகளும் கண்டறியப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு உள்ளது. ஒரு தெருவில் இரண்டு அல்லது மூன்று பேருக்கு காய்ச்சல் பாதிப்புகள் கண்டறியப்பட்டால் உடனடியாக அங்கு சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. டெங்கு காய்ச்சலைப் பொறுத்தவரை, இந்த ஆண்டு இதுவரை 18,725 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த உயிரிழப்புகளும் இணை நோய்கள் மற்றும் தாமதமாக மருத்துவமனையை அணுகு வது போன்ற காரணங்களால் நிகழ்ந்துள்ளன. உயிரிழப்பு இல்லாத நிலையை உரு வாக்குவதே அரசின் நோக்கம். கடந்த காலங்களில், 2012-ல் 66 பேரும், 2017-ல் 65 பேரும் டெங்குவால் உயிரிழந்தனர்.

ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தடுப்பு நட வடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டதால் உயிரிழப்புகள் ஒற்றை இலக்கத்தில் கட்டுப் படுத்தப்பட்டுள்ளன. டெங்குவைக் கண்டறிய மாநிலம் முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் 4,755 ஆய்வகங்கள் செயல்படுகின்றன.

. இவ்வாறு அவர் கூறினார்.

# சீனாவில் பேட்மிண்டன் ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற எஸ்.ஆர்.தீக்ஷாவுக்கு ரூ.5 லட்சம் ஊக்கத்தொகை: உதயநிதி வழங்கினார்

**சென்னை, நவ.2:**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சீனாவில் நடைபெற்ற பேட்மிண்டன் ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் 2025 போட்டியில், இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ள தமிழ்நாட்டின் வீராங்கனை எஸ்.ஆர்.தீக்ஷாவுக்கு 5 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலையை வழங்கினார்.




தமிழ்நாட்டில் விளையாட்டு உட்கட்டமைப்புகளை மேம்படுத்து தல், சர்வதேச அளவிலான போட்டிகளை நடத்துவது, விளையாட்டு வீரர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதால் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் தேசிய, சர்வதேச விளையாட்டு போட்டிகளில் தொடர்ந்து பதக்கங்களை குவித்து முதலமைச்சரின் கனவை நிறைவேற்றி வருகின்றனர். கடந்த ஒருவார காலமாக, செஸ் போட்டியில் கிராண்ட் மாஸ்டர், பஹ்ரைனில் நடைபெற்ற மூன்றாவது ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில், கபடி, தடகளப் போட்டிகள், பளுதூக்கும் போட்டி, நான்காவது தெற்காசிய சீனியர் தடகளப் போட்டிகள், ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பாரா பேட்மிண்டன் போட்டி என தொடர்ந்து, தினந்தோறும் தமிழ்நாட்டு வீரர், வீராங்கனைகள் பதக்கங்களை குவித்து வருகின்றனர்.

அதனடிப்படையில், 2025 அக்டோபர் 21 முதல் 26 வரை சீனாவில் நடைபெற்ற பேட்மிண்டன் ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் 2025 போட்டியில், ஒற்றையர் பிரிவில் இந்தியாவிற்கான முதல் தங்கப் பதக்கத்தை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சாம்பியன்ஸ் மேம்பாட்டுத் திட்ட திருவள்ளூர் மாவட்ட வீராங்கனை எஸ்.ஆர். தீக்ஷாவுக்கு துணை முதலமைச்சர் 5 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலையை வழங்கினார்.

இந்நிகழ்வில், விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பயிற்சியாளர், பெற்றோர் மற்றும் பலர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

# இதய ஆரோக்கியத்தை காக்கும் அஞ்சறைப் பெட்டி!

இதய நோய் வராமல் ஆரோக்கியமாக வாழ்வதற்கு நாம் எடுத்துக் கொள்ளும் உணவுகளில் கவனம் மிகவும் அவசியம். பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்த்து ஆரோக்கியமான உணவு எடுத்துக் கொள்வதும், உடற்பயிற்சிகள் செய்வதும், உயர் ரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்ட்ரால் அளவுகளை கட்டுக்குள் வைப்பது போன்றவையும் அவசியம். மேலும் போதுமான அளவு தூக்கம் மற்றும் மன அழுத்தத்தை குறைப்பதும் இதய ஆரோக்கியத்திற்கு முக்கியமாகும்.

1. பூண்டு

பூண்டு இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துகிறது. கொலஸ்ட்ராலைக் குறைக்கிறது மற்றும் தமனிகளில் பிளேக் உருவாவதைத் தடுக்கிறது. இது அழற்சி எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளது. ரத்த நாளங்களை விரிவுபடுத்துவதன் மூலம் இதயத்தை பாதுகாக்கிறது. பூண்டின் ‘அல்லிசின்’ எனப்படும் கலவை இதய நன்மைகளுக்கு முக்கிய காரணமாகும். பச்சை பூண்டை தினமும் சாப்பிடுவது நல்லது. பூண்டுடன் தேன் சேர்த்து சாப்பிடுவது இதய ஆரோக்கியத்திற்கு நன்மை தரும்.

2. இஞ்சி

இஞ்சி ரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவைக் குறைத்து இதய ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது. ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தவும், ரத்த ஓட்டத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. இதில் உள்ள அழற்சி எதிர்ப்பு பண்புகள் இதய ஆரோக்கியத்திற்கு நன்மை தரும். ரத்த உறைவைத் தடுப்பதுடன், ரத்தக் கட்டிகளை தடுக்கும் பண்புகளும் கொண்டுள்ளது.

3. மிளகு

மிளகுக்கு ‘கருப்பு தங்கம்’ என்றொரு பெயர் உண்டு. எண்ணற்ற சத்துக்களைக் கொண்ட மிளகில் ‘பைப்பரின்’(Pipirine) என்ற சத்தே மிளகின் வாசனைக்குக்காரணம். மிளகு நச்சுநீக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. இது கெட்ட கொழுப்பான LDLஐக் குறைக்கவும், உயர் ரத்த அழுத்தத்தை தடுக்கவும் உதவுகிறது. மிளகில் உள்ள அழற்சி எதிர்ப்பு பண்புகள் இதய நோய்களுக்கு எதிராக பாதுகாக்க உதவும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

4. மஞ்சள் தூள்

மஞ்சள் எல்.டி.எல் என்ற கெட்ட கொழுப்பைக் குறைக்கவும், எச்.டி.எல் என்ற நல்ல கொழுப்பை அதிகரிக்கவும் உதவுகின்றது. இது ஒரு சக்தி வாய்ந்த ஆன்ட்டி ஆக்சிடென்ட் ஆகும். இது உடலில் தீங்கு விளைவிக்கும் ஃப்ரீ ரேடிக்கல்களின் விளைவுகளை நடுநிலையாக்கி இதய ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது. மஞ்சளில் உள்ள குர்குமின் ரத்தக் குழாய்களின் உள் புறணியான எண்டோதெலியத்தின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது. ரத்தக் கட்டிகள் உருவாவதை குறைக்கிறது மற்றும் ரத்தக் குழாய்களின் ஆரோக்கியத்தை பராமரிக்கிறது.

5. தனியா

தனியா (கொத்தமல்லி விதை) இதய ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. ஏனெனில் இதில் மெக்னீசியம், கால்சியம், பொட்டாசியம், விட்டமின் ஏ, பி, சி மற்றும் கே போன்ற பல ஊட்டச்சத்துக்களைக் கொண்டுள்ளது. இந்த ஊட்டச்சத்துக்கள் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகின்றன.

6. 6. லவங்க பட்டை

லவங்கப்பட்டை அதன் ஆன்ட்டி ஆக்சிடென்ட்கள் மற்றும் பிற நன்மை பயக்கும் கலவைகள் காரணமாக இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகிறது. இது ரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தவும், இதய நோய்க்கான அபாயத்தைக் குறைக்கவும், அழற்சியை குறைக்கவும் உதவுகிறது. சில ஆராய்ச்சிகள் லவங்கப்பட்டை பெருந்தமனி தடிப்புத் தோலழற்சியிலிருந்து இதயத்தை பாதுகாக்கும் என்பதையும் தெரிவிக்கின்றன.

# ‘கெட் ஃபிட் சென்னை’ நடைப்பயணம், மிதிவண்டி பயணத்தில் பங்கேற்றவர்களுக்கு பதக்கம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்

**சென்னை, நவ.2:**

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை மாநகர மக்களின் உடல் நலம் பேணும் வகையில் நடைபெற்ற ‘கெட் ஃபிட் சென்னை’ (Get Fit Chennai) நடைப்பயணம் (வாக்காத்தான்) மற்றும் மிதிவண்டி பயணத்தில் (சைக்ளோதான்) கலந்து கொண்டவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார்.



சென்னை மாநகராட்சியின் சார்பில், தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் இணைந்து இன்று (1ந் தேதி) காலை வேளச்சேரிதரமணி எம்.ஆர்.டி.எஸ் சாலையில் நடைபயணம் மற்றும் மிதிவண்டி பயணம் நடைபெற்றது.

பெருங்குடி ரயில்வே சாலையில் வேளச்சேரி - தாம்பரம் சாலை முதல் எம்.ஜி.ஆர் சாலை வரையில் சென்னை மாநகராட்சியின் சார்பில், ரூ.15.15 கோடி மதிப்பீட்டில் 3.40 கிலோமீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்டுள்ள சாலை மற்றும் சாலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மேம்பாட்டுப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

நகர மக்களிடையே அதிகாலையில் எழுந்து நடைபயிற்சி மேற்கொள்ளுதல் மற்றும் மிதிவண்டி ஓட்டுதல் உள்ளிட்ட உடற்பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பழக்கத்தை ஊக்குவித்து “ஆரோக்கியமான சென்னையை” உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வானது, 3 கிலோ மீட்டர் நடைபயணமாக வேளச்சேரி ரெயில் இணைப்புச் சாலை -சென்னை சில்க்ஸ் அருகில் தொடங்கி பெருங்குடி பேருந்து நிறுத்தம் வழியாக மீண்டும் தொடக்க இடத்தை வந்தடைந்தது. மேலும், 6 கிலோமீட்டர் மிதிவண்டி பயணமானது வேளச்சேரி இரயில் இணைப்புச் சாலை- சென்னை சில்க்ஸ் அருகில் தொடங்கி டாக்டர் அம்பேத்கர் சட்டக்கல்லூரி வழியாக மீண்டும் தொடக்க இடத்தை வந்தடைந்தது,

இதில் இளைஞர்கள், மாணவர்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்குபெற்றனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட பங்கேற்பாளர்களுக்கு டி-ஷர்ட், சான்றிதழ், பதக்கங்கள் மற்றும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டது. மக்களின் நலன் காக்கும் ‘கெட் ஃபிட் சென்னை’ நிகழ்வானது சென்னையில் தொடர்ந்து நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், மண்டலக்குழுத் தலைவர்கள் ஆர்.துரைராஜ் (அடையாறு), எஸ்.வி.ரவிச்சந்திரன் (பெருங்குடி), சைக்கிளிங் அசோசியேசன் தலைவர் சுதாகர், மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

# ட்ரோன் மூலம் பூச்சி மருந்து தெளிக்க பழநி விவசாயிகள் ஆர்வம்!

**பழநி, நவ.2:**

பழநி பகுதியில் ஆளில்லா விமானம் எனப்படும் ‘ட்ரோன்’களை பயன்படுத்தி வயல்களில் பூச்சி மருந்து தெளிக்க விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். அதனால் ட்ரோன்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவமழை தொடங்கி உள்ளதால், பழநியில் மழையை எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகள் தற்போது ஆர்வத்துடன் விவசாய பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். தற்போது நெல், மக்காச்சோளம் உள்ளிட்ட விதைப்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. வெளிநாடுகளில் ஆளில்லா விமானம் எனப்படும் ‘ட்ரோன்’ மூலம் உரம் மற்றும் பூச்சி மருந்துகளை வயல்வெளியில் தெளிக்கின்றனர்.

இதேபோல், தற்போது பழநி விவ சாயிகளும் ட்ரோன் மூலம் பயிர்களுக்கு மருந்து தெளிக்க ஆர்வம் காட்டுகின்றனர். இவர்களுக்காக, பழநியைச் சுற்றியுள்ள கிராமங்களில் ட்ரோன்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. இரண்டு, மூன்று ஆட்கள் சேர்ந்து பல மணி நேரம் செய்யக்கூடிய வேலையை 15 நிமிடங்களில் செய்து முடிப்பதால் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். அதனால், தற்போது ட்ரோன்களுக்கு கடும் கிராக்கி எற்பட்டுள்ளது.

இதுகுறித்து ‘ட்ரோன்’ ஆபரேட்டர் அருண் கூறியதாவது: ட்ரோனை பயன்படுத்தி தினமும் 4 முதல் 5 விவசாயிகளின் தோட்டங்களில் மருந்து தெளித்து வருகிறேன். ஒரு கேன் (10 லிட்டர்) மருந்து தெளிக்க வாடகை ரூ.500 . ஒரு ஏக்கரில் 10 முதல் 15 நிமிடங்களில் ட்ரோன் மூலம் மருந்து தெளிக்கலாம். அதனால் ட்ரோன்களுக்கு மவுசு அதிகரித்துள்ளது, என்றார்.

இதுகுறித்து கணக்கன்பட்டி விவசாயி அப்பாசாமி துரை கூறியதாவது:விவசாயதொழிலாளர்கள் பற்றாக்குறையால் குறித்த நேரத்தில் உரம் மற்றும் மருந்து தெளிக்க முடியாத நிலை உள்ளது. அதனை, ட்ரோன் மூலம் பூர்த்தி செய்ய முடிகிறது. ட்ரோன் மூலம் பயிர்களின் மேல் சரியான அளவு சீராக மருந்து தெளிக்கப்படுவதால் பயிர்களின் வளர்ச்சி நன்றாக இருக்கிறது.

ட்ரோன் மூலம் மருந்து தெளிப்பதால் நாள் முழுவதும் செய்ய வேண்டிய வேலை, ஒரு மணி நேரத்துக்குள் முடிந்து விடுகிறது. ட்ரோன் தொழில்நுட்பத்தால் நேரமும், பணமும் மிச்சமாகிறது. விவசாயிகள் பலரும் ட்ரோனை பயன்படுத்தி மருந்து தெளிக்க தொடங்கி உள்ளனர். அதனால், இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு, முன்பதிவு செய்தால் மட்டுமே ட்ரோன் கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது, என்றார்.

# ரூ.1248 கோடியில் 10 சாலைகள், 2 சாலை மேம்பாலங்கள்: முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்




**சென்னை, நவ.2:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறை சார்பில் ஈரோடு, திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவள்ளூர், திருநெல்வேலி அரியலூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 1177 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சாலைப்பணிகள் மற்றும் வேலூர் மாவட்டத்தில் 71 கோடியே 9 லட்சம் ரூபாய் செலவில் இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள இரண்டு சாலை மேம்பாலங்கள் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

ஈரோடு மாவட்டத்தில் 272 கோடியே 53 லட்சம் ரூபாய் செலவில் 30.60 கி.மீ நீளத்திற்கு நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்ட கோபி ஈரோடு சாலை;

மயிலாடுதுறை, திருவாரூர் மாவட்டங்களில் 221 கோடியே 4 லட்சம் ரூபாய் செலவில் 10 மீட்டர் அகல இருவழிச்சாலையாக, 16.425 கி.மீ நீளத்திற்கு தரம் உயர்த்தப்பட்ட மயிலாடுதுறை திருவாரூர் சாலை;

4 வழிச்சாலை

திருவள்ளூர் மாவட்டத்தில் 111 கோடி ரூபாய் செலவில் 11.40 கி.மீ நீளத்திற்கு இரு வழிப் பாதையிலிருந்து நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட கொரட்டூர் தின்னனூர் பெரியபாளையம் சாலை மற்றும் 82 கோடி ரூபாய் செலவில் 9.20 கி.மீ நீளத்திற்கு இரு வழிச்சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட திருவள்ளூர் அரக்கோணம் சாலை;

திருநெல்வேலி மாவட்டத்தில் 65 கோடியே 99 லட்சம் ரூபாய் செலவில் அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை;

அரியலூர் மாவட்டத்தில் 60 கோடி ரூபாய் செலவில் (கி.மீ 6/8-14/8) 8.0 கி.மீ நீளத்திற்கும், 62 கோடி ரூபாய் செலவில் 6.20 கி.மீ நீளத்திற்கும் மற்றும் 63 கோடி ரூபாய் செலவில் 6.60 கி.மீ நீளத்திற்கும் இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட விருத்தாசலம் ஜெயங்கொண்டம் மதனத்தூர் சாலை;

வேலூர் மாவட்டத்தில் மேலாலத்தூர் வளத்தூர் இரயில் நிலையங்களுக்கிடையே கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம்;

லட்சுமி அம்மாள்புரம் நாவிதம்பட்டி சாலையில் மேல்பட்டி வளத்தூர் இரயில் நிலையங்களுக்கிடையே 35 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம் உட்பட மொத்தம் 1248 கோடியே 24 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 10 சாலைகள் மற்றும் இரு சாலை மேம்பாலங்களை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எ.வ.வேலு, சு. முத்துசாமி, எஸ்.எம். நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 10 லட்சம் மாணவர்களுக்கு இலவச ‘லேப்-டாப்’கள் வழங்க தலா ரூ.25 ஆயிரம் விலையில் வாங்க முதல்வர் ஒப்புதல்

**சென்னை, நவ.2:**

கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லாமல் வழங்கும் திட்டத்திற்காக 10 லட்சம் லேப்-டாப்கள் தலா ரூ.25 ஆயிரம் என்ற விலையில் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புதலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கி உள்ளார்.

தமிழகத்தில் கல்லூரி மாணவர்களுக்கு 2 ஆண்டுகளில் 20 லட்சம் லேப்-டாப் விலையில்லாமல் வழங்கப்படும் என்று கடந்த சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடரில் தமிழக அரசு அறிவித்தது.

இந்த திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது நேரடி கண்காணிப்பில் செயல்படுத்தி வருகிறார்.

அவர் இந்த லேப்-டாப் தரமானதாக இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளதால் 8 ஜிபி ராம், 256 ஜிபி எஸ்.எஸ்.டி. ஹார்டு டிஸ்க், 14 அல்லது 15.6 இன்ச் திரை ஆகிய செயல் திறன் கொண்ட வகை லேப்-டாப் வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. அதற்கேற்றபடி முதல் கட்டமாக இந்த கல்வியாண்டுக்குள் 10 லட்சம் லேப்-டாப் வழங்க தமிழக அரசால் உலகளாவிய டெண்டர் கோரப்பட்டது.



அதற்காக எச்.பி, ஏசர், டெல் ஆகிய 3 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டன. இந்த நிறுவனங்கள் தாங்கள் ஒப்பந்தத்தில் கூறியிருந்தபடி அதன் மாதிரிகளை தயாரித்து நேற்று சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சரிடம் காண்பித்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மாணவர்கள் எளிதாக பயன்படுத்தும் வகையில் எளிமையாக, அழகாக இருந்த லேப்-டாப்களை தேர்வு செய்தார். அதனைத்தொடர்ந்து அந்த நிறுவனங்கள், லேப்-டாப்களை தயாரிக்கும் பணியில் ஈடுபட உள்ளன. முதல் கட்டமாக 1லட்சம் லேப்டாப்கள் தயாரிக்கப் பட்டவுடன் மாணவர்களுக்கு வழங்கும் பணி தொங்கும்.

அனேகமாக ஜனவரி மாதத்தில் இந்த திட்டத்தினை செயல்படுத்திட தமிழக அரசு ஆர்வமாக உள்ளது. அதன்படி படிப்படியாக 10 லட்சம் லேப்டாப்கள் மார்ச் மாதத்திற்குள் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு விடும் என்று தெரிகிறது. தமிழக அரசு தேர்வு செய்துள்ள இந்த லேப்-டாப்கள் மார்க்கெட்டில் ரூ.40 முதல் ரூ.45 ஆயிரம் வரை விற்கப்படுகிறது. ஆனால் தமிழக அரசு அதனை மொத்தமாக கொள்முதல் செய்வதால் ஒரு லேப்டாப் விலை ரூ.22 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரத்திற்குள் இருக்கும் என்று தெரிகிறது.

# 2 வாரங்களில் பணிகள் நிறைவடையும் - தமிழ்நாடு அரசு

**சென்னை, நவ.2:**

உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சதுப்பு நிலத்தின் எல்லையை துல்லியமாக தீர்மானிப்பது குறித்து ஆய்வு மேற்கொண்டு வருகிறோம்.

இன்னும் 2 வாரங்களில் பணிகள் முடிவடையும் என சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு பதில் அளித்துள்ளது.பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை சுற்றி ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்கு எந்த கட்டுமான பணிகளுக்கும் அனுமதி அளிக்கக்கூடாது; குடியிருப்பு வளாகம் கட்ட அனுமதி அளித்த உத்தரவை ரத்து செய்ய கோரியும் அதிமுக சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# எதிர்காலத்தை வடிவமைக்க புதுமையாளர்களை தோஷிபா அழைக்கிறது

**சென்னை, நவ.2:**

தோஷிபா டிஜிட்டல் சொல்யூஷன்ஸ் கார்ப்பரேஷன், தோஷிபா மென்பொருள் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து, 2026 ஜனவரி 31 முதல் பிப்ரவரி 1 வரை பெங்களூருவில் முதலாவது GRIDDB CLOUD IOT HACKATHON ஐ நடத்த வுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த ஹேக்கத்தான், மைக்ரோசாஃப்ட் அஸூர் மார்க்கெட் பிளேஸில் கிடைக்கும் தோஷிபாவின் முழுமையாக நிர்வகிக்கப்படும் டைம்-சீரிஸ் தரவுத்தளமான GRIDDB® CLOUD-ஐப் பயன்படுத்தி நிகழ்நேர IOT அப்ளிகேஷன்களை உருவாக்கும் சவாலை ஏற்க தொடக்க நிறுவனங்கள், மாணவர்கள் மற்றும் டெவலப்பர்களை அழைக்கிறது.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து உலகளவில் கிடைக்கப்பெற்ற GRIDDB® CLOUD இன் திறன்களை மேம்படுத்துவதற்காக தோஷிபா ஹேக்கத்தானை ஏற்பாடு செய்கிறது. GRIDDB® CLOUD டிஜிட்டல் மாற்றத்திற்கான ஒரு முக்கியத் தரவு உள்கட்டமைப்பாக செயல்படுகிறது, நிறுவனங்கள் பெரிய அளவிலான தரவைச் சேகரித்து பகுப்பாய்வு செய்ய, மதிப்புமிக்க நுண்ணறிவுகளைக் கண்டறிய மற்றும் புதிய வணிக முயற்சிகளை இயக்க உதவுகிறது என்று அந்நிறுவனத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 14, 2025 வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும். மேலும் விவரங்களுக்கு மற்றும் விண்ணப்பிக்க,: HTTPS://GRIDDB-IOT HACKATHON.DEVPOST.COM/?UTM_SOURCE=TDSL&UTM_MEDIUM=WEBPAGE&UTM_CAMPAIGN=TOPIS

# சேதமடைந்த சாலைகள் சீரமைப்பு

**சென்னை, நவ.2:**

சென்னையின் பல்வேறு பகுதிகளில் மழையால் சேதமடைந்த சாலைகளைப் போர்க்கால அடிப்படையில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சீரமைத்து வருகிறது.’

# பேருந்து மோதி இளைஞர் பலி

**சென்னை, நவ.2:**

சென்னை அண்ணா சாலையில் பேருந்து மோதி இளைஞர் பலியானார். சென்னை கண்ணகி நகரைச் சேர்ந்தவர் நி. ஆனந்தகுமார் (38). இவர் தனது மோட்டார் சைக்கிளில் கிண்டியில் இருந்து தேனாம்பேட்டைக்கு வியாழக்கிழமை இரவு சென்று கொண்டிருந்தார். அவர், நந்தனம் ஒய்எம்சிஏ அருகே செல்லும்போது பின்னால் வந்த பேருந்து பைக் மீது மோதியது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்து பலத்தக் காயமடைந்த ஆனந்தகுமார், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். விபத்து குறித்து தகவலறிந்த அடையாறு போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு காவல் துறையினர் சம்பவ இடத்துக்கு சென்று, சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது தொடர் பாக வழக்குப் பதிவு செய்து, விபத்தை ஏற்படுத்திய பேருந்து ஓட்டு நரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஊழலுக்கு எதிராக விழிப்புணர்வு பேரணி

**சென்னை, நவ.2:**

ஊழலுக்கு எதிராக சென்னை பெசண்ட் நகரில், தமிழ்நாடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை சார்பில் விழிப்பு ணர்வு பேரணி நடைபெற்ற நிலையில், பல்வேறு பள்ளி களை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவி கள் பங்கேற்றனர். ஊழ லுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

# "பால்கனிப் பறவை"



வழக்கம் போல் நண்பகல் 12.00 மணிக்கு மொட்டை மாடிக்கு வந்தனர் பெருமாளும், சாந்தாவும்.
அவர்களது ஒரே மகன் துரை மூன்று வருடக் காண்ட்ராக்டில் துபாய்க்கு சென்றவன் இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை ஒரு தடவை கூடத் தன் பெற்றோர்களை பார்க்க வரவே இல்லை.
சில சமயங்களில் வேலைப் பளு காரணமாகவும், பல சமயங்களில் விருப்பமின்மை காரணமாகவும், அவன் தாய் மண்ணை தொடவே இல்லை.

"என்ன...?... இன்னும் ஆறு மாசம்தானே?... காண்ட்ராக்ட் முடிந்து விடும்... அப்புறம் ஒரேயடியாய்ச் சொந்த நாட்டுக்கே.. சொந்த ஊருக்கே போய் செட்டிலாகி விடலாம்!" என்ற எண்ணத்தில் அவன் அங்கு இருப்பது பாவம் வயதான பெற்றோர்களுக்கு எப்படி தெரியும்?.
"ஏங்க நமது துரை... என்னோட சமையலை எப்படி ரசிச்சு ரசிச்சு சாப்பிடுவான் தெரியுமா?... பாவம் அங்கே என்ன கர்மத்தை சாப்பிடறானோ?" அவள் வெளிநாடு சென்ற பின் இதைத் தினமும் தன் கணவரிடம் சொல்லிச் சொல்லி அழுவாள் சாந்தா.

ஒருமுறை எதேச்சையாக மொட்டை மாடிக்கு வந்த சாந்தா அங்கே ஒரே ஒரு காகம் மட்டும் சோகமாய் அமர்ந்திருப்பதைப் பார்த்து, உடனே சமையலறைக்குச் சென்று சாப்பாட்டை எடுத்து வந்து அந்த காகத்திற்கு பரிமாறினாள்.

ஒரு நாள், இரண்டு நாளல்ல... மாதக்கணக்கில் அவள் அவ்வாறு செய்யப் போக அந்தக் காகம் தினமும் சரியாக பகல் 12 மணிக்கு அவர்கள் வீட்டு மொட்டை மாடிக்கு வந்து சேர்ந்து விடும்.

"என்ன சாந்தா... அந்தக் காக்கை உனக்கு ஃபிரண்ட் ஆயிடுச்சு போலிருக்கு!" பெருமாள் கேட்க.

"ஃப்ரண்ட் இல்லைங்க... அந்தக் காக்கை என் பிள்ளை.... என் மகனுக்குத்தான் என் கையால் சமைத்துப் போட எனக்கு கொடுத்து வைக்கலை அதான் இந்த காக்கைக்கு போட்டு அது சாப்பிடறதை பார்த்துச் சந்தோஷப்படறேன்" என்றாள் சோகம் இழையோடிய வார்த்தைகளில்.

"ஏதோ அந்த அளவிலாவது அவள் தன் மனதைத் தேடற்றிக் கொள்கிறாளே?... என்பதில் மகிழ்ந்து, " சரி சாந்தா... உனக்கு எது சந்தோஷமோ அதை தாராளமாய்ச் செய்யும்மா" என்று அவளை ஊக்கப்படுத்தினார் பெருமாள்.

அன்று மதியம் 11:50-க்கே சாப்பாட்டுத் தட்டுடன் மொட்டை மாடிக்கு வந்து காத்திருந்த சாந்தாவைச் சோகப்படுத்துவது போல் 12 மணிக்கு மேலாகியும் அந்த காகம் வரவில்லை.

"ஏன்?... என்னாச்சு?... சரியா 12 மணிக்கு "டாண்"னு ஆஜராயிடுவானே?... இன்னைக்கு ஏன் லேட் பண்றான்?

பனிரெண்டேகால், பன்னிரண்டரை, ஒரு மணி, ஒன்றரை மணி, என்று நேரம் ஓடிக் கொண்டே இருந்ததே காகம் வரவேயில்லை.

நொந்து போன மனதுடன் மாடிப்படிகளில் இறங்கி வந்து, ஹாலில் தொலைக்காட்சி முன் அமர்ந்திருந்த தன் கணவனிடம் தன் கவலையைச் சொன்னாள் சாந்தா.

தொலைக்காட்சி செய்தியையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த பெருமாள், அவளைக் கையமர்த்தி விட்டு தொலைக்காட்சியைக் காட்டினார்.

"துபாயில் 48 மாடிக் கட்டிடத்தின் கட்டுமானப் பணியின் போது ஏற்பட்ட விபத்தில் தமிழகத்தை சேர்ந்த மூவர் இறந்துள்ளனர்"

தொலைக்காட்சி திரையில் அந்த மூவரின் புகைப்படங்களும் காட்டப்பட, இரண்டாவதாக இருந்த புகைப்படத்தில் துரை சிரித்துக் கொண்டிருந்தான்.

"தடார்" என்ற சத்தம் கேட்டு தன் பார்வையை தொலைக்காட்சி திரையிலிருந்து விலக்கிய பெருமாள் கண்டது, தரையில் மயங்கிக் கிடந்த தன் மனைவி சாந்தாவை.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# காதலுக்காக....



மாலை ஆறு மணி.மார்கழி மாதத்து பனி இந்த தை மாதத்திலும்பொழிந்து கொண்டிருந்நது. ஞாயிற்றுக்கிழமையானதால் பீச்சில் கூட்டம் இருந்தது. உள்ளூர்க்காரர்களுக்கு மெரினா பீச் ஒரு இலவச பொழுதுபோக்குமிடமாக விளங்குகிறது.
ஜோதியும் ராமும் கை கோர்த்தபடி சுற்றிலும் வேடிக்கை பார்த்தபடி நடந்து கொண்டிருந்தனர்.
" ஜோதி ! இந்த மாதிரி பீச் மணலில் நடக்கறது எவ்வளவு நல்லது தெரி யுமா ?" என்றான் ராம்.
" ம்..ம்..அதுவும் மாலை வெயில் கத கதப்பு மணலில் நடப்பது உடலுக்கு ரொம்பவும் நல்லது !"

பீச்சில் ஆங்காங்கு நின்றபடியும் உட்கார்ந்தபடியும் சிலர் செல்ஃபி எடுத்துக்கொண்டிருந்தனர். இன்னும் சிலர் கேமராவில் படம் பிடித்துக் கொண்டிருந்தனர்.
அப்பொழுது சற்று தூரத்தில் வந்துகொண்டிருந்த ஒரு வயதான ஜோடியைப் பார்த்த ராம் , " ஜோதி ! அங்கே பார்.இந்த வயதிலும் எவ்வளவு அந்நியோன்னியமா கை கோர்த்துக்கிட்டு வராங்க ! அந்தப் பெரியவருக்கு 75 வயசு இருக்கலாம்."

உடனே ஜோதியும் , " ஆமாம் ராம் ! பெரியம்மாவுக்கு 72 வயசு இருக்கலாம். நெற்றி நிறைய பொட் டும் வெண் பஞ்சு தலையில் மல்லி கைச்சரமும் வச்சுக்கிட்டு பழுத்த சுமங்கலியா இருக்காங்க. கிரேட் வேலன்டைன்ஸ் !" என்றாள்.
" அதாவது கல்யாணமாகி இன்னும் காதலிச்சிக்கிட்டிருக்காங்கன்னு சொல்றே!"
" அதிலென்ன சந்தேகம் ராம் ? காதலிச்ச பிறகு கல்யாணம். கல்யா ணத்துக்கப்புறமும் காதல் தொடரத் தானே செய்யும் !ஒருத்தரை ஒருத்தர் மனசார நேசிக்கிறதும் காதல் தானே ?"
" யெஸ். யு ஆர் டெக்னிகலி கரெக்ட் !"
திடீரென பரபரப்பு ஏற்பட்டது. ஆறுவயது சிறுமி ஒருவள் பிளாஸ்டிக் பந்தை தூக்கிப்போட்டபடி விளையாட பந்து காற்று வேகத்தில் கரையை நோக்கிப் பறந்தது.பந்தைத் துரத்திக் கொண்டு சிறுமியும்பின் தொடர்ந்து ஓடினாள்.

விபரீதம் அறிந்து உடனே ராம் அந்தச் சிறுமியை நோக்கி ஓட ஜோதிதிடுக்கி ட்டாள். " ராம் ! ஓடாதே நில்லு !" என கத்திக்கொண்டே ராம் பின்னால் ஓடினாள்.
நல்லவேளையாக யாரோ ஒருவன் எதிர் திசையிலிருந்து ஓடி வந்து சிறுமியைக் காப்பாற்றினான்.
சிறுமியின் பெற்றோர் பதற்றத்துடன் ஓடி வந்தனர். " ஷாலுக்குட்டி ! என்று அந்த ஆளிடமிருந்து சிறுமியை வாங்கி அணைத்துக்கொண்டாள் அம்மாக்காரி.

" ஏங்க ! குழந்தையை ஒழுங்கா பார்த்துக்க வேண்டாமா..இப்படியா அலட்சியமா இருக்கறது.?"

" சாரி தம்பி ! எங்க முன்னாடிதான் விளையாடிக்கிட்டிருந்தா. எப்படியோ எங்க கண்ணுல மண்ணைத் தூவிட்டு ஓடிட்டா. ரொப்ப நன்றி தம்பி !"
பரபரப்பு ஓய்ந்தது.
" என்ன, பெரிய ஹீரோன்னு நினை ப்பா? அவ்வளவு டென்ஷன் ஆகி ட்டே?" ஜோதி கோபத்துடன் கேட்டாள்.

" என்னவோத் தெரியல்ல அந்தச் சிறமி மேல சொல்லவொண்ணாப் பாசம்.. அதுக்கு ஏதாவது ஆகப் போவ தேங்குற கவலை..அதனால பதற்ற த்துல அப்படி நடந்துக் கிட்டேன். சாரி டியர் !"
" ம்..ம் ..சரி சரி."

அதன்பிறகு ஏழுமணி வரை பீச்சில் திரிந்தார்கள்.
" ராம்,நாழியாகிவிட்டது.புறப்படலாமா?"
" ஓ.கே.டாரலிங் ! அயம் அட் யுவர் டிஸ்போசல் !"
இருவரும் தங்கள் இருப்பிடத்துக்குத் திரும்பினர்.
" ராம் ! நாம அவசரப்பட்டுவிட்டோமோ ன்னு நினைக்கிறேன் !" பெருமூச்சு விட்டபடி கூறினாள் ஜோதி.
" லேட் ரியலிசேஷன்....ஆனாலும் நமக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நிலை மை சரியோ தவறோ, அதைப் பற்றி இப்போது பேசி பயனில்லை."
" இல்லை ராம் ! நம் காதலை நம்ம வீட் டில ஏத்துக்க போராடி இருக்கணும்.... கடைசி வரை நின்னு ஒரு கை பார்த்தி ருக்கணும். அதைவிட்டு....சே ! " மனத் தில் குமைந்தாள் ஜோதி.
" ஜோதி ! நம்மக் காதலை நம்ம வீட்டுக் காரங்க ஏத்துக்க முடியாதுன்னு வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டா பேசிட்டாங்க. எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும் பிரயோஜனப் படல்ல. நமக்கும் வேற வழி எதுவும் தெரிய ல்ல....ஸோ அதைப் பற்றி பேசி உபயோகம்ஒண்ணும் கிடையாது.

காதல் தோல்வியால் தற்கொலை செய்துகொண்ட நாளான அன்று ஜோதி, ராம் ஆவிகள் தம் தம் சமாதிகளுக்குள் புகுந்துகொண்டன !



- வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# வள்ளுவத்தில் வியாசர்



▪கே.பானுமதி நாச்சியார்
சிவகிரி

## 2. கண்ணனும் துர்வாசரும்..

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.. என்பது வள்ளுவம்
விளக்கம்
எப்பொருளுக்கும் உண்மை தன்மை உண்டு பொருட்களுக்கு மட்டுமல்ல, சொற்களிலும் உண்மை தன்மை உண்டு. அதனைக் கண்டறிவதே சிறந்த அறிவு. இதனையும் வியாசர் வழி நின்று விளக்குவோம்.
பிரம்மலோகத்தில் ஒரு நாள் நாதரின் நாராயணா என்னும் நாமம் எவ்விடத்திலும் வியாபித்திருக்க பிரம்மனை நோக்கி வருகிறார் நாரதர்.
"பிரம்மனே! நித்திய பிரம்மச்சாரி யார்? தெளிவுபடுத்தவும்!" என்கிறார். அவருக்குப் பெருமையும் கூட, தன் பெயரைப் பிரம்மன் சொல்லுவது உகப்பு தானே?
ஆனால் அவரோ "ஸ்ரீகிருஷ்ணன்!" என்கிறார்.
"என்ன! கிருஷ்ணரா! நைஷ்டிகப் பிரம்மச்சாரி!" சிரித்தார் நாரதர்.
உடனே பிரம்மனும் "ஆமாம்! உனக்கு இதற்கு விளக்கம் வேண்டுமானால், நித்திய உப வாசியான துர்வாசரிடம் கேட்டுத் தெரிந்து கொள்!" என்றார்.
இன்னும் குழப்பமாகிப் பின், சிரித்து கொண்டே "வேடிக்கையா இருக்கிறது! பசி பொறுக்காதவன் துர்வாசர்! பல வேளை உணவு உண்பார். அவர் நித்ய உபவாசி! இதனை யாரிடம் கேட்டு தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்?" என்றார்.
அவரது சொற்களில் நையாண்டி அதிகமாக இருந்தது. சில வார்த்தைகளின் உண்மை பொருள் அறியாத வரை, அவைகள் நகைப்புக்கு உரியனவே!
நாரதா! திருமணம் செய்து கொள்ளாமல் உன் போல் இருப்பவர்கள், தபஸ்விகள் தான் பிரம்மச்சாரிகள் என்ற உன் எண்ணத்தில் மெய்யில்லை!" என்றார் பிரம்மன்.
"அதுபோல ஊனும் நீரும் பருகாதவர், மேலும் இவையெல்லாம் துறந்து புற்று வளரும் வரைத் தவம் செய்பவர்கள் தான் நித்திய உபவாசிகள் என்ற உன் இந்த எண்ணமும் தவறுதான்!" என்றார்.
எனவே "நித்திய உபவாசி யார்?" என்பதைக் கிருஷ்ணனிடமும் "நைஷ்டிகப் பிரம்மச்சாரி யார்?" என்பதைத் துர்வாசரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆவல் கொண்டார் நாரதர்.
முதலில் கிருஷ்ணனிடம் போய் "நித்திய உபவாசி யார்?" என்று கேட்கலாம் என்று ஆயர்பாடிக்கு வருகிறார். ஒவ்வொரு ஆயர்பாடி வீட்டின் கதவுகளும் திறந்தே இருக்கின்றன. ஒவ்வொரு கோபியருடனும் ஒவ்வொரு கிருஷ்ணன் ஒவ்வொரு வீட்டிலும் இருப்பதைக் காண்கிறார் நாரதர். இது எப்படி சாத்தியமாகும் என்று நினைத்துக் கொண்டே யமுனையின் கரையில் உட்காருகிறார்.
சிறிது தூரத்தில் கண்ணன் அங்கு அமர்ந்திருக்கிறான். கேட்க வந்த கேள்வியைக் கேட்பதற்குள் ருக்மணியும் குழப்பத்துடன் "யமுனையைக் கடந்து சென்று விட்டு வந்ததாகவும், துர்வாசருக்கு உணவு அளித்து விட்டதாகவும், ஆனால் மிகவும் குழம்பி போய் இருக்கிறேன்!" என்றும் சொல்கிறாள்.
"ஏன்? ருக்மணி தேவியாரே!" என்கிறார் நாரதர்.
உடனே ருக்மணி "நாரதரே! இவர் சற்றுமுன் என்னிடம் துர்வாசர் பசியோடு யமுனையின் அக்கரையில் இருப்பதாகவும், அவருக்கு உணவு கொடுத்து விட்டு வா!" என்றார்.
"ஆஹா! நாமும் அதனைத் தெளிவு படுத்திக் கொள்ள தானே வந்திருக்கிறோம்! துர்வாசரும் இங்குதான் இருக்கிறாரா? சரி ருக்மணி தேவியாரே! உணவு கொடுத்துவிட்டு வந்து விட்டீர்களா?" என்றார் ஆர்வமுடன்.
"
"சற்றுப் பொறுமையாகக் கேள் நாரதா! முழுவதும் கேள். போகும் முன் யமுனையில் வெள்ளம் வந்து விட்டது!"
"ஓ! அப்புறம்?" என்றார் நாரதர்.
"எப்படி யமுனையைக் கடந்து செல்வது?" என்று இவரிடம் கேட்க, இவரோ "கிருஷ்ணன் நித்திய பிரம்மச்சாரி என்பது உண்மையானால், யமுனை வழிவிடும் என்று சொல்லி, "கிருஷ்ணன் நித்திய பிரம்மச்சாரி! என்று சொல், வழி விடும்!" என்றார்.
நானும் குழம்பி போய் விட்டேன்? ஆனாலும், இவர் சொன்னதைச் சொல்ல வழி விட்டதே யமுனை.
உடனே நாரதர் "அவர் பிறக்கும் பொழுதே கம்ஸனுக்குப் பயப்படாமல் வழி விட்டவள் ஆச்சே! சரியாகக் கேட்டிருக்க மாட்டாள். 'கிருஷ்ணா' என்ற உடனேயே வழிவிட்டு இருப்பாள்!" என்றார் நாரதர்.
திரும்பவும் குழப்பத்துடன் "அப்படியானால்... என்றாள் ருக்மணி.
"எதற்குத் திரும்பவும் நீட்டல்".. என்றார் நாரதர்.
"இல்லை நாரதா! துர்வாசருக்கு உணவு அளித்துவிட்டு திரும்பவும் இக்கரையை அடைய வேண்டி வந்ததால், வெள்ளமும் வடியாததால், எப்படிக் கடப்பது என்று யோசனை செய்து கொண்டிருக்கும் பொழுது, துர்வாசர் "நான் நித்திய உபவாசி என்பது உண்மையானால் யமுனை வழிபடுவாள்!" என்றார். உடனே



"துர்வாசர் நித்திய உபவாசி" என்று நானும் அவர் சொன்னது போலவே "துர்வாசர் நித்திய உபவாசி!" என்றவுடன் வழி விட்டாளே யமுனை. இதற்கு என்ன சொல்கிறாய்?" என்று நாரதரிடம் கேட்க, இருவரும் கண்ணனின் புன்சிரிப்பு முகத்தை நோக்கினர்.
அப்பொழுது நாரதர் சொன்னார் " ருக்மணி தேவியாரே! நான் வரும்போது ஆயர்பாடியில் எல்லா வீடுகளிலும் கண்ணன் கோபிகைக்குத் தோழனாக, 90ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு கிருஷ்ணனாகக் கண்டேன். மலைத்துப் போய்விட்டேன்!" என்றார்.
உடனே ருக்மணியும் "ஒரு நாள் துர்வாசர் அதிகம் சாப்பிட்டு விட்டார். எனக்கு வயிறு வலிக்கிறது, சுக்குத் தாயேன் என்றார் நாரதா!" என்றாள்.
அனைத்தும் அதிசயமாக இருக்க, கண்ணன் தன் புன்முறுவல் பூத்த முகத்துடனேயே விளக்கத் தொடங்கினான்.
"நாரதா! உன் குழப்பம் புரிகிறது! துர்வாசர் எது சாப்பிட்டாலும் தனக்காகச் சாப்பிட மாட்டார். சாப்பிடும் முன்பும் பின்பும் "கிருஷ்ணார்ப்பணம்" என்று ஜெபித்து, தண்ணீர் அருந்தி விடுவார். எனவே அவர் உண்ணும் அனைத்தும் என்னையே அடைந்து விடும். அப்படியானால் அவர் நித்திய உபவாசி தானே!" என்றார்.
மேலும் "உணவு மட்டுமல்ல, சுவாசிக்கும் காற்று, கோபதாபங்கள், உணர்வுகள், அதன் பயன்கள் அனைத்தையும் எனக்கே சமர்ப்பித்து விடுவார்! "
"ஆஹா" இதன் உண்மை பொருள் அறிந்து கொண்டேன்! புரிந்தது, விளங்கியது!" என்று எண்ணியவர் அக்கரையில் இருக்கும் துர்வாசரைச் சந்திக்கச் சென்றார்.
துர்வாசர் நாரதரிடம் தன்னிடம் வந்த காரணத்தைக் கேட்க, அவரும் பிரம்ம உலகத்தில் நடந்த விஷயங்களைச் சொல்லி "நைஷ்டிகப் பிரம்மச்சாரி யார்?" என்றார்.
"அதில் உனக்கென்ன சந்தேகம்? கிருஷ்ணன் தான்!" என்றார்.
"என்ன! எட்டு பட்டத்து அரசிகளும், 16,000 கோபிகளுக்கும் உரியவன் கிருஷ்ணன்!"
உடனே துர்வாசர் "பெண்களே இல்லாத இடத்தில் வாழ்பவனும், பெண்களைத் தவிர்த்து வாழ்பவனும் பிரம்மச்சாரி அல்ல."
"கோபியர்களுடன் வாழ்ந்தாலும், அவர்களுடன் நெருக்கமாக வாழ்ந்து, அவர்கள் எவரிடத்திலும் ஈடுபாடு இல்லாமல், அன்பிற்கும் பாசத்திற்கும் ஆளாகிய போதிலும், மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் இச்சை கொள்ளாமல் வாழும் கிருஷ்ணர் நித்திய பிரம்மச்சாரி!" என்று கூறினார்.
திரேதாயுகத்தில் விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீராமன் வனவாசம் போன போது அங்கிருந்த முனிவர்கள் அவனிடத்தில் ஆசை கொண்டு தங்கள் உடனையே வாசம் செய்ய வேண்டும் என்கிற விருப்பத்தைக் கோபிகைகளாகப் பிறக்க வைத்து கிருஷ்ணனுடன் அவர்கள் அனுபவித்த கிருஷ்ணானுபாவம் தானே ஒழிய காமத்துடன் கூடிய பிரேமையாகாது. அவர்களைத் தன் பிரேமையால் ஆட் கொண்டான்!" என்று விளக்கினார்.
அதேபோல் மகாபாரத யுத்தம் முடிவில் அஸ்வத்தாமன் ஏவும் பிரமசிசு என்ற அம்பினால் உத்தரையின் கருவைக் கண்ணன் காப்பாற்றினாலும் அந்த அம்பின் பயனாகக் கருவைக் கருகச் செய்தது.
உரிய காலத்தில் பிறந்த குழந்தை இறந்தே பிறந்தது. எல்லோரும் முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பொழுது, கண்ணன் மட்டும் "குழந்தை உயிர் பெற்று விடும்!" என்று ஆறுதல் படுத்தினான்.
அவ்வதிசயத்தைக் காண பராசரர், வியாசர் முதலிய முனிவர்கள் பலரும் திரண்டனர்.
"பிரம்மச்சரிய விரதத்தைச் சிறிதும் நழுவாமல் கடைப்பிடிப்பவர் யாராவது ஒருவர் இக்குழந்தையைத் தொட்டால், குழந்தை உயிர் பெறும்!" என்று கூறினான் கண்ணன்.
பிரம்மச்சரியத்தில் சிறந்த முனிவர்களும், யோகிகளும் தொட்டும், குழந்தை உயிர் பெறவில்லை. "கண்ணன் கூறியது விளையாட்டுச் சொற்களோ!" என்று கூட எண்ணினர்.
கடைசியாகக் கண்ணன் "நான் இக்குழந்தையைத் தொடுகிறேன். ஒருவேளை உயிர் பெற்றாலும் பெறலாம்!" என்றார்.
சொற்களின் உண்மைத் தன்மை அறியாத வரை, அது நகைப்புக்கு உரியதாக தான் இருக்கும். நகைத்தனர் அனைவரும் இதனைக் கேட்டு.
ஆனால், கண்ணனனோ "நான் தொடுதலால் நஷ்டம் ஒன்றும் இல்லையே!" என்றவன் குழந்தையைத் தொட கரிக்கட்டை போல் இருந்த குழந்தை அழத் தொடங்கியது!".
"என் மனம் மாசற்றது என்பதற்கு இக்குழந்தை உயிர் பெற்றதே சாட்சி!" என்றான் கண்ணன்.
எதனினும் உண்மை தன்மை அறிவதே சிறந்த அறிவு என்பதே வியாசர் கருத்து.
அதனை விளக்குவதே இக் குறளின் நோக்கம்.

- தொடரும்

# ஐந்து முகம் முருகன்...!

உலகம் முழுவதும் தேடினாலும் கிடைக்காது ஐந்து முகம் முருகன் எட்டு கரங்கள் . சத்தியமங்கலத்தில் இருந்து 25 கிமீ ஓதி மலை அன்னூர் அருகில் இரும்பறை இங்கு இந்த பெயர் வர காரணம் பிரணவத்தின் பொருள் தெரியாத பிரம்மாவை இரும்பு அறையில் பூட்டிய தால் இந்த ஊர் இரும்பறை ஓதி மலையடிவாரத்தில் பிரம்மன் கோவில் உள்ளது அங்கு வணங்கி பின் மலையடிவார சுயம்பு விநாயகரை வணங்கி மலை ஏற வேண்டும் சுவாமி மலையில் பிரணவத்தின் பொருள் சொன்னவர் இங்கு தான் வேதம் ஆகமங்களை உபதேசித்தார்.

போகர் இந்த முருகனை வணங்கி தவம் செய்து ஹோமம் செய்த போது முருகன் பழனி செல்லும் படி பணித்தார்.

இன்றும் மலையில் இருந்து ஈசான்ய மூலையில் கீழே பார்த்தால் இரண்டு கிமீ தொலைவில் வெள்ளையாக விபூதி இருப்பது போல் மண் இன்றும் உள்ளது இந்த மண் தான் மலையில் விபூதி பிரசாதமாக வழங்கப்படுகிறது தற்போது இந்த ஊர் பூதிக்காடு என்று மருவியது.

போகரை வழியனுப்பி வைக்கும் போது தன் ஒரு சிகையை கொடுத்து அனுப்பினார் அந்த சிரம் அங்கு குமாரபாளையம் என்ற இடத்தில் நாகநாதேஸ்வர் கோவிலில் ஒரு முகம் நான்கு கரம் என்று காட்சி தருகிறார்( இன்றும் நம் வீட்டுக்கு முக்கிய நண்பர் விருந்தினரை வழி அனுப்ப வாசல் வரை வருகிறோம் அது போல் வழியனுப்பிய விபரமாக இருக்கலாம்)

சபரி மலை மலை ஏறுவது போல்



ஓதி மலை ஏறுவது சுலபமல்ல மிகவும் கடினம் 1800 படிகள் கைப்பிடி இல்லாத படிகள் ஓய்வு எடுக்க இடமில்லை செங்குத்தான பாதை வழியில்

300 படிகளுக்கு ஒரு இடத்தில் ஒரு சிறிய நிழல் தரும் இடம் இரண்டு மட்டும் 850 படி வரை உண்டு .

மிகவும் கஷ்டப்பட்டு படி ஏறி போனால் சோமாஸ்கந்தர் அமைப்பில் முருகன் காட்சி தருகிறார் சப்த கன்னியர் , சிவன் ,அம்மன் உண்டு இந்த கோவிலில் பூ வைத்து உத்தரவு கேட்பதும் அங்குள்ள மக்களின் நம்பிக்கை.

கோவையில் இருந்து 48 கிமீ புளியம்பட்டி அங்கிருந்து 10 கிமீ போனால் இரும்பறை போகலாம்

திங்கள்-வெள்ளி காலை 10- மாலை6 மணிவரை கோவில் திறந்து இருக்கும் விதி விலக்கு கார்த்திகை அமாவாசை சஷ்டி நாட்கள் திறந்து இருக்கும்.

இவ்வளவு உயர் மலையில் ஒரு கிணறு உள்ளது நீரும் உண்டு! மிகவும் பழமையான கோவில் தல விருட்சம் ஓதி மரம். (தஞ்சை பகுதியில் திருமண அரசாணிகால் ஓதி மரத்தில் இன்றும் நடுவார்கள்)

கேட்ட வரம் கொடுக்கும் முருகன் மலையில் இருந்து பார்த்தால் பவானி சாகர் அணை நீர்மட்டம் தெரியும் மலையில் மயில் குரங்கு என இருக்கும்

காலணி இல்லாமல் ஏற முடியாது பாறைகளால் ஆன படிகள் இருப்பதால் காலையில் ஏறும் போது வெயில் இல்லாமல் இருக்கும் இறங்கும் போது பாதம் பழுத்து விடும் கவனமாக போக வேண்டும்.

-Balachandar

# தினம் ஒரு தலைவர்கள்

# ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா வரலாறு

ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா (1 அக்டோபர் 1857 - 30 மார்ச் 1930) ஒரு இந்திய புரட்சிகர போராளி, ஒரு இந்திய தேசபக்தர், வழக்கறிஞர் மற்றும் பத்திரிகையாளர், அவர் லண்டனில் இந்திய ஹோம் ரூல் சொசைட்டி , இந்தியா ஹவுஸ் மற்றும் தி இந்திய சமூகவியலாளர் ஆகியவற்றை நிறுவினார். பல்லியோல் கல்லூரியில் பட்டம் பெற்ற கிருஷ்ண வர்மா, சமஸ்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளில் குறிப்பிடத்தக்க அறிஞர் ஆவார். அவர் இந்தியாவில் ஒரு சுருக்கமான சட்ட வாழ்க்கையைத் தொடர்ந்தார் மற்றும் இந்தியாவில் பல இந்திய சமஸ்தானங்களின் திவானாக பணியாற்றினார். இருப்பினும், அவர் கிரீட அதிகாரத்துடன் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தார், ஜூனாகத்தில் பிரிட்டிஷ் காலனித்துவ அதிகாரிகளின் சதித்திட்டத்தைத் தொடர்ந்து பதவி நீக்கம் செய்யப்பட்டார் மற்றும் இங்கிலாந்துக்குத் திரும்பத் தேர்ந்தெடுத்தார். தயானந்த சரஸ்வதியின் கலாச்சார தேசியவாத அணுகுமுறையையும் ஹெர்பர்ட் ஸ்பென்சரையும் போற்றும் கிருஷ்ண வர்மா, ஸ்பென்சரின் "ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு வெறுமனே நியாயமானது அல்ல, ஆனால் கட்டாயமானது" என்ற கூற்றை நம்பினார்.

1905 ஆம் ஆண்டில், அவர் இந்தியா ஹவுஸ் மற்றும் தி இந்தியன் சோசியாலஜிஸ்ட் நிறுவனங்களை நிறுவினார் , இது அந்த நேரத்தில் பிரிட்டனில் இந்திய மாணவர்களிடையே தீவிர தேசியவாதிகளுக்கான ஒழுங்கமைக்கப்பட்ட சந்திப்பு இடமாகவும், இந்தியாவிற்கு வெளியே புரட்சிகர இந்திய தேசியவாதத்திற்கான மிக முக்கியமான மையங்களில் ஒன்றாகவும் வேகமாக வளர்ந்தது . கிருஷ்ண வர்மா 1907 இல் பாரிஸுக்கு குடிபெயர்ந்தார், வழக்குத் தொடரப்படுவதைத் தவிர்த்து.

ஷ்யாம்ஜி கிருஷ்ண வர்மா, 1857 ஆம் ஆண்டு அக்டோபர் 4 ஆம் தேதி கட்ச் மாநிலத்தின் (இப்போது குஜராத்தின் கட்ச் ) மாண்ட்வியில் , பருத்தி ஆலை நிறுவனத்தில் தொழிலாளியாக இருந்த கிருஷ்ணதாஸ் பானுஷாலி (கர்சன் நகுவா; நகுவா என்பது குடும்பப்பெயர், பானுஷாலி என்பது சமூகப் பெயர்) மற்றும் ஷ்யாம்ஜிக்கு 11 வயதாக இருந்தபோது இறந்த கோமதிபாய் ஆகியோரின் மகனாக ஷாம்ஜியாகப் பிறந்தார். அவர் தனது பாட்டியால் வளர்க்கப்பட்டார். அவரது மூதாதையர்கள் பச்சுண்டா என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள், இது தற்போது கட்ச் மாவட்டத்தின் அப்தாசா தாலுகாவில் உள்ளது. அவர்கள் வேலை தேடியும் குடும்பப் பூசல்கள் காரணமாகவும் மாண்ட்விக்கு குடிபெயர்ந்தனர். பூஜில் இடைநிலைக் கல்வியை முடித்த பிறகு , அவர் வில்சன் உயர்நிலைப் பள்ளியில் மேற்படிப்புக்காக மும்பை சென்றார் மும்பையில் இருந்தபோது, அவர் சமஸ்கிருதத்தைக் கற்றுக் கொண்டார் .

1875 ஆம் ஆண்டில், அவர் பாட்டியா சமூகத்தைச் சேர்ந்த ஒரு பணக்கார தொழிலதிபரின் மகளும், தனது பள்ளி நண்பர் ராமதாஸின் சகோதரியுமான பானுமதியை மணந்தார். பின்னர் அவர் தேசியவாதியான சுவாமி தயானந்த சரஸ்வதியுடன் தொடர்பு கொண்டார், அவர் ஒரு சீர்திருத்தவாதியும் வேதங்களின் விரிவுரையாளருமான ஆர்ய சமாஜத்தை நிறுவினார் . அவர் அவரது சீடரானார், விரைவில் வேத தத்துவம் மற்றும் மதம் குறித்து விரிவுரைகளை நடத்தத் தொடங்கினார்.

1877 ஆம் ஆண்டு, ஒரு பொதுப் பேச்சுப் பயணம் அவருக்குப் பெரும் பொது அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது. 1877 ஆம் ஆண்டு காசியின் பண்டிதர்களால் பண்டிட் என்ற மதிப்புமிக்க பட்டத்தைப் பெற்ற முதல் பிராமணரல்லாதவர் என்ற பெருமையைப் பெற்றார் .


அவர் ஆக்ஸ்போர்டு சமஸ்கிருதப் பேராசிரியரான மோனியர் வில்லியம்ஸின் கவனத்திற்கு வந்தார் , அவர் ஷ்யாம்ஜிக்கு உதவியாளராக வேலை வழங்கினார்.

ஷியாம்ஜி இங்கிலாந்து வந்து, பேராசிரியர் மோனியர் வில்லியம்ஸின் பரிந்துரையின் பேரில் , ஏப்ரல் 25, 1879 அன்று ஆக்ஸ்போர்டில் உள்ள பல்லியோல் கல்லூரியில் சேர்ந்தார். 1883 இல் இளங்கலைப் பட்டம் பெற்ற அவர், ராயல் ஆசியடிக் சொசைட்டியில் "இந்தியாவில் எழுத்தின் தோற்றம்" என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவை வழங்கினார் . இந்த உரை மிகவும் வரவேற்பைப் பெற்றது, மேலும் அவர் சங்கத்தின் ஒரு வெளிநாட்டு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1881 இல், அவர் பெர்லின் ஓரியண்டலிஸ்ட்களின் காங்கிரசில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தினார் . 1885 ஆம் ஆண்டு இந்தியா திரும்பிய அவர் ஒரு வழக்கறிஞராகப்



பயிற்சியைத் தொடங்கினார். பின்னர் ரத்லம் மாநில மன்னரால் திவான் (முதலமைச்சர்) ஆக நியமிக்கப்பட்டார் ; ஆனால் உடல்நலக் குறைவு காரணமாக அவர் இந்தப் பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவரது பணிக்காக ரூ.32,052 மொத்தத் தொகையாக வழங்கப்பட்டது. மும்பையில் சிறிது காலம் தங்கிய பிறகு, அவர் தனது குரு சுவாமி தயானந்த சரஸ்வதியின் தலைமையகமான அஜ்மீரில் குடியேறினார் , மேலும் அஜ்மீரில் உள்ள பிரிட்டிஷ் நீதிமன்றத்தில் தனது பயிற்சியைத் தொடர்ந்தார்.

அவர் தனது வருமானத்தை மூன்று பருத்தி அச்சகங்களில் முதலீடு செய்து, வாழ்நாள் முழுவதும் சுதந்திரமாக இருக்க போதுமான நிரந்தர வருமானத்தைப் பெற்றார். 1893 முதல் 1895 வரை உதய்பூர் மகாராஜாவுக்கு கவுன்சில் உறுப்பினராகப் பணியாற்றினார், அதைத் தொடர்ந்து ஜூனகத் மாநிலத்தின் திவான் பதவியைப் பெற்றார் . இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் மீதான அவரது நம்பிக்கையை அசைத்த ஒரு பிரிட்டிஷ் முகவருடனான கசப்பான அனுபவத்திற்குப் பிறகு 1897 இல் அவர் ராஜினாமா செய்தார். சத்யார்த் பிரகாஷ் மற்றும் சுவாமி




தயானந்த சரஸ்வதியின் பிற புத்தகங்களைப் படித்த ஷ்யாம்ஜி கிருஷ்ண வர்மா, அவரது தத்துவம், எழுத்துக்கள் மற்றும் தேசியவாத உணர்வால் மிகவும் ஈர்க்கப்பட்டு, அவரது தீவிர ரசிகர்களில் ஒருவராக ஆனார். தயானந்தரின் உத்வேகத்தின் பேரில், இங்கிலாந்தில் இந்தியா ஹவுஸில் ஒரு தளத்தை அமைத்தார்.

இருப்பினும், காங்கிரஸ் கட்சியின் மனு அளித்தல், பிரார்த்தனை செய்தல், எதிர்ப்பு தெரிவித்தல், ஒத்துழைத்தல் மற்றும் ஒத்துழைப்பு கொள்கையை அவர் நிராகரித்தார், இது அவமானகரமானது மற்றும் வெட்கக்கேடானது என்று அவர் கருதினார். 1890 ஆம் ஆண்டு ஒப்புதல் மசோதா சர்ச்சையின் போது ஷ்யாம்ஜி கிருஷ்ணா லோகமான்ய திலகரை ஆதரித்தார். 1897 ஆம் ஆண்டில், பூனாவில் பிளேக் நெருக்கடியின் போது பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கம் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து , சபேகர் சகோதரர்களால் பிளேக் ஆணையர் படுகொலை செய்யப்பட்டதை அவர் ஆதரித்தார், ஆனால் விரைவில் அவர் இந்திய சுதந்திரத்திற்காக பிரிட்டனுக்குள் போராட முடிவு செய்தார். ஆர்ய சமாஜத்தின் நிறுவனர் சுவாமி தயானந்த சரஸ்வதியால் திருநிலைப்படுத்தப்பட்ட ஷ்யாம்ஜி கிருஷ்ண வர்மா, லண்டனுக்கு வந்தவுடன் இன்னர் டெம்பிளில் தங்கி, ஓய்வு நேரத்தில் ஹெர்பர்ட் ஸ்பென்சரின் எழுத்துக்களைப் படித்தார் . 1900 ஆம் ஆண்டில், ஹைகேட்டில் ஒரு விலையுயர்ந்த வீட்டை வாங்கினார் .

ஸ்பென்சரின் எழுத்துக்களால் அவர் ஈர்க்கப்பட்டார். 1903 ஆம் ஆண்டு ஸ்பென்சரின் இறுதிச் சடங்கில், அவருக்கும் அவரது பணிக்கும் அஞ்சலி செலுத்தும் விதமாக ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் பதவியை நிறுவ £1,000 நன்கொடை அளிப்பதாக அறிவித்தார் .

ஒரு வருடம் கழித்து, இந்திய பட்டதாரிகள் இங்கிலாந்தில் தங்கள் கல்வியை முடிக்க ஹெர்பர்ட் ஸ்பென்சர் இந்திய உதவித்தொகை தலா ரூ.2,000 வழங்கப்படும் என்று அவர் அறிவித்தார். ஆர்ய சமாஜத்தின் நிறுவனர் மறைந்த தயானந்த சரஸ்வதியின் நினைவாக கூடுதல் உதவித்தொகையையும் , எதிர்காலத்தில் மேலும் நான்கு உதவித்தொகைகளையும் அவர் அறிவித்தார்.

1922 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் அவர் இந்திய சமூகவியலாளர் இதழின் மேலும் இரண்டு இதழ்களை வெளியிட்டார் , ஆனால் உடல்நலக்குறைவு அவரைத் தொடர்ந்து பணியாற்றத் தடுக்கும் முன். 1930 மார்ச் 30 அன்று இரவு 11:30 மணிக்கு மருத்துவமனையில் இறந்தார், அவரது மனைவி பானுமதி கிருஷ்ணவர்மாவை விட்டுச் சென்றார். அவரது மரணச் செய்தியை இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கம் மறைத்தது. ஆயினும்கூட, பகத் சிங் மற்றும் லாகூர் சிறையில் நீண்ட கால விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பிற கைதிகள் அவருக்கு அஞ்சலி செலுத்தினர். பால கங்காதர திலகர் தொடங்கிய மராத்தா என்ற ஆங்கில நாளிதழ் அவருக்கு அஞ்சலி செலுத்தியது.

ஜெனீவா மற்றும் செயிண்ட் ஜார்ஜ் கல்லறையின் உள்ளூர் அரசாங்கத்துடன் தனது மற்றும் அவரது மனைவியின் அஸ்தியை 100 ஆண்டுகள் கல்லறையில் பாதுகாக்கவும், அந்தக் காலகட்டத்தில் இந்தியா சுதந்திரம் அடையும் போதெல்லாம் அவர்களின் அஸ்திகளை இந்தியாவுக்கு அனுப்பவும் அவர் முன்கூட்டியே ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பாரிஸை தளமாகக் கொண்ட அறிஞர் டாக்டர் பிருத்விந்திர முகர்ஜியின் வேண்டுகோளின் பேரில், அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அஸ்தியை திருப்பி அனுப்ப ஒப்புக்கொண்டார். இறுதியாக, ஆகஸ்ட் 22, 2003 அன்று, ஷியாம்ஜி மற்றும் அவரது மனைவி பானுமதியின் அஸ்தி கலசங்கள், இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு 55 ஆண்டுகளுக்குப் பிறகு வில்லே டி ஜெனீவ் மற்றும் சுவிஸ் அரசாங்கத்தால் அப்போதைய குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடியிடம் ஒப்படைக்கப்பட்டன . அவை மும்பைக்கு கொண்டு வரப்பட்டு, குஜராத் முழுவதும் நீண்ட ஊர்வலத்திற்குப் பிறகு, அவை அவரது பிறந்த இடமான மாண்ட்வியை அடைந்தன. அவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட கிராந்தி தீர்த்தம் என்ற நினைவுச்சின்னம் 2010 இல் மாண்ட்விக்கு அருகில் கட்டப்பட்டு திறக்கப்பட்டது . 52 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த நினைவுச்சின்ன வளாகத்தில் ஹைகேட்டில் உள்ள இந்தியா ஹவுஸ் கட்டிடத்தின் பிரதி மற்றும் ஷாம்ஜி கிருஷ்ண வர்மா மற்றும் அவரது மனைவியின் சிலைகள் உள்ளன. கிருஷ்ண வர்மாவின் அஸ்தி, அவரது மனைவியின் அஸ்தி மற்றும் இந்திய சுதந்திர இயக்கத்தின் முந்தைய ஆர்வலர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு காட்சியகம் ஆகியவற்றைக் கொண்ட கலசங்கள் நினைவுச்சின்னத்திற்குள் வைக்கப்பட்டுள்ளன. கிருஷ்ண வர்மா 1909 இல் உள் கோயிலில் இருந்து விலக்கப்பட்டார். இந்த முடிவு 2015 இல் மறுபரிசீலனை செய்யப்பட்டது, மேலும் அவரை மரணத்திற்குப் பின் மீண்டும் பணியில் அமர்த்த ஒருமனதாக முடிவு எடுக்கப்பட்டது.

1970களில், அவரது சொந்த மாநிலமான கட்ச்சில் உருவாக்கப்பட்ட ஒரு புதிய நகரத்திற்கு, அவரது நினைவாகவும் மரியாதையாகவும் ஷியாம்ஜி கிருஷ்ணா வர்மநகர் என்று பெயரிடப்பட்டது . இந்திய அஞ்சல் துறை அவரை நினைவுகூரும் வகையில் அஞ்சல் தலைகள் மற்றும் முதல் நாள் அட்டையை வெளியிட்டது. குச் பல்கலைக்கழகம் அவரது நினைவாக மறுபெயரிடப்பட்டது. இந்திய அஞ்சல் துறை 1989 ஆம் ஆண்டு அக்டோபர் 4 ஆம் தேதி ஷியாம்ஜி கிருஷ்ண வர்மாவின் நினைவாக ஒரு அஞ்சல் முத்திரையை வெளியிட்டது.

# கொண்டாட்டம் என்ற பெயரில் ரசிகர்கள் தியேட்டரை சேதப்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும் – அஜித்





ரசிகர்களின் அன்பு காரணமாக தான் நான் இந்த நிலைமையில் இன்று இருக்கிறேன்.

ரசிகர்களின் அன்பையும் கனவை ஈர்ப்பையும் நாம் கண்காணிக்க வேண்டும்.

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான அஜித்குமார், கார் பந்தய வீரரும் கூட. தற்போது வெளிநாடுகளில் நடக்கும் கார் பந்தயங்களில் கலந்துகொண்டிருக்கும் அஜித்குமார் ஹாலிவுட் ரிப்போர்ட்டர் நேர்காணலின்போது பல்வேறு விஷயங்களை மனம் திறந்து பேசியுள்ளார். நேர்காணலில் பேசிய அஜித்குமார், "ரசிகர்களின் அன்பு காரணமாக தான் நான் இந்த நிலைமையில் இன்று இருக்கிறேன். ஆனால் அவர்களின் அன்பையும் கனவை ஈர்ப்பையும் நாம் கண்காணிக்க வேண்டும்.திரையரங்கு உரிமையாளர்கள் பல லட்சங்கள் செலவு செய்து, தியேட்டரை புதுப்பிக்கிறார்கள். ஆனால் கொண்டாட்டம் என்ற பெயரில் திரையரங்கிற்கு உள்ளே பட்டாசுகள் வெடிப்பது, இருக்கைகளை உடைப்பது, Once More கேட்டு திரையை கிழிப்பது இவை அனைத்தும் முடிவுக்கு வரவேண்டும்"என்று தெரிவித்தார்.

இதற்கிடையே, "கரூர் கூட்டநெரிசல் சம்பவத்திற்கு ஒருவர் மட்டும் பொறுப்பல்ல, நாம் அனைவரும் இதற்கு பொறுப்புதான். ஊடகங்களுக்கும் அதில் பங்கு உண்டு. ரசிகர்களின் அன்புக்காகவே நடிகர்களான நாங்கள் உழைக்கிறோம். ஆனால், உயிரைப் பணயம் வைத்து அன்பு காட்ட வேண்டாம். அன்பை காட்ட வேறு வழிகள் உண்டு. முதல் நாள் முதல் காட்சி கலாச்சாரத்தை நாம் ஆதரிக்கக் கூடாது. ஊடகங்களும் பொறுப்புடன் இருக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.



## ஆனந்த்ராஜ், சம்யுக்தா நடித்த 'மதராஸ் மாஃபியா கம்பெனி' டிரெய்லர்

ஒரு தாதாவின் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களைச் சொல்லும் கதைக்களத்துடன் படம் உருவாகி உள்ளது.

பிக் பாஸ் சம்யுக்தா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

அறிமுக இயக்குனர் ஏ.எஸ். முகுந்தன் இயக்கத்தில் உருவாகியுள்ளபடம் 'மதராஸ் மாஃபியா கம்பெனி'. வடசென்னை பின்னணியில் உருவாகி உள்ள இந்த படத்தில் ஆனந்தராஜ் தாதா வேடத்தில் நடித்துள்ளார்.

ஒரு தாதாவின் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களைச் சொல்லும் கதைக்களத்துடன் படம் உருவாகி உள்ளது.

படத்தில் பிக் பாஸ் சம்யுக்தா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். முனிஷ்காந்த், தீபா, ஷகீலா, ராம்ஸ், ஆனந்த் பாபு உள்ளிட்ட பலரும் இப்படத்தில் நடித்துள்ளனர்.

அண்ணா புரொடக்சன்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு ஸ்ரீகாந்த் தேவா இசையமைத்துள்ளார். நேற்று மாலை வெளியிடப்பட்ட படத்தின் டிரெய்லர் கவனம் பெற்று வருகிறது.



நடனம் மூலம் ரசிகர்கள் மனதில் இடம்பிடித்த நட்சத்திரங்களில் ஒருவர் ஸ்ரீலீலா. கடந்த ஆண்டு வெளிவந்த புஷ்பா 2 திரைப்படத்தில் ஒரே ஒரு சிறப்பு பாடலுக்கு நடனமாடி அசத்தியிருந்தார். தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வரும் இவர், தற்போது பராசக்தி படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகவுள்ளார். அதே போல் பாலிவுட்டிலும் Aashiqui 3 படத்தின் மூலம் அறிமுகமாகவுள்ளார். தற்போது இவர் சேலையில் இருக்கும் அழகிய ஸ்டில்ஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது. இதோ,



நடிகை திவ்யா துரைசாமி வெளியிட்ட அழகிய போட்டோஷூட் ஸ்டில்கள். அழகிய புகைப்படங்கள் இதோ.

# அக்டோபர் மாதத்தில் தமிழ் சினிமா பாக்ஸ் ஆபிஸ் வசூல் எவ்வளவு தெரியுமா?

தீபாவளியையொட்டி வெளியான இப்படம் ரசிகர்களிடையே கலவையான விமர்சனங்களை பெற்றாலும் வசூல் குவித்து வருகிறது.

ஒவ்வொரு மாதமும் ரசிகர்களின் விருப்பத்திற்கேற்ப படங்கள் வெளியாகி வருகின்றன. அந்த வகையில், அக்டோபர் மாதம் 'இட்லி கடை', 'காந்தாரா சாப்டர்1', 'டியூட்', 'பைசன்', 'ஆர்யன் ', 'ஆண் பாவம் பொல்லாதது', 'தடை அதை உடை', 'தேசிய தலைவர்', 'ராம் அப்துல்லா ஆண்டனி', 'மெசஞ்சர்', 'பரிசு' உள்ளிட்ட பல படங்கள் வெளியாகின.

இந்த நிலையில், தமிழ் சினிமா அக்டோபர் மாதத்தில் தமிழகத்தில் மட்டும் 200 கோடி ரூபாயை தாண்டி வசூலித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதாவது, 'இட்லி கடை', 'காந்தாரா சாப்டர்1', 'டியூட்', 'பைசன்' ஆகிய 4 படங்கள் மட்டுமே இணைந்து இந்த வசூல் சாதனையை படைத்துள்ளதாக கூறப்படுகிறது.

### இட்லி கடை

தனுஷ் இயக்கி நடித்த படம் 'இட்லி கடை' இப்படத்தில் நித்யா மேனன், ஷாலினி பாண்டே, அருண் விஜய், சத்யராஜ், ராஜ்கிரண் உள்ளிட்டோர் நடித்து உள்ளனர். இப்படம் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்று வசூலும் குவித்து வருகிறது.

### காந்தாரா சாப்டர்1

பலதரப்பு மக்களால் ரசிக்கப்படும் 'காந்தாரா சாப்டர்1' வசூலில் சாதனை படைத்து வருகிறது. படத்திற்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து இப்படத்தின் ஆங்கில வெர்ஷன் நேற்று வெளியானது.

### டியூட்

கீர்த்தீஸ்வரன் இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ள படம் 'டியூட்'. இப்படத்தில் பிரதீப் ரங்கநாதனுக்கு ஜோடியாக பிரேமலு புகழ் மமிதா பைஜு நடித்துள்ளார். இப்படத்தில் சரத்குமார், ரோகினி, ஹ்ரிதுஹரூன், டிராவிட் மற்றும் பலர் நடித்துள்ளனர். சாய் அபயங்கர் இசையமைத்துள்ள இப்படத்தை மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. தீபாவளியையொட்டி வெளியான இப்படம் ரசிகர்களிடையே கலவையான விமர்சனங்களை பெற்றாலும் வசூல் குவித்து வருகிறது.

### பைசன்

மாரி செல்வராஜ் இயக்கத்தில் துருவ் விக்ரம் நடிப்பில் வெளியான படம் 'பைசன்'. இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. மேலும் வசூல் குவித்து வருகிறது.



# One Last Time: மறைந்த அசாம் பாடகர் சுபின் கார்க் நடித்த கடைசி படத்திற்கு மக்கள் அமோக வரவேற்பு



செப்டம்பர் 19 அன்று சிங்கப்பூரில் ஸ்கூபா டைவிங் செய்யும்போது சுபின் உயிரிழந்தார்.

இந்தப் படத்தின் கதயநாயனான சுபீன், பார்வையற்றவராக நடித்துள்ளார்.

மறைந்த அசாம் பாடகரும் இசையமைப்பாளருமான சுபீன் கார்க் நடித்த கடைசி படமான 'ராய் ராய் பியன்னாலே' வெளியாகியுள்ளது.

அசாமி, ஹிந்தி மற்றும் வங்காளம் உள்பட பல மொழிகளில் இதுவரை 38,000 பாடல்களைப் பாடி சாதனை புரிந்து அசாம் மக்களின் அன்பை சம்பாதித்தவர் சுபீன் கார்க்.

இந்நிலையில் அவர் கடைசியாக நடித்த 'ராய் ராய் பியன்னாலே' படம் நேற்று வெளியாகிய நிலையில் முதல் நாளிலேயே அசாமிய பாக்ஸ் ஆபிஸில் நல்ல வரவேற்பை பெற்றது.

ஏற்கனவே ஒரு வாரத்திற்கான டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்ததாகவும் அரங்கம் நிறைந்த காட்சிகளுடன் படம் திரையிடப்பட்டு வருவதாகவும் திரை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் படத்தின் கதயநாயனான சுபீன், பார்வையற்றவராக நடித்துள்ளார். இந்த படத்திற்கு அவரே இசையமைத்துள்ளார்.

இந்தப் படம் ரூ.50 கோடி வரை வசூல் செய்யும் என்று சினிமா வட்டாரங்கள் மதிப்பிடுகின்றன. அசாமில் இதற்கு முன்பு வெற்றி பெற்ற பைமோன் டா, ரகுபதி மற்றும் பிதுர்பாய் போன்ற படங்கள் சுமார் ரூ.13 கோடி மட்டுமே வசூலித்துள்ளன.

செப்டம்பர் 19 அன்று சிங்கப்பூரில் ஸ்கூபா டைவிங் செய்யும்போது சுபின் உயிரிழந்தார். இருப்பினும் அவரின் இறப்பில் மர்மம் நீடித்து வருகிறது. இதுதொடர்பாக விசாரணை செய்ய அசாம் அரசு விசாரணை ஆணையம் அமைத்துள்ளது.

# மெஸன்ஜர் திரை விமர்சனம்




நாயகன் ஶ்ரீராம் கார்த்திக் காதல் தோல்வியால் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார். அப்போது அவரது ஃபேஸ்புக் மெஸன்ஜருக்கு தொடர்ந்து மெசஜ் வந்துக் கொண்டிருக்கிறது. அதில், "தற்கொலை செய்து கொள்ள வேண்டாம், உங்களை நேசிக்கும் பலர் இந்த பூமியில் இருப்பார்கள்" என்ற செய்தி இருக்கிறது. இதை பார்த்து தற்கொலை முயற்சியை கைவிடுகிறார்.

பின்னர் அந்த பெண் யார் என்பதை தேடுகிறார். ஒரு கட்டத்தில் அந்த செய்தியை அனுப்பிய பெண் இரண்டு மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்பதை அறிந்து அதிர்ச்சி அடைகிறார்.

இறந்தவர் எப்படி மெசேஜ் அனுப்பு முடியும், அவர் உண்மையில் இறந்து விட்டாரா? இல்லையா? மெசேஜ் அனுப்பியது யார்? என்பதே படத்தின் மீதிக்கதை.

**நடிகர்கள்**

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் ஶ்ரீராம் கார்த்திக், தனது கதாபாத்திரத்திற்கு முழுமையான நியாயம் சேர்த்திருக்கிறார். அந்த பெண் யார் என்ற தேடுதலும், காதலிப்பதும் என நடிப்பில் ஸ்கோர் செய்து இருக்கிறார்.

நாயகியாக நடித்திருக்கும் மனிஷா ஶ்ரீ, அழகாக வந்து ரசிகர்களை கவர்ந்து இருக்கிறார். குறிப்பாக லிப் லாக் காட்சியில் கவனிக்க வைத்து இருக்கிறார். மற்றொரு நாயகியாக நடித்திருக்கும் பாத்திமா, கிராமத்து பெண்ணுக்கு ஏற்ற முகத்தோடும், எதிர்பார்ப்புகளோடும் தன் கதாபாத்திரத்திற்கு பலம் சேர்த்து இருக்கிறார்.

பாத்திமாவின் தோழியாக நடித்திருக்கும் வைசாலி ரவிச்சந்திரன் நடிப்பு திரைக்கதை ஓட்டத்திற்கு பெரிதும் உதவி இருக்கிறது. ஜீவா ரவி, லிவிங்ஸ்டன், பிரியதர்ஷினி ஆகியோர் அனுபவ நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

**இயக்கம்**

நாம் நிறைய காதல் படங்களை பார்த்து இருப்போம். ஆனால், யாரும் எதிர்பார்த்திராத காதல் கதையை சொல்லி இருக்கிறார் இயக்குனர் ரமேஷ் இளங்காமணி. யாரும் சிந்திக்காத கதையை, தனது கற்பனை கலந்து திகில் மற்றும் ஃபேண்டஸி படமாக கொடுத்து இருக்கிறார். வித்தியாசமான சிந்தனை மற்றும் விபரீதமான காட்சியமைப்புகள் இருந்தாலும் ஒரு சில காட்சிகளில் கொஞ்சம் சுவாரஸ்யம் கூட்டி இருக்கலாம்.

**இசை**

இசையமைப்பாளர் அபுபக்கர்.எம் இசையில் பாடல்களும், பின்னணி இசையும் படத்திற்கு பலம் சேர்த்து இருக்கிறது. பின்னணி இசையை ஓரளவிற்கு ரசிக்க முடிகிறது.

**ஒளிப்பதிவு**

ஒளிப்பதிவாளர் பால கணேசன் தனது பணியை சிறப்பாக செய்து இருக்கிறார்.

**படத்தொகுப்பு**

இயக்குனரின் முயற்சியை சிறப்பாக உள்வாங்கி பணியாற்றியிருக்கும் படத்தொகுப்பாளர் பிரசாந்தின் பணியும் பாராட்டும்படி உள்ளது.



## மிருணாள் தாகூர்

சின்னத்திரையில் சீரியல் நடித்து மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றவர் மிருணாள் தாகூர். பின் சினிமாவில் நுழைந்து படங்கள் நடித்து, தற்போது பாப்புலர் நடிகையாக அதிக சம்பளம் பெற்று வருகிறார்.

பாலிவுட் திரையுலகில் நடித்து வந்த மிருணாள் தாகூருக்கு சீதா ராமம் படம் நல்ல பிரபலத்தை தென்னிந்திய சினிமாவில் ஏற்படுத்தி கொடுத்தது. இந்த படம் மூலம் தென்னிந்திய சினிமா ரசிகர்களின் மனதிலும் இடம் பிடித்தார். தற்போது சேலையில் கலக்கும் நடிகை மிருணாள் தாகூரின் லேட்டஸ்ட் ஸ்டில்ஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# 29 அறுவை சிகிச்சைகள்! இரண்டு மாதத்தில் புதிய அறிவிப்பு

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான அஜித்குமார், கார் பந்தய வீரரும் கூட. தற்போது வெளிநாடுகளில் நடக்கும் கார் பந்தயங்களில் கலந்துகொண்டிருக்கும் அஜித்குமார் தனது திரைப்பயணம் குறித்து மனம் திறந்துள்ளார். அதன் விவரம் வருமாறு:-

"நான் சினிமாவுக்கு வந்த புதிதில் தமிழ் பேச தெரியாது. தமிழை கற்றுக்கொண்டு பேச கடுமையாக உழைத்தேன். அந்த போராட்டம் பெரியது. வந்த புதிதில் உன் பெயர் பிரபலமான பெயர் போல இல்லையே... பெயரை மாற்றுப்பா... என்றார்கள். ஆனால் சினிமாவுக்காக என் பெயர் உள்ளிட்ட அடையாளத்தை மாற்ற விரும்பவில்லை. எனவே வேறு பெயரை சூட்டவில்லை.

நான் அடைந்த வெற்றிகள் எளிதாக கிடைத்தது அல்ல. கடின உழைப்புக்கும், விடாமுயற்சிக்கும் பின்னரே அவை சாத்தியமானது. சவால்களைத் தாண்டி பயணிக்கும் நான், இன்றைக்கும் கார் ரேசிங்கில் 19 வயது வாலிபராக உழைக்கிறேன். கவனம் செலுத்துகிறேன்.

ஹாலிவுட் நடிகர் பிராட்பிட் நடித்த 'எப்.1' படம் போல இந்தியாவில் புதிய படமோ அல்லது அதன் ரீமேக்கோ உருவாக்கப்பட்டால் நடிப்பீர்களா? என்று கேட்கிறார்கள். எந்த வகையிலாவது இந்த விளையாட்டை பிரபலப்படுத்த முடிந்தால் அது எனக்கு மகிழ்ச்சி தானே...

அறிவும், விழிப்புணர்வும் தான் கார் ரேசின் அடிப்படை. கார் ரேசில் சில விபத்துகளைச் சந்தித்தேன். காயங்கள் இருந்தாலும் ரேசை நல்லபடியாக முடிக்கவே என் மனம் நாடும். அந்தவகையில் பந்தயத்தில் இருந்து விலகும் அளவுக்கு எனக்கு காயங்கள் ஏற்படவில்லை. அதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். கார் பந்தய வீரர்கள் காயங்களையும், விபத்துகளையும் எதிர்கொள்வது வழக்கம்தான். நான் 29 அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டிருக்கிறேன். நான் நடிகன் என்பதால் அது பெரியளவில் பேசப்படுகிறது.

பொருளாதார ரீதியில் நாம் முன்னேறும்போது தான் சில திட்டமிடல்கள் சாத்தியமாகும். தருபவரா, பெறுபவரா? என்பதை நாம்தான் முடிவு செய்யவேண்டும். ஏனெனில் செல்வம் சில நேரங்களில் நம்மை ராட்சசனாக மாற்றிவிடும். வெற்றி என்பது காட்டுக்குதிரை. யாரும் அதில் ஏறலாம். ஆனால் அந்த குதிரையை அடக்க முடியாவிட்டால், அது உன்னை கீழே தள்ளிவிடும்.

இப்போதில் இருந்து வருகிற மார்ச் மாதம் வரை கார் ரேசில் பிசியாக இருக்கிறேன். எனவே இந்த காலகட்டத்தில் படப்பிடிப்பில் நான் கலந்துகொள்ள முடியாது என்றாலும், எனது புதிய படத்தின் அறிவிப்பு அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் வெளியாகும்.

எனது இத்தனை ஆண்டு பயணத்தில் எனக்கு பக்கபலமாக இருக்கும் என் மனைவி ஷாலினி, என் பிள்ளைகள் மற்றும் திரையுலகினர், ரசிகர்களுக்கு என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன்."

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

'குட் பேட் அக்லி' படத்தை தொடர்ந்து ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் மீண்டும் அஜித்குமார் புதிய படம் நடிக்கவுள்ளார். இது அவரது 64-வது படம் என்பது குறிப்பிடத்தக்கது.






# தயாரிப்பாளர் ஆனார் நடிகர் ஆரவ்!



'பிக் பாஸ்' டைட்டில் வின்னரான ஆரவ், 'மார்க்கெட் ராஜா எம்பிபிஎஸ்' படம் மூலம் ஹீரோவானார். பின்னர் 'ராஜபீமா', 'மாருதி நகர் போலீஸ் ஸ்டேஷன்' ஆகிய படங்களில் ஹீரோவாக நடித்த ஆரவ், மகிழ் திருமேனி இயக்கத்தில் உதயநிதி ஹீரோவாக நடித்த 'கலகத் தலைவன்' படத்தில் வில்லனாக நடித்தார். அஜித்தின் 'விடாமுயற்சி' படத்திலும் நடித்திருந்தார். இவர் இப்போது தயாரிப்பாளர் ஆகியிருக்கிறார்.

இதுபற்றி அவர் கூறும்போது, "கடந்த பல ஆண்டுகளாக மக்கள் அளித்த அன்பும் அங்கீகாரமும், எனக்கு பெரும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் வழங்கியதோடு, அழகான திரைப்பட உலகின் ஒரு பகுதியாகவும் மாற்றியுள்ளது.

இப்போது அந்தப் பயணத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லும் நோக்கில், எனது திரைப்பட தயாரிப்பு நிறுவனமான "ஆரவ் ஸ்டுடியோஸ்" தொடக்கத்தை அறிவிப்பதில் பெருமை கொள்கிறேன்.

இது, கதை சொல்லும் கலையின்மீது உள்ள தீவிரமான ஆர்வத்திலிருந்தும், ஆழமான அன்பிலிருந்தும் உருவானது. விஷுவல் மற்றும் கிரியேட்டிவ் உலகில், இதுவரை சொல்லப்படாத இயல்பான கதைகளை உருவாக்கும் நோக்குடன், இந்த நிறுவனம் உருவாகியுள்ளது. இதயங்களைத் தொடும் சிறந்த படங்களைத் தொடர்ந்து உருவாக்கும் நம்பிக்கையுடன், நன்றியுடன், எங்களின் இந்த சினிமா பயணத்தைப் பெருமையுடன் தொடங்குகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

நடிகை ருக்மிணி வசந்த் தற்போது இந்திய அளவில் பிரபலமாகிவிட்டார். குறிப்பாக காந்தாரா சாப்டர் 1 படத்தின் வெற்றி அவரை அடுத்தகட்டத்துக்கு கொண்டு சென்றுள்ளது.

இப்படத்தை தொடர்ந்து அடுத்ததாக இயக்குநர் பிரஷாந்த் நீல் இயக்கத்தில் ஜூனியர் என்டிஆர் உடன் இணைந்து நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது நடைபெற்று வருகிறது.

**போட்டோஷூட்**

முன்னணி நடிகையாக வலம் வரும் ருக்மிணி வசந்த் ட்ரான்ஸ்பரென்ட் சேலையில் எடுத்துக்கொண்ட அழகிய போட்டோஷூட் புகைப்படங்கள் வெளியாகியுள்ளது. ரசிகர்களை கவரும் ருக்மிணி வசந்தின் போட்டோஷூட்.

# ராம் அப்துல்லா ஆண்டனி திரை விமர்சனம்

பள்ளியில் படிக்கும் மாணவர்கள் ராம், அப்துல்லா, ஆண்டனி. வெவ்வேறு மதத்தைச் சேர்ந்த இவர்கள் மூன்று பேரும் நண்பர்கள். ஒரு நாள் ராம், அப்துல்லா, ஆண்டனி ஒன்றிணைந்து தொழிலதிபரான வேல. ராமமூர்த்தியின் பேரனை கடத்தி துண்டு துண்டாக வெட்டி கொலை செய்து சாக்கு மூட்டையில் போட்டு விடுகின்றனர்.

இதனை போலீசாக வரும் சௌந்தரராஜன் கண்டுபிடிக்கிறார். கொலை சம்பந்தமாக விசாரணையை மேற்கொள்கிறார். ஒரு கட்டத்தில் உண்மை தெரியவர 3 பேரையும் கைதும் செய்து சிறையில் அடைக்கின்றனர்.

பள்ளியில் படித்து வரும் மாணவர்கள் கொலை செய்யும் அளவுக்கு ஏன் இவ்வளவு கொரூரமாக இருக்கின்றனர்? தொழிலதிபரின் பேரனை எதற்காக கடத்தி கொலை செய்தனர். சிறுவர்கள் இவ்வாறு மாறியதற்கு காரணம் என்ன என்பது படத்தின் மீதி கதை.

**நடிகர்கள்**

படத்தின் கதைக்கு ஏற்ப பூவையார், அர்ஜுன், அஜய் அர்னால் ஆகியோர் நடித்துள்ளனர். தலைவாசல் விஜய், சௌந்தரராஜன் கதாப்பாத்திரத்திற்கு பொருத்தமாக நடித்துள்ளனர்.

**இயக்கம்**


ஜெயவேல் எழுதி இயக்கியுள்ள படம் சுவாரஸ்யமான படமாக்கல் மற்றும் இயல்பான காட்சிகளைக் கொண்டு செல்கிறது. சிறுவர்களின் ஆரம்பக் காட்சிகளில் செய்யும் காட்சிகளை திகிலூட்டுகிறது. சாய் தீனா கவனிக்க வைத்துள்ளார். கிளைமேக்ஸ் காட்சி உருக்கம்.

**இசை**

படத்தின் பின்னணி இசை மற்றும் பாடல்களில் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம் புதுமுக இசையமைப்பாளர் டி.ஆர்.கிருஷ்ணசேத்தன்.

**ஒளிப்பதிவு**

கதைக்கு ஏற்ற மேக்கிங் இல்லை. கதையில் சுவாரஸ்யம் இருந்தாலும் மிகவும் சாதாரணமான காட்சிகளாக நகர்கிறது.






## நேர மேலாண்மை

பாயும் நதிகளுக்கும்
பெருகி ஓடும்
வெள்ளத்திற்கும் கூட
அணை போட
முடிகின்றது கடிகாரத்தின்
கால்களைக்கட்டிப்
போடமுடியவில்லை!

இயந்திர மனிதர்கள்
கடிகாரத்தின் பின்னால்
ஓடிவர முடியாமல்
விழிப்பிதுங்கி நிற்கிறார்கள்!

வேடிக்கை மனிதர்களோ
உறங்கும் நேரத்தில்
விழித்திருப்பதும்
விழித்திருக்கும்
நேரத்தில்
உறங்குவதும்
வாடிக்கையாகிவிட்டது!


இங்கே
காலந்தவறாமையை
கடைப்பிடிப்பதாய்ப்
பாவனைகள் செய்யும் சிலர்
கடமைகளைச்
செய்யும் நேரங்களில்
கனவுகளில்
களித்திருக்கிறார்கள்!

தவிர்க்க முடியாத
தாமதங்களில் சிக்கித்
தவிக்கும் சிலர்
கடமைகளைக்
கண்ணியமாய்ச்
செய்து முடிக்கிறார்கள்!

கால அட்டவணைகளைத்
தீர்மானித்து செயல்
திட்டங்களை வரையறைக்குள்
நெறிப்படுத்தி அன்றாட
பயணங்களை வகுத்து
விட்டால் இடையூறுகளைத்
தவிடு பொடியாக்கி
வெற்றியின் சிகரங்களில்
கொடிக்கட்டி பறக்கலாம்!



**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்



## அப்துல் கலாம் ஐயா

ஏழைப் பங்காளன்
எளிமையின் மறுபெயர்
ஏவுகணை நாயகன்
ஏ.பி.ஜே என்பவன்

விஞ்ஞானத்தின் வித்தவன்
விமானி ஆனவன்
ராமேஸ்வரத்தின் வரமவன்
பாரதத்தின் ரத்தினம்

ஏழையாய்ப் பிறந்தாலும்
கோழையாய் வாழவில்லை
குடிமக்களுக்காக வாழ்ந்தக்
குடியரசுத் தலைவன்

கல்விக் கற்றலை
செம்மை படுத்தியவன்

சாதி மதம் தாண்டி
சமத்துவமானவன்

ஐஐடியில் இயற்பியல்
பட்டமும் பெற்று
அணுசக்தி வளர்ச்சிக்கு
அயராது உழைத்து

உலகம் போற்றும் மாபெரும்
சக்தியாவான்
எழுத்தாளனாக பேச்சாளனாக
உலகைக் கவர்ந்து

அறிவியல் தொழில்
நுட்பத் துறைகளில்
நினைத்ததைச் சாதித்த
நிறைவான மனிதன்

இந்தியா வல்லரசாவது
இளைஞர்கள் கையில்
இருப்பதாகச் சொல்லி
உத்வேகம் தந்தவன்



மேகாலயாவில்
மேடைப்
பேச்சின்
மூச்சை
விட்டவன்

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

மெதுவாகப் புறப்பட்டு,
படிப்படியாக வேகமெடுத்து,
விரைந்து செல்லும்
தன்னைப் போலல்லாது,
விரைவாகத் தொடங்கி,
வீணே தடுமாறி,
மெதுவாக
முடியும்
மனிதர்
வாழ்க்கையைப்
பார்த்து
பரிகசிக்கிறது
ரயில்.



**கே. பி. ஜனார்த்தனன்**



## கண்ணாடி வளையல்:

செவிகளுக்குத் தரும்
சிங்காரச் சத்தம்

மங்கல நிகழ்வின்
மதிப்புக் கூட்டி
எங்கும் நிறைந்திருக்கும்

பொன் நிகரென
மண்ணில் உருவாகி
மனமெல்லாம்
மகிழ்ச்சியாக்கும்

வண்ணங்களில் வகையாகி
எண்ணங்களில்
உயர்ந்திருக்கும்

பெண்மையின்
அடையாளமாகி
பெருமை காக்கும்

இளமையில் தொடங்கி
முதுமை வரை
உடனிருக்கும்

கருவறையில் காதில்
விழுந்து கருத்தாங்கும்
நேரம்சுகமாகும்

இனிய ஒலிகளின் நாதமாய்
இல்லறத்தில் இனிமையாய்
பேறுகாலத்தில் உறவாய்
பெண்மை பேசி நிற்கும்

எளிமையின் பிறப்பிடம்
எழிலின் இருப்பிடம்
கண்ணாடி
வளையல்
காது வருடும்
சத்தத்தின்
ஆனந்தப்
பாட்டு.



**தமிழ்நிலா**

மழை பெய்ய வேண்டுதல்
மொட்டையடித்தன மரங்கள்
இலையுதிர் காலம்

செதுக்கு சிலையாவேன்
சிற்பியிடம் வேண்டுகிறது
தவமிருந்த கல்

வலிகள் இல்லாத
உறவுகள் ஏதேனும்
உண்டா?????
இருந்தால் சொல்லுகள்...

இனிமேலும் வலிகள் தரும்
இந்த உறவுகளுடன் வாழ...

என்னாலும் முடியாது
என் மனதாலும் முடியாது....

வலிகள் நிறைந்த
இந்த உலகை விட்டு
செல்கிறேன்.... நிம்மதியை
தேடி.........!!!!!!!!!!

கொண்டாட்டம்
போராட்டம் மாறாட்டம்
இறுதியில் ... குத்தாட்டம்
எல்லாம் முடிந்தபின்னே
தெளிந்த நீர் ஓட்டம்
ஆயிடும் வாழ்க்கை ....

கஷ்டங்கள் கவலைகள்
என்பன எல்லாம்
நம் மனமெனும்
கிணற்றில் நாமே தேக்கி
வைத்த பாசி நீர் ...!!
நாம்
நினைத்தால்
மட்டுமே
சுத்தம்
செய்யலாம்...!!



**கவிஞர்**
**பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

காதலைப் பாடாத
கவிஞனில்லை என்பதுபோல்
காதலைப் பாடாதவன்
கவிஞனே இல்லை.
எழுதி முடித்தபின்னும்
இன்னும் இருக்கிறது
காதல் குறித்து எழுதவும்
கவிதைகள் எழுதி மகிழவும்

அரைத்த மாவுதான் எனினும்
அரைத்துக் கொண்டே
இருக்கிற அதிசயமே காதல்,
கவர்ந்து கலந்து கரைந்து
பிரிந்து உருகிக் கிடந்தும்
மறக்க முடியாத விருந்து

பிரிந்த நோய்க்குத் தெரிந்த
வரைக்கும்
இல்லை
இதுபோன்ற
மருந்து.



**சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சிக்கோட்டை



## தொடர்

நீ வெட்கத்தை
உடைக்க ஆரம்பித்து
அது தொடர்கிறபோது
மிகவும் அழகாகி விடுகிறது
நம் கா த ல்!

## மிச்சம்

அடுத்த முறை சந்திக்க
என்னை வரவைப்பதற்காகவே
மு த் த ங் க ளை க்
கொஞ்சம் மிச்சம் வைத்து
விடுகிறாய் நீ!

## குத்தகை

கா த லை
க்குத்தகைக்கு
எடுத்திருக்கிறேன்
மொத்த
அன்பையும்
ஆசையையும்
உன் மீது(மட்டுமே)
வைப்பதற்காக!

## உயிர்

என் கனவுகளுக்கும்
கற்பனைகளுக்கும்
உயிர் கொடுத்த போது தான்
கண்டுபிடித்தேன்!
நீதான் என் கா த லி
என்பதை!

## நீ

மொத்த அன்பையும்
குத்தகைக்கு எடுத்து
விட்டாய் அதனால்தான்
முடிவெடுத்தேன் தோழி
காதலி மனைவி என
எல்லாமே நீதானென்று!

## சிறகு

உன்னைப்பார்த்த பிறகு
என் கனவுகளுக்கும்
கற்பனைகளுக்கும் மட்டுமல்ல
காதலுக்கும் (கூடச்) சிறகுகள்
முளைத்து விட்டது!

## குறிக்கோள்

என்னைக்குளிர்விப்பதையும்
தகிக்க வைப்பதையுமே
குறியாகக்கொண்டிருக்கிறது
உன் கா த ல்!

## வாழ்க்கை

எல்லாமாக நான்
உன்னை நினைத்த பின்தான்
எனக்குத்தெரிந்தது
நீ(மட்டும்)தான் என்
வாழ்க்கையென்று!

## வார்த்தைகள்

உன்னைக்காதலிக்கிறேன்
என்கிற உன்
இரு வார்த்தைகளில் தான்
அடங்கியிருக்கிறது என்
உயிரும் வாழ்க்கையும்!



## நான்

ஐ லவ் யூ என்று நீ
சொல்லும் ஒவ்வொரு
முறையும் புதிதாய்ப்
பிறக்கிறேன் நான்!

**முத்து ஆனந்த்** வேலூர்

## கன்னடமே வாழி.!

கரும்பே.. தேனே..
கன்னடமே.! காற்றில்
கலந்த சந்தனமே!

மலையில் பிறந்த
மரகதமே..! மணக்கும்
மல்லிகைப் பூச்சரமே!

குடகே.. கொஞ்சும்
காவிரியே.. குணமே
கோடிப் பொன் தங்கமே!

துங்கா நதியின்..
செம்பகமே.. தூய அகிலின்
விளைநிலமே!

எங்கும் அமைதி
தவழ்கின்ற.. எழிலே
இயற்கை சீதனமே!

மண்ணுடன் பிறந்த
கன்னடமே! மலையாய்
உயர்ந்த கன்னடமே!


தமிழுடன் பிறந்த
கன்னடமே.. தாயென
தாங்கும் பொன்நிலமே!

உன்னுடன் பிறந்தோம்
கன்னடமே.. ஒற்றுமை
குணமே.. கன்னடமே!

எல்லா மொழியும்
தாய்தானே.. இனிக்கும்
கன்னடம் வாழியம்மா!

தமிழும் கன்னடம்
ஒன்றிணைந்து..
தலைநிமிரந்தே
வாழியென்பேன்!

**வே.கல்யாண்குமார்.**



## என் காதலனே...

அழகு பொய்கள்
ஆயிரம் சொன்னேன்
கவிதை வரியில் மட்டுமே
காதலில் இல்லை

உன்னையே நினைத்து
துடிக்கத் தெரிந்த
என் இதயத்திற்கு
நடிக்க தெரியாது

உன் பிரிவின் தாக்கம்
என்னை வாட்டுமென்று
தெரிந்திருந்தால்
கருவிலே கருகியிருப்பேன்

முட்கள் கிழிக்காமலே
ரத்தக்கண்ணீர் வடிக்கிறது
என் கண்கள்
உன்னை பார்க்க முடியாமல்

மறைந்திருக்கும்
என் இதயத்திற்குள்
உன்னை
மறைத்துத்திருப்பதை
எப்படி சொல்வேன்

ஆயிரம் நட்சத்திரங்களை
ஒன்று சேரவிடாத
வானைபோல் ஆயிரம்
ஆசைகளைக் கொண்ட
நம் காதலை பிரிக்கிறதே
விதி

சுற்றியுள்ள தடைகளை
மீறவும் முடியவில்லை
என்னைச் சுற்றி வரும் உன்
நினைவுகளை
மறக்கவும் முடியவில்லை

முகவரி தந்த காதலனே
உன் முடிவுரை
மரணம்
என்றால்
என் முடிவும்
அது தான்



**பாரதி முத்து**
ஓட்டேரி
வேலூர்

## கவிதையாம் கவிதை.!

நினைப்பதெல்லாம் எழுதிவிட்டால்.. அதன்பேர் கவிதையல்ல!
எழுதியதை எழுதுவதும் இங்கொரு கவிதையல்ல..!

புதிதாய் விதைமனம் தோன்றும்! புறம் அது அனுபவம் கூடும்!
சிதையின் நெருப்பாய் சிலிர்த்தெழும் உணர்ச்சியில்.. கவிதை
யாருக்கும் தோன்றும்!

இதயத்துள்ளே துடிப்பையெல்லாம் எழுத்தாய் எழுதிவைப்போம்..
எவர் இதனை ஏற்றாலும்.. உயிர் எழுத்திலே கவிவடிப்போம்!

இலக்கணப் பாதையில் சிலபேர்.. புதுக்கவிப் பாதையில்
சிலபேர்.. இதுதான் கவிதை! இதுதான் கவிதை.. என்பதனால்
அது கவிதையல்ல! படிப்பவரின் நெஞ்சினிலே.. பற்றிடும்
தீயினிலே.. படித்தவுடன் உணர்வுகளில் கலப்பதுவே கவிதை.! !

**வே.கல்யாணகுமார்.**




## தமிழ்நாடு நாளைப் போற்றுவோம்!

எண்சீர் மண்டிலம்.

தமிழ்நாடு மாநிலமே
உருவான நாளாம்
தக்கநல்ல மொழியாலே
பிரிந்திட்ட நாளாம்!
கமழ்கின்ற தமிழர்க்காய்க்
கண்டிட்ட நாளாம்!
அமைந்திட்ட தமிழ்மக்கள்
வாழ்த்துகின்ற நாளாம்
ஆன்றநல்ல ஆன்றோர்கள்
சாற்றுகின்ற நாளாம்!
இமைக்கின்ற காலமும்தான்
காப்பாற்றும் நாளாம்
இன்னல்கள் காணாமல்
போகின்ற நாளாம்!
மொழிவாரி மாநிலமாய்
உருவான நாளாம்
மேன்மைமிகுத் தமிழர்க்காய்த்
திருவான நாளாம்!
அழியாத தமிழ்நாட்டின்
அழகான நாளாம்
அன்புக்கே பேர்போன
அருளான நாளாம்!
விழிப்புணர்ச்சிச்
செயல்படுத்திக்
கொண்டாடும் நாளாம்
வீறுகொண்டு எழுச்சியுடன்
வெற்றியான நாளாம்!
ஒழுக்கந்தான் மேன்மையினை
உரைக்கின்ற நாளாம்
ஒற்றுமைக்கு வித்திட்ட
ஒண்மையான நாளாம்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## தங்கமே, எங்கே போகிறாய்?

ஆகாய விமானம் போலப்
பறக்கிறாய்,
ஏழைகளுக்கு கனவாகி
விடுவாய் போலே...
புன்னகையே
போதும் பொன்னகை
வேண்டாம் என்று
தங்கமே உன்னை
ஒதுக்கி விடுவாரோ
தங்க நகைகளை பார்க்கும்
போது அங்கமெல்லாம்
சிலிர்த்துப் போகிறது.
ஓவியத்திலும் காவியத்திலும்
மட்டுமே உன்னை இனி
ரசிப்போம்
அணிந்தால் கள்வர்
பயம் என்பதால்
தங்கமே நீ ஆகாய
விமானமாகவே இரு...




**உஷா முத்துராமன்**

# நூல் விமர்சனம்

**"இல்லோ இல்லு" ஆங்கிலக் கதை**

**டாக்டர் ஆர். சிதம்பர நடராஜன்**

**"iLLo iLLu" – குடும்பம், மர்மம், மற்றும் வேடிக்கை நிறைந்த ஆங்கிலக் கதை: வி. மாதங்கியின் படைப்பு.**




"iLLo iLLu" (Illogical Illusion என்பதன் சுருக்கம்) என்ற இந்தச் சிறிய புத்தகம், அன்பான, பரபரப்பான ஒரு குடும்பத்தின் மையத்திற்குள் செல்லும் ஒரு இனிமையான, கற்பனைத் திறமிக்க சாகசமாகும்.

இளம் தமிழ்ப் பெண் எழுத்தாளர் வி. மாதாங்கி எழுதியுள்ள இந்தக் கதை, சோமு, ரஷ்மி மற்றும் அவர்களின் சுறுசுறுப்பான இரண்டு குழந்தைகள் ராம், ஷியாம் அத்துடன், அருமையான குழந்தை சாரா ஆகியோருடன் ஒரு சிறிய, உற்சாகமான பயணத்தை நம்மை அழைத்துச் செல்கிறது. இந்தப் புத்தகம் அடிப்படையில் மர்மம் மற்றும் குடும்ப வாழ்வின் ஒரு பகுதி ஆகியவற்றின் கலவையாகும்.

பின்புறத் தோட்டத்தில் இருந்து திடீரெனக் கேட்கும் மர்மமான "தடக் தடக் தடக் தடக்" என்ற சத்தத்துடன் முழு கதையும் தொடங்குகிறது! இது உடனடியாகக் குடும்பத்தினரை (மற்றும் வாசகர்களை!) பதட்டமடையச் செய்கிறது. இந்த குழப்பத்தின் நடுவே, உண்மையிலேயே வேடிக்கையான, நம்பக்கூடிய குடும்பத் தருணங்களைக் காண்கிறோம்.

உதாரணமாக, அப்பா சோமு தவறுதலாக ஒரு பானையை உதைப்பது, மற்றும் குழந்தைகள் பாதுகாப்பிற்காகப் பெற்றோரின் இடுப்பில் ஏறிக்கொள்வது போன்றவை. ஒரு இனிமையான, லேசான பயமுறுத்தும் தருணமும் வருகிறது—குழந்தைகளின் முதுகில் மர்மமான சிவப்புக் கைரேகைகள் பதிவது, அது கடைசியில் ஒரு சாயம் சம்பந்தப்பட்ட ஒரு எளிய, வேடிக்கை யான விபத்து எனத் தெரியவருகிறது.

"iLLo iLLu" பற்றி நான் அதிகம் விரும்பியது, ஆசிரியரின் பேரார்வம். இதை எழுதுவதில் அவர் முழு மனதையும் கொட்டியிருக்கிறார் என்பதை உணர முடிகிறது. கதையின் ஓட்டம் வேகமாக இருப்பதால், ஆரம்பத்தில் ஏற்பட்ட அந்தச் சத்தத்தை யார் அல்லது எது ஏற்படுத்தியது என்று அறிய, பக்கங்களைத் தொடர்ந்து திருப்பிக் கொண்டே இருக்கத் தூண்டுகிறது.

ஆங்கில மொழி சில இடங்களில் சற்றுச் சவாலாக இருக்கலாம் என்றாலும், அது கதைக்கு ஒரு தனித்துவமான, நேர்மையான குரலைக் கூட்டுகிறது, பாத்திரங்களையும், பின்னணியையும் மிகவும் உண்மையாக உணர வைக்கிறது. இந்தப் புத்தகம் குடும்பப் பிணைப்பையும் கற்பனையையும் கொண்டாடுகிறது.

இது ஊக்கமளிக்கும் ஒரு வாசிப்பு மற்றும் எழுத்துலகில் ஒரு அருமையான முதல் அடியாகும். குடும்பம், நட்பு, மற்றும் சிறிய மர்மங்களைத் தீர்க்கும் துரிதமான, வசீகரமான கதைகளை நீங்கள் ரசிப்பவராக இருந்தால், "iLLo iLLu" ஐ நிச்சயமாகப் படித்துப் பாருங்கள். ஒரு சிறந்த கதை எங்கிருந்தும் வரலாம், அதைக் கூறுவதுதான் மிக முக்கியம் என்பதை இது நிரூபிக்கிறது!



இந்தப் புத்தகத்தின் விலை ₹60, இதை பாக்கிடெர்ம் டேல்ஸ் (Pachyderm Tales) பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

பி.கு: மாதங்கியின் தாயார், தமிழ்க் கவிஞரும் எழுத்தாளருமான வி. பிரபாவதி என்பது கொசுறு; புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

Pachyterm Tales
Printers: Pusthaka
Name: Illo Illu (English)
Author: V Mathanghi
Rate: Rs.60/- only




## ரதி !



அமுதைப் பொழியும்
நிலவு சிரித்தது
அவளின் அழகு வதனம்
கண்டு மீன்கள் துள்ளி
விளையாடின அவளின் கயல்
விழிகள் கண்டு ரோஜா
மயங்கியது அவளின்
சிவந்த உதடுகள் பார்த்து
காகம் தலை சாய்த்து
நோக்கியது அவளின் கார்
குழல் கண்டு எலுமிச்சை
வியந்தது அவளின் மஞ்சள்
நிற பொன் மேனியை
பார்த்து கொடியிடையாளின்
நடையழகு கொள்ளை
கொண்டது மனதை
இந்த ரதியை
ஆட்கொள்ள
எந்தமன்மதனுக்கு
அதிர்ஷ்டமோ!



**வி.கே.**
**லக்ஷ்மிநாராயணன்**
சென்னை

வாழ்வு பெறும் மேகம் வானின்
தட்டுகளோ– அது
கவிழ்ந்தால் மழையாய்
கொட்டிடுமோ!மேதினி
மீதினில் பட்டிடுமோ– அதில்
மேவும் நன்மைகள்
கிட்டிடுமோ!

ஏகும் பறவைகள் குரலெடுத்து
ஏர்பிடி உழவர்கள் உழுது
விட்டு
தாகம் எடுத்து குடிப்பனரோ–
இனி தாக்கும் வெக்கையை
அடிப்பனரோ!

சாகும் உயிரினம் தனை
காத்து சந்தம் படிக்கிற
குளிர் காத்து வாகாய்
வளமதை தந்திடுமோ–
இல்லைவறட்சியினாலே
வெந்திடுமோ?

ஈகும் மழையினை வான்
மேகம் ஈன்றாள் தானே
பசுமை பெறும்!ஈங்கே மக்கள்
மாடுகளும் –நல்
ஈரத்தாலே வாழ்வு பெறும்!
மேகம் வானின் தட்டுகளோ
–அது கவிழ்ந்தால் மழையாய்
கொட்டிடுமோ!
மேதினி மீதினில் பட்டிடுமோ–
அதில்
மேவும்
நன்மைகள்
கிட்டிடுமோ!?




**வெ.தமிழழகன்**
எம்ஏ.பிஎட்
சேலம்.

## நாவடக்கம்!

அறுசீர் மண்டிலம்.

ஆவலினால் அதிகமாகப்
பேசாதே அன்பான
பேச்சுக்கே மதிப்புண்டு!
மேவுகின்ற வகையினிலே
பேசினாலே மேன்மையென்றே
போற்றிடுவர் எல்லோரும்!
பூவினைப்போல்
மென்மையாகப்பேசிடுவாய்
புத்தெழுச்சி கொண்டேதான்
பேசிடுவாய்!
நாவடக்கம் எந்நாளும்
நல்லதன்றோ நாளும்தான்
சிந்தித்துப்பேசலாமே!
நாவாலே கெட்டவர்கள்
பலருண்டு நன்மையின்றித்
தின்மையினைப்பெற்றாரே!
ஏவுமாறு எப்போதும் பேசாதே
எழிலாக எஞ்ஞான்றும்
பேசிடுவாய்!
கூவுகின்ற முறையினிலே
பேசாதே கொஞ்சுகின்ற
தமிழ்போலப் பேசிடுவாய்!
நாவடக்கம் எந்நாளும்
நன்றன்றோ நாளும்தான்
சிந்தித்துப் பேசலாமே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## சதயவிழா காணும் பேரரசன்!

வெண்கலிப்பா.

பேரரசன் ராசராசன்
பெருமைமிகு அரசனே
வீரமிகு நல்லோன்
விளைவித்தான் ஆலயங்கள்!

தஞ்சைப் பெருவுடையார்
தக்கநல் ஆலயத்தை
நெஞ்சார்ந்து கட்டினார்
நேர்ந்திட்ட சோழனே!

ராணுவத்தால் நாட்டையே
ரத்தினமாய்க் கண்டாரே
மாணும் வகையில்
மணியாக நன்மைசெய்தார்!

அருண்மொழித் தேவனென்ற
அன்பான பேரால்
திருவாகக் கண்டான்
தெளிவான சோழனே!

திருமகள் போலவே
தேர்ந்த மெய்க்கீர்த்தி
அருமையாய்க் கண்டார்
ஆன்ற சோழனே!

சதயத் திருவிழாவை
சாந்தாய்க் கொண்டாடி
இதயத்தில் ஏற்போம்
ராசராச னையே!

சோழ மரபினரின்
சுந்தரப் பொற்காலம்
ஆழவே சிந்தித்து
அனைத்தையும் செய்தான்!

புதிய எழுச்சியைப்
பூத்திடும் வகையிலே
உதயமாகச் செய்தானே
உத்தம ராசராசன்!

உலகப் புகழ்பெற்ற
உன்னத அரசன்
கலைகளைக் கண்டான்
வளர்த்தான் நலமாய்!

சோழனின் வரலாறு
சொகுசான பாடமே
ஈழமும் படையெடுத்து
இனிய வெற்றிகண்டான்!



சதய விழாநாளில்
சங்கினை ஊதியே
இதயத்தால்
வாழ்த்தலாம் இன்று!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## தம்பி

ஓடும் இரயிலில் ஏறாதே
உயர்ந்த உயிரை இழக்காதே!
ஆடிப்பாடி மகிழும் வயதில்
அடிபட்டு நீயும் சாகாதே!
சாலை விதிகளை மீறாதே
சாவை விலைகொடுத்து
வாங்காதே! பேருந்து
படிக்கட்டில் நிற்காதே
பேராபத்தை விரும்பி
ஏற்காதே! பள்ளிக்கூடம்
போகும் வழியில் பாதை
மாறி நீ போகாதே! போதைப்
பொருள்களில் மயங்காதே
வேதனையால் துடிதுடித்து
நோகாதே! அன்னை மனம்
நோக நடக்காதே தந்தை
சொல்லைத் தட்டாதே!
பெரியோர் சொல்லை நீ
கேட்டு–நல்ல
பெயரை நீ
நிலைநாட்டு!



**எஸ்.**
**சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சிகோட்டை

## உண்டு...! உண்டு..! உண்டு.!

ஒளியுண்டு.. உனக்குள்ளே..
உலகுண்டு உனக்காக..
வலியுண்டு என்றாலும்
வருங்காலம் உனக்குண்டு.!
தெளிவுண்டு.. தெய்வமும்
துணையுண்டு கலங்காதே
மனமே.!

பணிவுண்டு என்றாலே
பாதையிலே சென்று..
கனிவுண்டு.. காலமெலாம்
கரம்தரவே நட்புண்டு.. நாளை
நமதென்று தடைவென்று
நடைபோடு தினமே.!

விதியென்று ஒன்றிருந்தால்
அதைவெல்ல மதியுண்டு..
நதியென்று நம்வாழ்வை
நாம்நினைத்து நீந்துகயில்
கரையுண்டு! காலத்தை
வெல்க மனமே.!

இருளுண்டு என்றாலும்
ஒளியுண்டு எல்லோர்க்கும்
ஒரு பொழுதுண்டு..
எனபதாலே.. அருளுண்டு!
அன்புண்டு.. அனைவருமே
வாழ்கவென
நினைக்கின்ற
நெஞ்சத்தில்
நீடுதுயில்
என்செய்யும்
வெல்க
தினமே.!



**வே.கல்யாணகுமார்.**



## காதல் போர் !

என் காதலெனும் கவிதை
படைத்து, பரிவாரங்களுடன்
படையெடுத்து வருகிறேன்....
தோற்றும் போகிறேன் !

நான் தோல்வியை
தழுவினாலும் ....
மீண்டும் மீண்டும் உன்னை
கவர முடியும் என்ற
நம்பிக்கையுடன் என்
படையெடுப்பு தொடர்கிறது....

ஒரு நாள் ஜெயிப்பது
உறுதி....வீழ்வது நானாக
இருப்பினும்....
ஜெயிப்பது காதலாக
இருக்கட்டும் .....

'இவன் என்
மீது காதல்
கொண்டு
மாண்டவன் !'
என்று
எழுதிவிடு...
என்
கல்லறையில் !



**எம்.பி.தினேஷ்,** கோவை

# சிறப்பு கிராம சபை கூட்டம்





திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றியம் சீலப்பந்தல் ஊராட்சியில் நேற்று நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் தலைமையில் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். வட்டார வளர்ச்சி அலுவலர்( கிராம ஊராட்சி) K. கோபு அவர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், கழகத் தோழர்கள், ஊர் பொதுமக்கள் கிராமசபை கூட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# தூத்துக்குடி வ.உ.சிதம்பரம் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழா




தூத்துக்குடி வ.உ.சிதம்பரம் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில். சென்னை அமெட் பல்கலைக்கழக துணைவேந்தர் வெ.ராஜேந்திரன் மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

# 50,000 பனை விதைகள் நடும் விழா







தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் 50,000 பனை விதைகள் நடும் விழாவின் துவக்கமாக, முடிவைத்தானேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளியில் பனை மர விதைகளை கலெக்டர் இளம்பகவத் நட்டு மாணவிகளுடன் உரையாற்றினார்.

# வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக, பயிற்சி கூட்டம்



விருத்தாசலம், திட்டக்குடி(தனி), புவனகிரி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில், வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக, தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்ட பயிற்சி கூட்டங்களில் அதிமுகவினர் பங்கேற்றனர்.

# சிறப்பு ஒருநாள் பயிலரங்கம்



தமிழ்நாடு பாஜகவின் தன்னார்வ தொண்டு நிறுவன பிரிவின், சிறப்பு ஒருநாள் பயிலரங்கம் திருச்சி ஸ்ரீரங்கத்தில் நேற்று நடந்தது- இதில் மாநிலத் தலைவ நயினார் நாகேந்திரன தேர்தல். அரசியல் செயல்பாடு ஆலோசனைகளை வழங்கினார்.

# வெட்டிவேர் மாலையுடன், வாசவி அம்மன்



திருவள்ளூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் நவம்பர் -1 வெள்ளிக்கிழமை பூஜையில் நம் வாசவி அம்மன் வெட்டிவேர் மாலையுடன், தங்க ஆபரணங்களுடன் புன்னகை முகத்துடன் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# மணமேல்குடியில் ஆட்டோ சங்கம் நடத்திய அன்னதான நிகழ்வு



புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி சந்தைப்பேட்டை பாரதீய ஆட்டோ ரிக்க்ஷாஓட்டனர் சங்கத்தின் சார்பில். ஒவ்வொரு மாதத்தின் முதல் தேதி ஏழை .எளியவர்களுக்கு அன்னதானம் கடந்த நான்கு வருடங்களாய் வழங்கப்பட்டு வருகிறது. நேற்று நவம்பர் 1ல் அன்னதானம் வழங்கப்பட்டது.நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஆட்டோ சங்கத்தின் தலைவர் மகேந்திரன் மற்றும் நிர்வாகிகள் செல்வேந்திரன்.சுந்தரம் ஆகியோர் செய்திருந்தனர்.

# திருக்குறள் திருப்பணிகள் 4 வது வார பயிற்சி வகுப்பு



திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நான்காவது வார சனிக்கிழமை முன்னிட்டு திருக்குறள் திருப்பணிகள் பயிற்சி வகுப்பு நடைபெற்றது நிகழ்ச்சிக்கு தலைமை ஆசிரியர் ஜி ஜெயகாந்தன் தலைமை தாங்கி பயிற்சியினை துவக்கி வைத்தார். பயிற்சியாளர் புலவர் ந. கனகசபை முன்னிலை வகித்தார். திருக்குறள் திருப்பணிகள் பயிற்சியாளரும், செய்யாறு வட்ட முத்தமிழ் சங்க தலைவருமான எறும்பூர் கை .செல்வகுமார் வரவேற்றார்.

# குளூர் ஊராட்சி கிராம சபை கூட்டம்



**ஈரோடு, நவ.02:**
மொடக்குறிச்சி ஒன்றியம் குளூர் ஊராட்சி கிராம சபை கூட்டம் நேற்று சனிக்கிழமை செங்கரைப்பாளையத்தில் அங்கன்வாடி வளாகம் அருகே ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்கள் கலந்து கொண்ட கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

கஸ்பாபேட்டை உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் 401 நபர்கள் செங்கரைப்பாளையம் பகுதி நேர நூலகத்தில் 417 முதல் 818 வரை உள்ள உறுப்பினராக சேர பூர்த்தி செய்த 401 விண்ணப்ப படிவங்களை பள்ளி தலைமை ஆசிரியை திருமதி சண்முகவடிவு அவர்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியர் திரு ச.கந்தசாமி ஐஏஎஸ் அவர்கள் மூலம் பகுதி நேர நூலகர் திரு S.கிருஷ்ணன் அவர்கள் வசம் வழங்கப்பட்டன.

தலா ரூ20- வீதம் 401 உறுப்பினர்கள் கட்டணத் தொகை ரூ8020- கஸ்பாபேட்டை பள்ளி ஆசிரியப் பெருமக்கள் மற்றும் தோட்டக்காட்டு நல்லப்ப கவுண்டர் அறக்கட்டளை ஆகியோரால் செலுத்தப்பட்டது. பெண்கள், ஆண்கள், அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் என பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

நன்றி! வணக்கம்!

# வாசகர் கடிதம்

பீகார் தேர்தல் அறிக்கையில் பள்ளிகளில் காலை உணவு வழங்கப்படும் விவசாயிகளுக்கு 9000 ரூபாய் வழங்கப்படும். அதிமுகவில் இருந்து செங்கோட்டையன் நீக்கப்பட்டுள்ளார். அனைவரையும் நீக்கிவிட்டு பழனிச்சாமி யாரை வைத்து கட்சி நடத்துவார். ஒருமுறை பயன்படுத்திய எண்ணையை மீண்டும் பயன்படுத்தக் கூடாது. கோவில் சொத்துக்களை இணையத்தில் வெளியிட கோர்ட் உத்தரவு. சி எம் எஸ செயற்கைக்கோள் விண்ணில் பாய்ந்தது. ராஜராஜ சோழனின்1040 ஆவது ஆண்டு சதய விழா தொடக்கம் முதலில் அவரது கல்லறையை ஒழுங்குபடுத்தி ஒரு பிரம்மாண்ட சிலையும் மண்டபமும் அமைக்க வேண்டும். திருப்பூர் பின்னலாடை தமிழகத்தில் முதலிடம் வகிக்கிறது. முத்து ஆனந்த் அவர்களின் காதல் கவிதை அற்புதமாக இருந்தது. இவரை பிறவி கவிஞர் என அழைக்கலாம். நடனமாடுபவர்களுக்கு திடீரென மாரடைப்பு வருவது ஏன் என்ற கட்டுரை பயன் உள்ளதாக இருந்தது. உப்பு உடலுக்கு ஆபத்து ஆன்மீக செய்திகள் அனைத்தும் பயனுள்ள விதத்தில் அமைந்துள்ளது சிறப்பானதாகும். 2030க்குள் 500 ஜிஹா வாட் மின்சாரம் கிடைக்கும் தமிழகத்தில் ஆர் டி இ மாணவர் சேர்க்கைக்கு 80 ஆயிரம் இடங்கள் ஒதுக்கீடு. மாவட்ட தலைநகரங்களில் ஆதார் சேவை மையம் தொடங்கப்பட்டது. எங்கள் தேர்தல் அறிக்கையை காப்பி அடிக்கிறார்கள் எனது தேஜஸ் வி வேதனை. ஆர் எஸ் எஸ் அமைப்பை மோடி தடை செய்ய வேண்டும். தெலுங்கானா அமைச்சராக அசாருதீன் பொறுப்பு ஏற்பு. ரஷ்யாவுக்கு போட்டியாக அமெரிக்காவிலும் அணுகுண்டு சோதனை நடத்தப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இதய டெஸ்ட் உலக அளவில் அங்கீகாரம் கிடைத்தது. வியட்நாமில் வெள்ளம். நாளுக்கு நாள் புதுப்புது செய்திகளை உடனுக்குடன் வழங்குவதில் தமிழ்நாடு இ பேப்பர் முன்னிலை வகிக்கிறது. அருள் தரும் தெய்வம் இதழுக்கு நாம் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் இனி வருங்காலத்தில் ஆன்மீகம் ஒன்றே நாட்டையும் உலகத்தையும் நிலை நிறுத்தும். மீண்டும் நாளை சந்திப்போம்.



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

பள்ளிகளில் காலை உணவு#விவசாயிகளுக்கு ரூ.9000=பீஹாரில் தே.ஜ. கூட்டணியின் தேர்தல் அறிக்கை
முழு காஷ்மீரையும் இந்தியாவுடன் இணைக்க படேல் விரும்பினார்+ஆனால் நேரு அனுமதிக்கவில்லை#பிரதமர் மோடி
தமிழக அரசின் ஒன்பது மசோதாக்களுக்கு ஆளுநர் ரவி ஒப்புதல்
அதிமுகவிலிருந்து செங்கோட்டையன் நீக்கம்#ஈபிஎஸ் அதிரடி
தமிழர்களுக்கும் பீஹார் மக்களுக்கும் பகை உண்டாக்கும் அற்ப அரசியல்#முதல்வர் ஸ்டாலின் பிரதமர் மோடிக்கு கண்டனம்
சி எம் எஸ்-03 செயற்கைக் கோள் நாளை விண்ணில் பாய்கிறது
சென்னை: கோவில் சொத்து விவரங்களை இணையத்தில் வெளியிட உத்தரவு
பள்ளிக்கரணையில் குடியிருப்பு வளாகம் கட்டக் கூடாது#ஐகோர்ட் உத்தரவு
தீபாவளிக்கு ரூ.50000க்கு மேல் செலவு#கிரடிட் கார்டு பயன்பாடு அதிகரிப்பு
தமிழ்நாட்டில் ஏழு ஐஏஎஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவு
புதுக் கவிதைகள் அலங்கரிப்பு அபாரம்
நூல் விமர்சனம் தூள்
வாசகர் கடிதங்கள் பிரமிப்பு
2026க்குள் அதிமுக ஒன்றிணையும்#சசிகலா நம்பிக்கை
2030வது ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு#மத்திய மத்திரி பிரகலாத் ஜோஷி
சென்னை: கிரிப்டோ கரன்சி தருவதாக ரூ.26 லட்சம் மோசடி
ஆவடி: வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடு பெற்றுத் தருவதாக ரூ 20 லட்சம் மோசடி செய்த போலி சாமியார் கைது
பொன்னேரி அருகே உரிய அங்கீகாரமின்றி செயல்பட்ட தனியார் பள்ளிக்கு சீல்
சென்னை: பெண் குழந்தைக்கு பாலியல் வன்கொடுமை#இளைஞருக்கு 23 ஆண்டுகள் சிறை
தெலுங்கானா அமைச்சராக முன்னாள் கிரிக்கெட் வீரர் அசாருதீன் பதவியேற்பு
இரண்டாவது டி-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியாவை வீழ்த்தியது ஆஸ்திரேலியா=ஹேசில்வுட் அபாரம்
ஆர் எஸ் எஸ் அமைப்பை பிரதமர் மோடி தடை செய்ய வேண்டும்#மல்லிகார்ஜுன கார்கே=வாய்ப்பில்லை ராசா
தமிழ்நாட்டின் 35வது கிராண்ட் மாஸ்டரானார் இளம்பரிதி#முதல்வர் வாழ்த்து
எங்கள் தேர்தல் அறிக்கையை அப்படியே காப்பி அடித்துள்ளது என்டிஏ#தேஜஸ்வி விமர்சனம்
வாரணாசியில் எச்சில் துப்பினால் ரூ.250 அபராதம்
ரஷ்யாவுக்குப் போட்டியாக 30 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அமெரிக்காவில் அணு ஆயுத சோதனை#டிரம்ப் உத்தரவு
இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இதய ஸ்டெண்டுக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துள்ளது
மலேசியாவில் ஆதிகால கப்பலின் சிதைந்த பாகங்கள் கண்டெடுப்பு#அதே போல மாயமாய் மறைந்த விமான பாகங்கள் சிக்குகிறதா எனவும் சோதனை மேற்கொள்ளுங்கள்
வியட்நாமில் வெள்ளம்: உயிரிழப்பு அதிகரிப்பு# பலரைக் காணவில்லை
பணி உரிமம் மறு ஆய்வு செய்யப்படும்#அமெரிக்கா அறிவிப்பு



**-பி. சுரேகா**
சென்னை

அதிசயம் இல்லையே
ஆனால் நல்ல அருமையான
இயல்பான செய்திகளை
ஈடில்லாத காலை பொழுதில்
உற்சாகமாக கொடுக்கும்
ஊக்கம் நிறைந்த தமிழ்நாடு இ
நாளிதழே
என்றுமே எங்கள் மனதில்
ஏகாந்தமான நிலையை
உருவாக்குகிறாய்..
ஐந்து நாள் மட்டும் இல்லை
ஒரு வாரமான ஏழு நாளும்
வருவதால்
ஓதாமல் இருக்க முடிவதில்லை..
நீயே
ஔடதம் என்று சொன்னால்
மிகையாகாது
எஃகு போல் இருப்பதால் நாங்கள்
இரும்பாக உன்னை பற்றிக்
கொள்கிறோம்.
இப்படி எங்களை
ஆக்கிரமித்துக் கொள்ள நல்ல
நல்ல விடியலாக ஒவ்வொரு
நாளும் எங்களுக்கு கொடுக்க
பாடுபடும் தமிழ்நாடு இ பேப்பரின்
ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த
பாராட்டுக்கள்.

உங்கள் பணி என்றென்றும்
இது போல் ஆரோக்கியமாகவும்
மகிழ்ச்சியாகவும்
சந்தோஷமாகவும் நீடிக்க
இறைவனை பிரார்த்திக்கிறேன்.



**-உஷா முத்துராமன்**























LOCATION - CHENNAI
WE ARE
HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com


PRODUCT
PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
7871617005


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
Are you looking to publish News, Story, Kavidhai, Articles etc in TamilnaduEpaper, Anandabhaskar, PaperBoy
If yes,
send to tamilnaduepaper@gmail.com
Please mention in Subject
Papername and Category - News, Article, Kavithai, Story, Cooking, Aanmigam, Book Review, Vasagar Kaditham, Sindhika Oru Nodi, Rowse Ramani etc.,
Please send articles from own email
Articles without Author Details will be Ignored
ஆனந்த பாஸ்கர்


WE'RE
HIRING!
A Passionate Content Creator
94386 10756


தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
tamilnaduepaper@gmail.com
தமிழகம் முழுவதும் மாவட்டம் தாலுக்கா வாரியாக
தேவை
நிருபர்கள்
புகைப்படக் கலைஞர்கள்
ஏஜெண்டுகள்
Call: 9337501889


MLM PERFECT
LIMITED OFFER HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
www.mlmperfect.com
9853719337,7436914247


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


WANTED
STORE
HELPER
Boys only
Fresher / Experience
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@whitechhoses.in


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


PADMA MEDIA HOUSE
Best Newspaper
Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PADMA MEDIA HOUSE
BOOK
NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
ADVERTISE WITH US!


WORK FROM
HOME
Extra Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009

திருச்சி காமதேனு நகர், போலீஸ் காலனி IT Park அருகில்
சகல வசதிகளுடன் புதிய வீடு விற்பனைக்கு உள்ளது.
விலை ரூ.41,00,000/-
பத்திரப்பதிவு இலவசம்
தொடர்புக்கு:
83000-11186
94439-05278

COMMERCIAL BUILDING FOR RENT
800 Square Feet Second Floor building in Abees Tower at the entrance of Carmel Mount Road, Ponnappa Nadar Colony in available for Monthly rent. It is Suitable for I.T.Company
Rent: Rs.15,000 P.M
Contact: 9442214477

K.R.PROPERTY
தீபாவளி வாழ்த்துக்கள்!
கோவை
திருச்சி ரோடு, இராமநாதபுரம், சிங்காநல்லூர்
பகுதிகளில்
2.5 / 5.5 / 7 / 10
சென்ட் சைட்டுகள்
வாங்க / விற்க
8122330572




வீடு வாடகைக்கு

திருச்சி குண்டூர் MIET கல்லூரி அருகில் 1BHK 2BHK வீடு வடகைக்கு
Contact Whatsapp
9952827579

வாடகைக்கு
நாகர்கோவில் மணிமேடை அருகில் 2000 ச.அடி Bldg, கார் பார்க்கிங் உடன் Bank, Finance, Software Company & Training Centre-க்கு ஏற்றது.
Cont: 9994811609
8608864937

BUILDING FOR RENT
in Arasur, Coimbatore
66758 sq.ft
Equal partition available
(Ready to Occupy in 30 Days)
Building width : 70 mtr.
Building Length : 88.6 mtr.
Power : 350 KVA and above
✆ 90954-30303
peninsulamarimuthu@gmail.com

AllIndiaJobz
FREE Job Placements
www.allindiajobz.com

FREE JOB PLACEMENT
WHATSAPP US / CALL US
9337501889/7789941009
Urgent Hiring !! Hurry Up
Multiple Job Openings fror Freshers
Refer Your Friends who are searching jobs

வணிக வளாகம் வாடகைக்கு
அரியலூர்
பஸ் நிலையம் அருகில், ஜெயங்கொண்டம் ரோட்டில் சுமார் 800 ச.அடி கொண்ட தரைத்தளம் வாடகைக்கு உள்ளது.
Showroom / நிதி நிறுவனத்திற்கு ஏற்றது.
தொடர்புக்கு:
9445659427

வள்ளியூர் அருகில்
DTCP APPROVED PLOTS
வீட்டுமனை 3 சென்ட் ரூ. 6 லட்சம்
கமர்சியல் மனை 16 சென்ட் ரூ. 48 லட்சம்
9940 20 7778

இடம் விற்பனைக்கு
3.5 சென்ட்,
சிங்காநல்லூர் to ஹோப்ஸ் மெயின் ரோடு, ராமானுஜ நகர்,
93443 65645
99443 03030

வள்ளியூர் அருகில்
DTCP APPROVED PLOTS
வீட்டுமனை 3 சென்ட் ரூ. 6 லட்சம்
கமர்சியல் மனை 16 சென்ட் ரூ. 48 லட்சம்
9940 20 7778

OFFICE
SPACE FOR RENT @ GUINDY
+ 1st Floor 1300-sft
+ 2nd Floor 1300-sft
+ 3rd Floor 1300-sft
9841329316

திருச்சி கே.கே.நகர் ஐயப்பா நகரில்
2,100 சதுரடி நிலத்தில் 1000 சதுரஅடி பில்டிங்கில் வீடு விற்பனைக்கு உள்ளது
Rs.90 Lakhs
Cell: 9585400555

வள்ளியூர் NH அருகில்
வீட்டுமனை 4 சென்ட் ரூ. 4 லட்சம்
வீட்டுமனை 5 சென்ட் ரூ. 2 லட்சம்
9940 20 7778

குடோன் வாடகைக்கு
சத்திரோடு, கரட்டுமேடு காப்பிக்கடை அருகில்
3800 சதுரஅடி
குடோன் வாடகைக்கு.
98940 83747

மனை பிரிவுக்கு நல்ல இடம்
59½ சென்ட்
தென்னந்தோப்பு
இரணியல்
ரயில் நிலையம் அருகில்.
9952982749

TYRE கம்பெனி STAFF 50 நபர் தங்குவதற்கு
மாதவரம் மற்றும் திருவொற்றியூர் சுற்றுவட்டாரத்தில் ROOM வாடகைக்கு தேவை
91765 21641, 97899 74898

FLAT URGENT SALE
திருச்சி பஞ்சப்பூர் புதிய பஸ் ஸ்டாண்ட் அருகில்
2BHK FLAT
Best Price Deal
குறைந்த விலை!
சிறந்த லொக்கேஷன்!
சிறந்த முதலீடு!
89031 05956

இடம் விற்பனைக்கு
இராமன்புதூர் மீன் சந்தை அருகில் 6 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
ஆரல்வாய்மொழி to முப்பந்தல் மெயின்ரோட்டில் 15 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புக்கு:
8300134494
9360378520

COMMERCIAL SPACE FOR RENT
@ Ganapathy Sathy main road
(Opp Kannan Departmental Store)
2000 Sqft
Ist floor suitable for OFFICE & COMMERCIAL PURPOSES
98422 25310

VILAMBARAM
WANTED
10 SMART FEMALE
Telecallers
Job Type: Full-time
Education : Bachelor's degree
Freshers And Experience
Both can apply.
SEO & DIGITAL MARKETING COMPANY SINCE 2020
Don't miss this opportunity
INTERESTED CANDIDATES CAN APPLY
+91 9337501889
+91 7789941009

Job @ CHENNAI
www.vilambaram.com



# பல்சுவை களஞ்சியம்



## புதினா கீரையின் அற்புதங்கள்!



(புதினா ) ஒரு மருத்துவ மூலிகையாகும். ஆனால் நாம் உணவின் வாசனைக்காக மட்டும் சேர்த்து வருகிறோம். இதன் அற்புதமான மருத்துவ பயன்களை தெரிந்துகொண்டால் தொடர்ந்து பயன்படுத்தலாம்.

புதினா கீரையில் நீர்ச்சத்து, புரதம், கொழுப்பு, கார்போஹைடிரேட், நார்ப்பொருள் உலோகச்சத்துக்கள், பாஸ்பரஸ், கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின் ஏ, நிக்கோட்டினிக் ஆசிட், ரிபோ மினேவின், தயாமின் ஆகிய சத்துக்களும் அடங்கியுள்ளன. சட்னி, ஜூஸ் எந்த விதத்தில் இதை பயன்படுத்தினாலும் இதன் பொது குணங்கள் மாறுவதில்லை என்பது இதன் முக்கிய அம்சம்.

அசைவ உணவு மற்றும் கொழுப்பு பொருட்களை எளிதில் ஜீரணமாக்குகிறது. இரத்தம் சுத்தமாகும். வாய் நாற்றம் அகலும். பசியை தூண்டும். மலச்சிக்கல் நீங்கும். பெண்களின் மாதவிலக்குப் பிரச்னைகள் தீர புதினாக்கீரை உதவுகின்றது.

ஆண்மைக் குறைவை நீக்கி முழுமையான இல்லற இன்பத்தை அனுபவிக்கவும் புதினாக் கீரை உதவுகின்றது. வயிற்றுப் புழுக்களை அழிக்க இது உதவுகின்றது. வாய்வுத் தொல்லையை அகற்றுகின்றது.

புதினாவை நீர் விடாமல் அரைத்து வெளி உபயோகமாகப் பற்றுப் போட்டால், தசைவலி, நரம்புவலி, தலைவலி, கீல்வாத வலிகளின் வேதனை குறையும். ஆஸ்துமாவையும் புதினாக் கீரை கட்டுப்படுத்துகின்றது.

மஞ்சள் காமாலை, வாதம், வறட்டு இருமல், சோகை, நரம்புத் தளர்ச்சி ஆகியவற்றுக்கும் புதினாக் கீரை சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. முகப்பரு உள்ளவர்களும், வறண்ட சருமம் உள்ளவர்களும் இதன் சாரை முகத்தில் தடவி வர பலன் கிடைக்கும்.

புதினாவை நிழலில் காயவைத்து பாலில் சேர்த்து கொதிக்கவைத்து டீக்குப் பதிலாக அருந்தி வந்தால். உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

## பீட்ரூட் ஒரு சர்வ நிவாரணி!



பீட்ரூட் காய், கீரை, ஜூஸ் என பீட்ரூடின் அனைத்து பாகங்களும் உடலுக்கு நன்மை பயக்கக் கூடியவை. பீட்ரூட் என்ற ஒற்றை உணவுப்பொருள் உடலின் பல்வேறு சிக்கல்களைத் தீர்க்க வல்லது ஆகும்.

பீட்ரூட்டை பிழிந்து சாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டு வர அல்சர் குணமாகும்.

பீட்ரூட் சாறுடன் வெள்ளரிச்சாறு கலந்து சாப்பிட்டு வர சிறுநீரகங்களும் பித்தப்பையும் சுத்திகரிக்கப்படும்.

பீட்ரூட்டை நறுக்கி பச்சையாக எலுமிச்சை சாற்றில் தோய்த்து உண்டுவர இரத்தத்தில் சிவப்பணுக்கள் உற்பத்தியாகும்.

கல்லீரல் கோளாறுகளுக்கும் பீட்ரூட் ஒரு சிறந்த டானிக். பித்தம் அதிகமாகி அடிக்கடி பித்த வாந்தி எடுப்பவர்களுக்கு பீட்ரூட் ஒரு சிறந்த டானிக்.
பீட்ரூட் சாறு அஜீரணத்தை நீக்கி செரிமானத்தைக் கூட்டும்.

தலையில் ஏற்படும் வெள்ளை நிற பொடுகுகளைக் களைய பீட்ரூட் ஜூஸை பொடுகு இருக்கும் இடங்களில் மசாஜ் செய்து இரண்டு மணிநேரம் கழித்து சீயக்காய் பவுடர் கொண்டு தலை குளித்தால் நாளடைவில் பொடுகுகள் சரியாகும்.

புற்றுநோயினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகள், ஊட்டி பீட்ரூட் ஜூஸ் தினமும் 1 டம்ளர் பருகி வந்தால் புற்றுநோய் பரவுவது தடுக்கப்படும். ஆரம்ப நிலையிலுள்ள புற்றுநோயை குணமாக்கும் வல்லமை படைத்தது பீட்ரூட்.

பீட்ரூட் கீரையையும் மற்ற கீரைகள் போல் சமையல் செய்து சாப்பிட அல்சர், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் சரியாகும்.

புதியதாக இரத்த அணுக்கள் உருவாக துணை புரிகிறது. பச்சைக் காய்கறிகள், கீரைகள், பழங்கள், பேரீச்சம் பழம், அத்திப்பழம் ஆகியவற்றை அதிக அளவு உண்டும், இரத்தத்தின் அளவு அதிகரிக்காமல் இருக்கும் பட்சத்தில் பீட்ரூட்டை வாரத்திற்கு நான்கு நாட்கள் உண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

# மீம்ஸ்

~சார் சொந்தக்காரர் இறந்துட்டாரு போகனும். லீவு வேணும்.

~work அதிகம் இருக்கு. உங்க சொந்தக்காரங்க இதயெல்லாம் weekendல plan பண்ணிக்க மாட்டாங்களா?



எதே..







## விடுகதை

| | |
|---|---|
| 100க்கும் 105க்கும் நடுவுல என்ன இருக்கு? | 0 தான் இருக்கு. |
| ஒருத்தன் பொண்டாட்டி சமையல வாயில வைக்க முடியலன்னு பேங்க் மேனேஜர் கிட்ட போய் சொன்னாலும் ஏன்? | ஏன்னா நம்ம கஷ்டத்தை சொன்னாதான் லோன் கிடைக்கும்னு சொன்னாங்களாம். |
| ஒரு அம்மா எப்போதும் தூங்கும் போது கண்ணாடி போட்டுக்கிட்டு தான் தூங்குமாம் ஏன்? | என அப்பதான் தூக்கத்தில் வரும் கனவு தெளிவா தெரியுமாம். |
| ஒருத்தன் விநாயகர் படத்தின் மேல நடிகர் ராதிகா போட்டோ ஒட்டிட்டு போனானாம் ஏன்? | ஏன்னா அது சித்தி விநாயகர் ஆம். |
| ஒருத்தன் துணி கடைல போய் சேலை கேட்டான் அதுக்கு அவன் கோயில்ல போய் வாங்க என்று சொன்னாலும் ஏன்? | ஏன்னா அவங்க பூ சேரி கேட்டாங்களாம். |



# ஜோக்ஸ்

குருவே! நாணயத்தை சுண்டி விடறேன். பூ விழுந்தா நீங்க நினைச்சது நடக்கும்.
ஓ! தல விழுந்தா?
அப்டி நடக்க வாய்ப்பே இல்ல தலை ரசிகன்கிட்டேயே தலை விழுவார்ங்கறியா?
==================
டாக்டர், கர்ப்பிணிப்பெண் காலைல எந்திரிச்சதும் யார் முகத்துல விழிக்கறாங்களோ அவன் சாயல்ல பேபி பிறக்குமா?
அப்டி பார்த்தா பால்காரன் சாயல்ல தான் எல்லா குழந்தையும் இருக்கும்
============




மிஸ்! உங்க கல்யாண ஆல்பத்துல 1000 க்கும் மேல செல்ஃபி ஃபோட்டோஸ் இருக்கே?
அவ்ங்க எல்லாம் என் முன்னாள் பாய் ஃபிரண்ட்ஸ்,
=================
அத்தான்! 9000 ரூபா குடுங்க. ஹேர் ஸ்ட்ரெய்ட்டனிங் பண்ணனும்.
போன மாசம் தானே கர்லிங் ஹேர் க்கு 15,000 வாங்குனே?பேசாம 2 சவுரி வாங்கிக்க
=================
டாக்டர்!டென்சன் ஆகாம இருக்கனும்னா என்ன பண்ணணும்?
9 வது சன் பிறந்ததும் கு க பண்ணிடனும்
============
பார்டர்ல ஏதாவது பிரச்சனைன்னா உதவி செய்வீங்களா?
அந்த 100 சேலையை பிரிக்கக்கூட மாட்டோம். பார்டர் எப்டி இருந்தா என்ன?
================
சாமியார்க்கு ஆங்கிலத்தில் என்ன?
GOD WHO
=============
மாப்ளை! அத்தையும் ,2 பொண்ணுங்களும் பஸ் ஸ்டாப் ல நிக்கறாங்க்ளாம். நீங்க பிக்கப் பண்ணி கூட்டிட்டு வர்றீங்களா?
ம்.கூட்டிட்டு வந்து பிக்கப் பண்ணிக்கறேன்
============
டியர், எங்க வீட்ல ரொம்ப ஸ்ட்ரிக்ட்டு , வெளீல எல்லாம் அனுப்ப மாட்டாங்க
அப்டியா? எங்க வீட்ல விடுவாங்க. நான் உங்க வீட்டுக்கு வந்துடவா?
===============
சமையல் குறிப்பாளினி சமந்தா = பலாப்பழத்தை காயா இருக்கும்போதே எடுத்து......
ஏம்மா சுத்தி வளைக்கறீங்க? பலாக்காய்னு சொன்னா புரியாதா?
==============
எதுக்கு சார் அடிக்கடி “ 1000 RT " னு ட்வீட்டறீங்க?
1000 RT ட்வீட் நிறைய போட்டிருக்கேன், இதெல்லாம் நமக்கு சர்வசாதாரணம்னு சொல்ல
=============
முதல்வர் ,மக்கள் முதல்வர் என்ன வித்யாசம்?
முதல்வர் னா டம்மியா இருக்கனும். மக்கள் முதல்வர்னா ஜெயிலுக்குப்போய்ட்டு வந்த மம்மியா இருக்கனும்
==================
குருவே! ஐம்புலன்களையும் அடக்க என்ன வழி?
சொல்றேன். குருதட்சணையா ஶ்ரீ திவ்யா ,தீப்தி பிட்டை வாட்சப்பில் அனுப்பு!
==================
இதோ அதோ னு பாக்கப் போக படம் வர்றத்துக்குள்ள பலபேர் செத்திடுவாங்க போல?
படம் வந்ததும் நீங்க!



# ஜோதிடம் அறிவோம்



## ஏமாற்றத்திற்கு ஆளாகும் ராசிக்காரர்கள்..

உண்மையில்லாத விஷயங்களை நம்புவதற்கு அதிக வாய்ப்புள்ள ராசிகள் மீனம், துலாம், கடகம் மற்றும் தனுசு ராசிக்காரர்கள் ஆவர்.

### 1. மீன ராசி



கட்டத்தில் கடைசி ராசியாகும். இந்த ராசியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் கனிவானவர்கள், கற்பனைத் திறன் கொண்டவர்கள், மற்றவர்களைப் புரிந்து கொள்வதில் வல்லவர்கள். ஆனால் சில நேரங்களில் அவர்களின் கருணை மற்றவர்களை மிக எளிதாக நம்ப வைக்கும். யாரோ ஒருவர் பொய் சொல்கிறார்கள் அல்லது ஏமாற்ற முயற்சிக்கிறார்கள் என்பதற்கான அறிகுறிகளை அவர்கள் புறக்கணிக்கலாம். ஏனென்றால் அவர்கள் மக்களைப் பற்றிச் சிறந்ததை நம்ப விரும்புகிறார்கள். மேலும், மீன ராசிக்காரர்கள் தங்கள் கனவு உலகங்களுக்குள் தப்பிக்க விரும்புவார்கள், இது உண்மை இல்லாத விஷயங்களை நம்புவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

### 2. துலாம் ராசி



இந்த ராசியினர் எப்போதும் விஷயங்கள் நியாயமாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள். அவர்கள் ஒரு சூழ்நிலையின் இரு பக்கங்களையும் பார்ப்பதில் திறமையானவர்கள், ஆனால் இது நேர்மையற்றவர்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடும். துலா ராசிக்காரர்கள் வாதிடுவதை விரும்புவதில்லை, அதனால் ஏதாவது தவறாகத் தோன்றும்போது அவர்கள் புறக்கணிக்கக்கூடும், ஏனெனில் அவர்கள் சண்டையைத் தொடங்க விரும்ப மாட்டார்கள். இது அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் மக்களுக்கு எளிதான இலக்குகளாக மாற்றும்.

### 3. கடக ராசி



பொதுவாக தங்கள் அன்புக்குரியவர்களை மிகவும் அக்கறையுடன் பாதுகாப்புடனும் நடத்துகிறார்கள். மற்றவர்களைக் கவனித்துக் கொள்வதில் சிறந்தவர்கள், ஆனால் சில நேரங்களில் அவர்கள் அதிகமாக அக்கறை காட்டுகிறார்கள். யாராவது பொய் சொல்லும்போது அல்லது தங்கள் குடும்பத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புவதால் அவர்களைப் பயன்படுத்தும்போது அவர்கள் புறக்கணிக்கக்கூடும். கடக ராசிக்காரர்கள், மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்தும்போது, இவர்களின் உணர்வுகளைப் பற்றிக் கவலைப்படாதவர்களால் இவர்கள் எளிதாக ஏமாற்றிவிடக்கூடும்.

### 4. தனுசு ராசி



ஆராய்ந்து மகிழ்வதை விரும்புகிறவர்கள். எப்போதும் அடுத்த பெரிய சாகசத்தைத் தேடுபவர்கள், இது உண்மையாக இருக்க முடியாத அளவுக்கு நன்றாகத் தோன்றும் விஷயங்களை நம்பவும் அவர்களைத் தூண்டும். தனுசு ராசிக்காரர்கள் நம்பிக்கையானவர்கள். மக்களைச் சிறந்தவர்களாக நினைப்பார்கள். அதனால் அவர்களை யாராவது ஏமாற்ற முயற்சிக்கும்போது அது அவர்களுக்கே தெரியாமல் போகலாம். இந்த ராசியினர் உலகத்தை ஒரு மகிழ்ச்சியான இடமாகக் காண விரும்புகிறார்கள், இது அவர்களை மோசடிகள் மற்றும் பொய்களுக்கு எளிய இலக்காக மாற்ற வழிவகுக்கும்.

மேற்சொன்ன இந்த ராசிக்காரர்கள் உண்மையில்லாத விஷயங்களை நம்புவதற்கு அதிக வாய்ப்பிருந்தாலும், அனைத்து ராசியினரும் மற்ற ராசிக்காரர்களிடம் கவனமாக இருப்பது முக்கியம். எந்த ராசிக்காரர்களும், தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தவில்லை என்றால் ஏமாற்றப்படலாம்.

புத்திசாலியாக இருப்பதன் மூலமும், அவர்களின் உள்ளுணர்வைக் கேட்பதன் மூலம், எப்போது வேண்டாம் என்று சொல்ல வேண்டும் என்பதை அறிந்துகொள்வதன் மூலமும், எல்லோரும் நேர்மையாக இல்லாத இந்த உலகில் எவரும் முட்டாளாக்கப்படுவதில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

புதன் மற்றும் சுக்கிரன் சூரியனுக்கு அருகில் வருவதால், அவை எப்போதும் அஸ்தங்கம் அடைகின்றன. சூரியனுக்கு மிக அருகில் வரும் கிரகம் புதன் என்பதால், பொதுவாகவே இது சுமார் 70 சதவீத பிறப்பு ஜாதகத்திலும் அஸ்தங்கம் அடைந்தே காணப்படும். புதன் நேர்கதியில் 14 பாகை வித்தியாசத்திலும், வக்ர கதியில் 12 பாகை வித்தியாசத்திலும் சூரியனுக்கு முன்பின் ராசிகளில் அஸ்தங்கம் அடைவார்.

மேலும் ஒருவரின் ஜாதகத்தில், புதன் அஸ்தங்கம் அடைந்தவர்களும், அவர்தம் அறிவுத் திறன் தவறான / வெற்று கர்வத்தால் தடுமாற்றம் ஏற்படும். அதிக தன்னம்பிக்கையால் காரியங்கள் செயல் இழந்து விடும். எளிதாக இவர் ஏமாறவே செய்வார் / பிறரால் ஏமாற்றப்படுவார்.

அஷ்டவர்கம் எனும் ஜோதிட கணிதம் மூலம் இதனைச் சொல்லவேண்டுமானால், லக்கினத்தை விட 4 ஆம் இடம் அதிக பரல் பெற்றிருப்பின் அவர் அறிவு சொல்படி நடப்பவர் எதனையும் தாம் அறிந்த புரிந்த அறிவு சார்ந்து முடிவெடுப்பதால், இவரின் முடிவுகள் நியாயம் இல்லாமல் போகும். அது ஏமாற்றத்தைத் தருவதாக இருக்கவே செய்யும். அதே சமயம் நான்காம் இடத்தை விட லக்கனத்தில் அதிக பரல் பெற்றிருக்கும் ஒரு நபர் ஆத்மா சொல்படி நடப்பார், அதனால் அவர் எடுக்கும் முடிவுகளில் நியாயம் இருக்கவே செய்யும், யாரிடமும் ஏமாற்றம் அவ்வளவு எளிதாக அடையமாட்டார்.

"ஜோதிடம் ஒரு முன் எச்சரிக்கையே தவிர , முடிவு அல்ல என்பதனை உணரவும்.. அதே போல் ஜோதிடர் வழிகாட்டியே தவிர, கடவுள் அல்ல.. பரிகாரம், என்பது ஜாதகர் மனமாற்றமும், கடவுளிடம் முழு சரணாகதியுமே ஆகும்."



## நோய்கள் நீக்கும் சிவன்!

தக்கன் என்னும் கொடியவன் தனது 27 மகள்களை அழகிய சோமன் எனப்படும் சந்திரனுக்குத் திருமணம் செய்துவைத்தார். அப்போது தக்கன் தனது மகள்களை சந்திரனிடம் ஒப்படைத்து, "27 மகள்களிடமும் சமமாக அன்பைச் செலுத்தி வாழவேண்டும்" என்று நிபந்தனை விதித்தார். ஆனால் சோமனோ, மிகுந்த அழகியான ரோகிணியிடம் மட்டும் அதிகப்படியான காதல் கொண்டு வாழ்ந்து வந்தார். இதனால் ஏனைய 26 பேரும் தக்கனிடம் முறையிட்டனர்.

இதைக் கேட்ட தக்கன் பெரும் சீற்றம் கொண்டு, சோமனுக்கு நாளும் ஒரு கலை குறைந்துவர சாபம் அளித்தார். அதுவே தேய்பிறையானது. சாபம் பலித்தது. எச்சமாக ஒரே ஒரு கலை மிஞ்சியிருந்த வேளையில், திருவாரூர் வந்து புற்றிடம் கொண்ட பெருமானை வழிபட்டார். தேவதீர்த்தத்தில் நீராடி, ஐந்தெழுத்து மந்திரத்தை நாளெல்லாம் நெஞ்சுருக ஓதியவாறு மடப்புரத்தில் சிவலிங்கம் ஸ்தாபித்து முறையாக வழிபட்டார். சிவனும் விடை மீது அமர்ந்து காட்சி அளித்து அருளினார்.

சோமனும் தனக்கு நேர்ந்த சாபத்தை மனங்கசிந்து கண்ணீர் சிந்திக் கூறிப் பணிந்து நின்றார். வேண்டியோருக்கு வேண்டியதை அளிக்கும் சிவனும், ""தக்கன் சாபத்தால் நீ தேய்ந்தாலும் பின்னர் நாளொரு கலையாக வளர்வாய்!" என்று அருளினார். அதுவே வளர்பிறையானது. சோமனின் குறையைத் தீர்த்து அருள்புரிந்ததால், இத்தல இறைவன் சோமநாதப் பெருமான் என்று அழைக்கப் பெறுகிறார்.

வரம் பெற்ற சோமன், ""பக்தர்கள் வந்து வழிபட்டு குறைகளைக் களையும் வகையில் நீங்கள் அருள்புரிய வேண்டும்" என்றார்.

சோமன் ஸ்தாபித்த சிவலிங்கமே "சோமநாதர்' .

சைவ சமயத்தின் தலைமைப் பீடமாகவும், விராட புருஷஸ்தலமாகவும், பிறந்தாலே முக்தி தருவதும், உலகத்தில் முதலில் தோன்றிய மூர்த்திதலமாகவும், நால்வரால் பாடல் பெற்றதாகவும் விளங்குவது தியாகேசர் உறையும் திருவாரூர் ஆகும். அருணகிரிநாதரால் திருப்புகழ் பாட பெற்ற தலமாகவும் மடப்புரம் தலம் உள்ளது. மேற்கு நோக்கி அமையப் பெற்ற அற்புத சிவன் கோயில்.

ஞானத்தையும் யோகங்களையும் அளிக்க வல்ல அன்னையாக ஸ்ரீஞானசித்தி யோகாம்பிகை அருள்கிறார்.

"சோமநாதரை வேண்டுவோரின் துன்பங்கள் நீங்கும். மருந்துகள் முதலியவற்றால் தீராத நோய்களில் விடுபட்டு நலம் பெறுவர். கல்வி, செல்வம், புகழ், சித்தி, முக்தி உள்ளிட்ட பேறுகளை எளிதில் எய்துவர்' என்பது ஐதீகம். திங்கள்கிழமை வழிபட்டால் பக்தர்கள் கூடுதல் பலன்களைப் பெறலாம்.

இங்குள்ள சந்திர புஷ்கரணி தீர்த்தத்தில் நீராடுவோருக்கு தோல் நோய் உள்பட அனைத்து விதமான நோய்களும் விலகுகின்றன என்பதை பக்தர்கள் உணர்கின்றனர்.





## மகாளய பட்சம் என்றால் என்ன என்று தெரியுமா?



மகாளய அமாவாசை நாளில் மகாவிஷ்ணுவின் ஆசீர்வாதம் பித்ருக்களை தேடி வரும். அந்த ஆசீர்வாதத்தை பித்ருக்களும் நம்மிடம் நேரடியாக எடுத்து வரக்கூடும்.

எனவே மகாளயபட்ச நாட்களில் பித்ருக்களை வழிபாடு செய்து, விஷ்ணுவின் அருளை பெறத் தவறாதீர்கள்.

மாதம் தோறும் அமாவாசை வந்தாலும் தை அமாவாசை, ஆடி அமாவாசை, மகாளய அமாவாசை ஆகிய மூன்று அமாவாசைகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த மூன்றிலும் அதிக புண்ணியத்தை தருவது மகாளய அமாவாசை ஆகும்.

அதாவது 15 நாட்கள் பித்ருக்களை வழிபட வேண்டியதை மகாளய அமாவாசை குறிக்கிறது. பவுர்ணமி தினத்துக்கு மறுநாள் பிரதமை திதியில் இருந்து மகாளய அமாவாசை வரை உள்ள 15 நாட்களும் பித்ருக்கள் பூலோகத்தில் இருக்கும் காலமாக கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி இந்த ஆண்டு கடந்த 8- ந்தேதி மகாளயம் தொடங்கியது. வருகிற 21-ந்தேதி வரையிலான 14 நாட்கள் பித்ருக்கள் நம்மை நெருங்கி இருக்கும் மகாளயபட்ச தினங்களாகும்.

திதி என்னவென்று தெரியாதவர்கள், மகாளய அமாவாசை தினத்தன்று தர்ப்பணத்தை மிகவும் சிரத்தையாக செய்தல் வேண்டும். தர்ப்பணத்தை மிக, மிக ஆடம்பரமாக செய்ய வேண்டும் என்பதில்லை. எளிமையாக செய்தாலே போதும், பித்ருக்கள் மனம் மகிழ்ந்து நம்மை ஆசீர்வதிப்பார்கள்.

இந்த 15 நாட்களில் வரும் ஒவ்வொரு திதியும், ஒவ்வொரு வகை பித்ருக்களுக்கு உகந்த தினமாக கருதப்படுகிறது. அந்த திதி சிறப்பு நாட்களை பெரியவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## வெவ்வேறு நட்சத்திரங்களில் நின்ற "சனி" தரும் பலன்கள் என்னென்ன?

வேத ஜோதிடத்தின் பணி நிர்வாகி ஆன "சனி கிரகம்", ஒழுக்கம், பொறுப்பு, பொறுமை மற்றும் கர்ம பாடங்களைக் குறிக்கிறது. 27 நட்சத்திரங்களில் சந்திர மாளிகைகள் ஒன்றில் அதன் இடத்தைப் பொறுத்து, சனி வெவ்வேறு வழிகளில் வெளிப்படுகிறது, ஒரு நபரின் வாழ்க்கை பாதை, போராட்டங்கள் மற்றும் வளர்ச்சியை வடிவமைக்கிறது. ஒவ்வொரு நட்சத்திரத்தையும் சனி எவ்வாறு பாதிக்கிறது என்பதை தெரிந்துகொள்வோம்.

**அஸ்வினியில் சனி (மேஷம் 0° - 13°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

அஸ்வினியில் சனி இந்த நட்சத்திரத்தின் தூண்டுதல் தன்மையை மெதுவாக்குகிறது, இது புதிய முயற்சிகளைத் தொடங்குவதில் ஜாதகரை முறையாக்குகிறது. அவர்கள் தலைமை மற்றும் குணப்படுத்தும் திறன்களில் தாமதங்களை அனுபவிக்கலாம், ஆனால் காலப்போக்கில் வலுவான உறுதியை வளர்த்துக் கொள்ளலாம்.

**பரணியில் சனி (மேஷம் 13°20' - 26°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

பரணி சுக்கிரனால் ஆளப்படுகிறது மற்றும் மாற்றத்தைக் குறிக்கிறது. சனி இங்கே பொருள் சார்ந்த விஷயங்களில் போராட்டங்களைக் கொண்டு வருகிறது, பொறுமை தேவைப்படுகிறது. ஜாதகர்கள் பொறுப்புகளைக் கையாள்வதில் ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்கிறார்கள் மற்றும் உறவுகள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பான கர்ம பாடங்களை எதிர்கொள்ள நேரிடும்.

**கிருத்திகையில் சனி (மேஷம் 26°40' - ரிஷபம் 10°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

கிருத்திகையில், சனி புத்தியைக் கூர்மையாக்கி, வலுவான பணி நெறிமுறையை வளர்க்கிறது. இருப்பினும், இது ஒரு கடினமான மனநிலையையும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் சிரமத்தையும் உருவாக்கக்கூடும். இந்த ஜாதகர்கள் மாயைகளை துண்டிப்பதில் திறமையானவர்கள், ஆனால் இரக்கத்துடன் செயல்பட வேண்டும்.

**ரோஹிணியில் சனி (ரிஷபம் 10°00' - 23°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ரோகிணி படைப்பாற்றல் மற்றும் பொருள் மிகுதியுடன் தொடர்புடையது. சனி இங்கு அமைந்திருப்பது செழிப்பை தாமதப்படுத்தலாம், ஆனால் நிலையான, நீண்டகால வளர்ச்சியை உறுதி செய்கிறது. ஜாதகர்கள் நிதி மற்றும் உறவுகளில் நிலைத்தன்மையை அடைவதில் பொறுமையைக் கற்றுக்கொள்கிறார்கள்.

**மிருகசீரிஷத்தில் சனி (ரிஷபம் 23°20' - மிதுனம் 6°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

மிருகசீரிஷம் அறிவு மற்றும் ஆய்வுக்கான தேடலைக் கொண்டுவருகிறது. சனி திடீர் செயல்களைக் கட்டுப்படுத்துகிறது, இதனால் ஜாதகர்கள் அறிவுசார் நோக்கங்களில் ஒழுக்கமானவர்களாக மாறுகிறார்கள். பயணம் மற்றும் ஆர்வம் ஆரம்பத்தில் தடைபடலாம், ஆனால் விடாமுயற்சியுடன் வெகுமதி அளிக்கப்படுகிறது.

**திருவாதிரையில் சனி (மிதுனம் 6°40' - 20°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ஆர்த்ரா புயல்களையும் மாற்றத்தையும் குறிக்கிறது. இங்கு சனி உணர்ச்சி எழுச்சிகளைக் கொண்டுவருகிறது, பற்றின்மை மற்றும் மீள்தன்மையைக் கற்பிக்கிறது. ஜாதகர் போராட்டங்களுக்குப் பிறகு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப கற்றுக்கொள்கிறார் மற்றும் நெருக்கடிகளைக் கையாள்வதில் திறமையானவராகிறார்.

**புனர்பூசத்தில் சனி (மிதுனம் 20°00' - கடகம் 3°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

புனர்வசுவில், சனி இந்த நட்சத்திரத்தின் இயல்பான நம்பிக்கையை மெதுவாக்குகிறது, இதனால் ஜாதகர்கள் மீண்டும் மீண்டும் வெற்றி பெற கடினமாக உழைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். முயற்சி மற்றும் விடாமுயற்சி நீடித்த சாதனைகளுக்கு வழிவகுக்கும் என்பதை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.


**பூசத்தில் சனி (கடகம் 3°20' - 16°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

மிகவும் மங்களகரமான நட்சத்திரமான புஷ்ய, சனியின் ஒழுக்கமான இயல்புடன் நன்கு ஒத்துப்போகிறது. ஜாதகர் கட்டமைக்கப்பட்ட முயற்சிகள் மூலம் வெற்றியை அடைகிறார், சமூகத்தில் வழிகாட்டும் சக்தியாக மாறுகிறார்.

**ஆயில்யத்தில் சனி (கடகம் 16°40' - 30°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

அஷ்லேஷம் கையாளுதல் மற்றும் ரகசியத்துடன் தொடர்புடையது. சனியின் இருப்பு ஒரு எச்சரிக்கையான அணுகுமுறையை உருவாக்குகிறது, இது ஜாதகரை வஞ்சகத்திலிருந்து எச்சரிக்கையாக ஆக்குகிறது. அவர்கள் வலுவான மீள் தன்மையை வளர்த்துக் கொள்கிறார்கள், ஆனால் அதிகப்படியான சந்தேகத்தைத் தவிர்க்க வேண்டும்.

**மகத்தில் சனி (சிம்மம் 0° - 13°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**



மகம் வம்சாவளி மற்றும் அதிகாரத்தைக் கையாள்கிறது. சனி அங்கீகாரத்தை தாமதப்படுத்துகிறது, ஆனால் காலப்போக்கில் மரியாதையை உறுதி செய்கிறது. தலைமைப் பாத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு ஜாதகர் பணிவைக் கற்றுக்கொள்கிறார்.

**பூரத்தில் சனி (சிம்மம் 13°20' - 26°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இங்கே, சனி இன்பங்களை மெதுவாக்குகிறது, ஜாதகரை இன்பம் மற்றும் உறவுகளில் ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்ள வைக்கிறது. அவர்கள் அன்பில் நல்லிணக்கத்தைக் கண்டறிவதில் தாமதங்களை எதிர்கொள்கிறார்கள், ஆனால் இறுதியில் ஆழமான, அர்த்தமுள்ள பிணைப்புகளை அடைகிறார்கள்.

**உத்தரத்தில் சனி (சிம்மம் 26°40' - கன்னி 10°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இந்த நட்சத்திரத்தில் சனி கூட்டாண்மையில் பொறுப்பை வளர்க்கிறார். ஜாதகக்காரர் நீண்டகால உறுதிப்பாடுகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வேலை சூழல்களில் சிறந்து விளங்குகிறார்.

**ஹஸ்தத்தில் சனி (கன்னி 10°00' - 23°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ஹஸ்தாவின் படைப்பாற்றல் மற்றும் திறமை சனியின் ஒழுக்கத்தால் செம்மைப்படுத்தப்படுகிறது. ஜாதகக்காரர் கைவினைத்திறன், வணிகம் மற்றும் துல்லியமான வேலைகளில் திறமையானவராக மாறுகிறார்.

**சித்திரையில் சனி (கன்னி 23°20' - துலாம் 6°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இங்கு சனி கடுமையான பயிற்சி மூலம் கலைத் திறன்களைச் செம்மைப்படுத்துகிறார். ஜாதகக்காரர்கள் உறவுகளில் போராட்டங்களை எதிர்கொள்ளலாம், ஆனால் பொறுமை மற்றும் முதிர்ச்சியை வளர்த்துக் கொள்ளலாம்.

**சுவாதியில் சனி (துலாம் 6°40' - 20°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

சுவாதி சுதந்திரத்தை நாடுகிறார். சனியின் செல்வாக்கு ஒழுக்கமான தன்னம்பிக்கையைக் கொண்டுவருகிறது, இருப்பினும் நிலைத்தன்மையை கண்டறிவதில் ஆரம்ப போராட்டங்கள் எழலாம்.

**விசாகத்தில் சனி (துலாம் 20°00' - விருச்சிகம் 3°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

விசாகத்தில் சனி உறுதியையும் லட்சியத்தையும் வளர்க்கிறது. ஜாதகர்கள் வெற்றிக்காகக் கடுமையாக உழைக்கிறார்கள் மற்றும் துன்பங்களை எதிர்கொள்ளும்போது விடாமுயற்சியை கற்றுக்கொள்கிறார்கள்.

**சனியின் நட்சத்திரமான அனுஷத்தில், சனி (விருச்சிகம் 3°20' - 16°40') [நான்கு பாதங்களும் அடக்கம் ]**

இந்த இடம் ஒழுக்கமான நெட்வொர்க்கிங் மற்றும் ராஜதந்திரத்தை ஆதரிக்கிறது. ஜாதகர்கள் உறவுகளில் பொறுமையையும் கட்டமைக்கப்பட்ட சமூக தொடர்புகளையும் கற்றுக்கொள்கிறார்கள்.

**கேட்டையில் சனி (விருச்சிகம் 16°40' - 30°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ஜ்யேஷ்டாவின் அதிகாரபூர்வமான தன்மை சனியால் மென்மையாக்கப்படுகிறது, இது ஜாதகர்களை ஒரு பொறுப்பான தலைவராக ஆக்குகிறது. அவர்கள் தனிமையுடன் போராடலாம், ஆனால் காலப்போக்கில் மரியாதை பெறலாம்.

**மூலத்தில் சனி (தனுசு 0° - 13°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

மூலம் அழிவு மற்றும் உண்மையைத் தேடுவதைக் குறிக்கிறது. சனி ஆழ்ந்த உள் வேலையைக் கட்டாயப்படுத்துகிறது, ஜாதகர்களை ஞானத்திற்கான மாற்றும் அனுபவங்களுக்கு உட்படுத்துகிறது.

**பூராடத்தில், சனி (தனுசு 13°20' - 26°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இந்த நட்சத்திரத்தின் லட்சியவாதம் சனியின் யதார்த்தத்தால் அடித்தளமாக உள்ளது. குருட்டு நம்பிக்கையை விட முயற்சியின் முக்கியத்துவத்தை ஜாதகர் கற்றுக்கொள்கிறார்.

**உத்திராடத்தில், சனி (தனுசு 26°40' - மகரம் 10°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இது ஒரு சக்திவாய்ந்த இடமாகும், ஏனெனில் சனி உத்தர ஆஷாடத்தின் வெற்றி இயல்புடன் நன்றாக இணைகிறது. ஜாதகர் விடாமுயற்சி மூலம் நீண்டகால வெற்றியை அடைகிறார்.

**திருவோணத்தில், சனி (மகரம் 10°00' - 23°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

சனி கற்றல் மற்றும் தகவல் தொடர்புகளில் ஒழுக்கத்தை மேம்படுத்துகிறது. ஜாதகர் அறிவு மற்றும் ஞானத்தைப் பெறுவதில் பொறுமையை வளர்த்துக் கொள்கிறார்.

**அவிட்டதில், சனி (மகரம் 23°20' - கும்பம் 6°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

தனிஷ்டத்தில் சனி கட்டமைக்கப்பட்ட படைப்பாற்றல் மற்றும் தலைமைத்துவத்தை ஆதரிக்கிறது. ஜாதகர் புகழில் தாமதங்களை எதிர்கொள்கிறார்., ஆனால் முயற்சியால் அங்கீகாரத்தை அடைகிறார்.

**சதயத்தில், சனி (கும்பம் 6°40' - 20°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

சதாபிஷகரின் கலகத்தனமான ஆற்றல் சனியால் கட்டுப்படுத்தப்படுகிறது, இதனால் ஜாதகரை சமூக சீர்திருத்தத்திற்காக விடாமுயற்சியுடன் செயல்பட வைக்கிறது.

**பூரட்டாதியில், சனி (கும்பம் 20°00' - மீனம் 3°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இந்த நட்சத்திரத்தில் சனி ஆன்மீக ஒழுக்கத்தை வளர்க்கிறது. ஜாதகக்காரர் கஷ்டங்களைத் தாங்குகிறார், ஆனால் ஞானத்தையும் உள் வலிமையையும் பெறுகிறார்.

**உத்திரட்டாதியில், சனி (மீனம் 3°20' - 16°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இந்த இடம் ஆன்மீக வளர்ச்சியில் பொறுமையை ஆதரிக்கிறது. ஜாதகக்காரர் காலப்போக்கில் நெகிழ்ச்சி தன்மையையும் ஆழமான உள் ஞானத்தையும் வளர்த்துக் கொள்கிறார்.

**ரேவதியில் சனி (மீனம் 16°40' - 30°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ரேவதியின் இரக்க ஆற்றல் சனியால் கட்டமைக்கப்பட்டுள்ளது, ஜாதகரை மற்றவர்களின் நலனுக்காகப் பாடுபடும் ஒழுக்கமான மனிதாபிமானியாக ஆக்குகிறது.

முடிவு: ஒவ்வொரு நட்சத்திரத்திலும் சனியின் இடம் கர்ம பாடங்களைக் கற்பிக்கிறது மற்றும் பொறுமைக்கு வெகுமதி அளிக்கிறது. ஆரம்பத்தில் இது கஷ்டங்களைக் கொண்டு வந்தாலும், இறுதியில் அது ஆழ்ந்த ஞானத்திற்கும் நீண்டகால நிலைத்தன்மைக்கும் வழிவகுக்கிறது. வெவ்வேறு நட்சத்திரங்களில் சனியின் செல்வாக்கைப் புரிந்துகொள்வது தனிநபர்கள் தங்கள் வாழ்க்கைப் பாதைகளை விழிப்புணர்வு மற்றும் விடாமுயற்சியுடன் வழிநடத்த உதவும்.

தமிழ்நாடு இ-பேப்பர்.காம்

## பாபநாசம் அணைகளில் இருந்து பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீரை சபாநாயகர் அப்பாவு திறந்தார்.



திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணை மற்றும் பாபநாசம் அணைகளில் இருந்து பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீரை சபாநாயகர் அப்பாவு திறந்துவைத்தார். கலெக்ட சுகுமார் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் அப்துல் வஹாப் எம்எல்ஏ, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ஜெகதீஸ், முன்னாள் சபாநாயகர் ஆவுடயப்பன் பங்கேற்றனர்.

## சபாநாயகர் அப்பாவு மரக்கன்று நட்டார்



அம்பாசமுத்திரம் புறவழிச்சாலையை நேற்று முதல்வர் ஸ்டாலின் காணொலி வாயிலா திறந்துவைத்தார். இதையொட்டி பொட்டல் கிராமத்தில் கலெக்டர் சுகுமார் தலைமையில் சபாநாயகர் அப்பாவு மரக்கன்று நட்டு வைத்தார்.

## சிறப்பு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் தொடர்பான BLO பயிற்சி



தென்காசி மாவட்டம், இந்திய தேர்தல் ஆணையம், ஈ.சி.இ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று சிறப்பு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் தொடர்பான BLO பயிற்சி கலெக்டர் கமல்கிஷோர், தலைமையில் நடந்தது.

## மரத்தேர் வெள்ளோட்டம்



சென்னை, கோயம்பேடு அருள்மிகு குறுங்காலீஸ்வரர் மற்றும் வைகுண்டவாசப் பெருமாள் திருக்கோவிலில் ரூ.53.90 லட்சம் செலவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மரத்தேர் வெள்ளோட்டத்தினை அமைச்சர் சேகர்பாபு வடம்பிடித்து இழுத்து தொடங்கி வைத்தார்.

## கிறித்தவர்களுக்கான அரசு பொது கல்லறைத் தோட்டங்கள், இஸ்லாமியர்களுக்கான அரசு பொது கபர்ஸ்தான்கள் அமைத்திட நிலம் ஒதுக்கீடு




பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் கிறித்தவர்களுக்கான அரசு பொது கல்லறைத் தோட்டங்கள், இஸ்லாமியர்களுக்கான அரசு பொது கபர்ஸ்தான்கள் அமைத்திட நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவ்விடங்களை சுற்றுச்சுவர், பெயர் பலகை மற்றும் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்து முறையாக பராமரிக்க உள்ளாட்சி அமைப்புகளிடம் வழங்கிடும் விதமாக அதற்கான ஆணையினை நகராட்சி ஆணையர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரிடம் முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். உடன் அமைச்சர் நாசர் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

## வேலூர் ரீடர்ஸ் கிளப் சார்பில் பொதுமக்களுக்கு புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை தூண்டுதல் நிகழ்ச்சி!

**வேலூர், நவ. 2:** வேலூர் டோல்கேட் முத்தண்ணா நகரில் உள்ள பூங்காவில் வேலூர் ரீடர்ஸ் கிளப் சார்பில் பொதுமக்களுக்கு புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை தூண்டுதல் நிகழ்ச்சியினை டார்லிங் வெங்கடசுப்பு தொடங்கி வைத்து கிளப்பிற்கு தேவையான புத்தகங்களை வழங்கினார். அருகில் சுசீலாவெங்கடசுப்பு, தமிழ் இலக்கியா மாமன்ற உறுப்பினர் பாபி, கதிரவன், அமுதா ஆகியோர் உள்ளனர்.




## வந்தவாசியில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் கருத்தரங்கம்

**வந்தவாசி, நவ .02:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் திண்ணை- 130 கருத்தரங்கம் தனியார் திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

அன்பே அறமென எழுக எனும் தலைப்பில் மாநில பொது செயலாளர் ஆதவன் தீட்சண்யா சிறப்புரை வழங்கினார். மேலும் இந்த நிகழ்வில் மாவட்ட தலைவர் கவிஞர்.நாமுத்துவேலன், கிளை தலைவர் பூங்குயில் சிவகுமார், செயலாளர் தோழர் சாந்தி மற்றும் வந்தவாசியின் பல்வேறு ஆளுமைகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.




## சிமெண்ட் சாலை திறப்பு விழா

**திருவண்ணாமலை, நவ.02:** திருவண்ணாமலை மாவட்டம் போளூர் ஒன்றியம் வசூர் ஊராட்சியில் செல்லியம்மன் நகரில் போளூர் சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 12,19,000 மதிப்பீட்டில் சிமெண்ட் சாலையை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக போளூர் சட்டமன்ற உறுப்பினர் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சிமெண்ட் சாலையை திறந்து வைத்தார். மற்றும் கழகத் தோழர்கள், ஊர் பொதுமக்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**



## கிழக்கு மாவட்ட நிர்வாகிகள், பகுதி – வட்ட கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்



சென்னை ஓட்டேரியில் நடந்த திமுக கிழக்கு மாவட்ட நிர்வாகிகள், பகுதி - வட்ட கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் சேகர்பாபு ஆலோசனை வழங்கினார். மேயர் பிரியா, ஜோசப் சாமுவேல் எம்எல்ஏ, வாரியத் தலைவர் ரங்கநாதன்,முன்னணியினர் உடன் உள்ளனர்

## முன்னாள் படைவீரர்கள் குறை தீர்க்கும் கூட்டம்




முன்னாள் படைவீரர்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை கலெக்டர் கலைச் செல்வி வழங்கினார்.

## 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' ஆலோசனைக்கூட்டம்



திட்டக்குடி சட்ட மன்ற தொகுதி சார்பில் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' ஆலோசனைக்கூட்டம் நேற்று அமைச்சர் கணேசன் தலைமையில் நடந்தது.

## ஒரு குறள் ஒரு குரல் நிகழ்வு



ஒரு குறள் ஒரு குரல் நிகழ்வில் திருக்குறள் சொல்லி பரிசு பெற்றோர் பயிலரங்கக் குழுத் தலைவர் கவிஞர் பே.இராஜேந்திரன் தலைமையில் குழுப் படம் எடுத்துக்கொண்டனர்.

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



பெண்ணாடம் பேரூர் லோட்டஸ் இண்டர்நேஷனல் பள்ளியில் நேற்று நடந்த " நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமை துவக்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சிவி கணேசன் வழங்கினார்.

## ரவுசு மணி

நீ வெற்றி
அடையும் போது
உன்னை உன்
உறவுகளும்
நட்புகளும்
புரிந்துகொள்ளும்....
நீ தோல்வி
அடையும் போது
நீ உறவுகளையும்
நட்புகளையும்
புரிந்து
கொள்ளலாம்....



V. முத்து ராமகிருஷ்ணன்

## நகரும் நியாய விலைக்கடை



சோளிங்கர் அடுத்த சின்ன புலிவலம் கிராமத்தில் நகரும் நியாய விலைக்கடையை முனிரத்தினம் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்.

## உங்களுடன் ஸ்டாலின் முகாம்



கீழ்பென்னாத்தூர் ஒன்றியம் ஆவூரில் நேற்று நடந்த உங்களுடன் ஸ்டாலின் முகாமில், பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது உடனடி தீர்வு காணப்பட்டு அதற்கான சான்றிதழ்களை துணை சபாநாயகர் பிச்சாண்டி வழங்கினார்.

## மகாலெட்சுமி திருக்கோயில் குடமுழுக்கு



சென்னை, பெசன்ட் நகர், அருள்மிகு மகாலெட்சுமி திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் அமைச்சர் சேகர்பாபு பங்கேற்றார்.

## கிராம சபைக் கூட்டம்



உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு காஞ்சிபுரம் ஒன்றியம் கம்மராஜபுரத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் கலெக்டர் கலைச்செல்வி பங்கேற்றார்.

## மயிலாடுதுறை–திருவாரூர் இருவழிச்சாலையாக தரம் உயர்வு



மயிலாடுதுறை-திருவாரூர் இருவழிச்சாலையாக தரம் உயர்த்தப்பட்டதை முதல்வர் நேற்று காணொலி வாயிலாக துவக்கி வைத்தார்.கழனிவாசல் சோதனைச்சாவடி அருகில் நடந்த நிகழ்வில் மயிலாடுதுறை கலெக்டர் ஸ்ரீகாந்த், திருவாரூர் கலெக்டர் மோகன சந்திரன், எம்எல்ஏக்கள் நிவேதா முருகன், ராஜ்குமார் பங்கேற்றனர்.

# சுற்றுலா: அதிர்ச்சி அலைகளால் உலகை அதிர வைத்த தொங்கா தீவு!

தொங்கா இராச்சியம் (KINGDOM OF TONGA) என்று அதிகாரப்பூர்வமாக அழைக்கப்படும் நாடு பொலினீசியாவில் 177 தீவுகளைக்கொண்ட ஒரு தீவுக்கூட்டம் ஆகும். 750 சதுர கிலோ மீட்டர்கள் கொண்ட இத்தீவுக்கூட்டம் தெற்குப் பசிபிக் பெருங்கடலில் 7,00,000 சதுர கி.மீ. தூரம் வரை பரவியுள்ளன. தொங்காவின் 1, 03,000 மக்கள் தொகையும் 52 தீவுகளில் வசிக்கின்றனர். இவர்களில் 70 சதவிகித மக்கள் தொங்காதாப்பு என்ற முக்கிய தீவில் வசிக்கின்றனர்.

தொங்கா வட - தெற்கு கோட்டில் கிட்டத்தட்ட 800 கி.மீ. தூரம் பரந்து காணப்படுகிறது. இது வடமேற்கே பிஜூ, வலிசு புட்டுனா ஆகிய நாடுகளினாலும், வடகிழக்கே சமோவாவினாலும், கிழக்கே நியுவேயினாவும், வடமேற்கே நியூசிலாந்தின் ஒரு பகுதியான கெர்மாடெக் தீவுகளினாலும், மேற்கே பிரான்சு நாட்டின் நியூ கலிடோனியா பகுதி, வனுவாட்டு ஆகியவற்றைச் சூழ்ந்துள்ளது.

தொங்காதனதுஇறையாண்மையை எந்த ஒரு வெளிநாட்டு சக்திக்கும் விட்டுக் கொடுக்காமல் இருந்து வருகிறது. 2010 ஆம் ஆண்டில், அரசியல் சட்டச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டமை முதலாவது சார்பாண்மை மக்களாட்சிக்கு வழி வகுத்தது. இதன் மூலம் முழுமையான அரசியல் சட்ட முடியாட்சி ஏற்படுத்தப்பட்டது. தொங்கா தென் தீவுகளில் தொங்காடப்பு தீவின் வட கடற்கரையில் அமைந்துள்ள நுக்கு'அலோபா (NUKUALOFA) எனும் நகரம் தொங்கா இராச்சியத்தின் தலைநகரமாக இருக்கிறது.



2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் நாளன்று ஒரு பெரிய வெடிப்பு தொடங்கியது. வளிமண்டலத்தில் 20 கிலோமீட்டர் தொலைவுக்கு எரிமலையானது சாம்பல் மேகங்களை அனுப்பியது. தொங்கா அரசாங்கம் குடியிருப்பாளர்களுக்கு சுனாமி எச்சரிக்கை விடுத்தது. எரிமலைக்கு அருகில் உள்ள தொங்கா நாட்டுப் புவியியலாளர்கள் வெடிப்புகளையும் 5 கிலோமீட்டர் அளவுக்கு அகலமான சாம்பல் மேகத்தையும் கவனித்தனர்.

மறுநாள், குறிப்பிடத்தக்க அளவு பெரிய வெடிப்பு, மாலை 5.00 மணிக்கு ஏற்பட்டது. எரிமலை சாம்பல் ஆலோசனை மையம் விமான நிறுவனங்களுக்கு மீண்டும் ஒரு ஆலோசனை அறிவிப்பை வெளியிட்டது. எரிமலை வெடிப்பின் சாம்பல் தொங்காவின் முக்கியமான தீவில் நிலச்சரிவை ஏற்படுத்தியது. மேலும் இந்த சாம்பல் மேகம் சூரியனையே மறைத்தது.

தொங்கா நாட்டின் தலைநகரான நுக்கு'அலோபாவில் 65 கிலோ மீட்டர் தொலைவில் உரத்த வெடிச்சத்தங்கள் கேட்டன. வானத்திலிருந்து சிறிய கற்கள் மற்றும் சாம்பல் மழை பொழிந்தது. தொங்காவில் வசிக்கும் பலர் உயரமான பகுதிகளுக்கு தப்பிச் செல்ல முயன்றபோது நெரிசலில் சிக்கிக்கொண்டனர். வெடிச்சத்தம் தோராயமாக 840 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சமோவா வரை கேட்டது. பிஜியில் வசிப்பவர்கள் வெடிச்சத்தத்தை இடியின் ஒலிகளாக விவரித்தனர். நியூசிலாந்தின் வடக்குத் தீவிலும், ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கடற்கரை வரையிலும் பெரும் சத்தம் கேட்டது. விண்வெளியில் இருந்தும் மிகவும் பரந்த வெடிப்புத் தோற்றமும் அதிர்ச்சி அலைகளும் செயற்கைக்கோள்கள் மூலம் அறியப்பட்டன. நியூசிலாந்து முழுவதும் உள்ள வானிலை நிலையங்களால் அழுத்த அலையானது அதிகபட்சமாக 7 ஹெக்டா பாஸ்கல்கள் அளவு வீச்சாக அளவிடப்பட்டது. ஆஸ்திரேலியாவில் உள்ள வானிலை நிலையங்களாலும் அழுத்த அலை பதிவு செய்யப்பட்டது. அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையமும் 5.8 என்ற மேற்பரப்பு அலை அளவுகளில் வெடிப்பைப் பதிவு செய்தது. சுவிட்சர்லாந்தில் 2.5 ஹெக்டோ பாஸ்கல் அழுத்த ஏற்ற இறக்கம் அளவிடப்பட்டது.

எரிமலை வெடிப்பு நேரத்தில் தீவிர மின்னல் செயல்பாடும் பதிவு செய்யப்பட்டது. வைசாலா தேசிய மின்னல் கண்டறிதல் வலையமைப்பு கதிரியக்க அலைகள் வடிவில் மின்னலைக் கண்டறிந்தது. எரிமலை வெடிப்பதற்கு முந்தைய இரண்டு வாரங்களில் பல நூறு முதல் ஆயிரம் மின்னல்கள் கணினியால் பதிவு செய்யப்பட்டன. ஜனவரி 14 முதல் 15 வரை பல்லாயிரக்கணக்கான மின்னல்கள் ஏற்பட்டன. ஜனவரி 15 அன்று காலை 5.00 மணி முதல் 6.00 மணி வரையிலான ஒரு மணி நேர இடைவெளியில் 2,00,000 மின்னல்கள் பதிவு செய்யப்பட்டன என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. ஆக்லாந்து பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானி இந்நிகழ்வை 1000 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் என்று தெரிவித்தார்.

மிகப்பெரும் எரிமலை வெடிப்பு, பல ஆயிரம் மின்னல்கள், அதிகமான இடிச்சத்தங்கள் என்று பல்வேறு பாதிப்புகளுக்குள்ளான தொங்கா நாட்டினை நட்புத் தீவுகள் என்று குறிப்பிடுகின்றனர். அதாவது, 1773 ஆம் ஆண்டில் ஜேம்ஸ் குக் அங்குள்ள தீவில் சென்று இறங்கியபோது, அங்கு 'இனாசி' என்ற ஆண்டுத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவ்விழாவின் போது தீவுகளின் தலைவருக்கு முதல் பழங்கள் வழங்குவது வழக்கமாக இருந்தது. அந்த வேளையில் ஜேம்ஸ் குக் அங்கு சென்றபோது, அங்கிருந்த மக்களால் அவர் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டார். அதனால், அத்தீவு 'நட்புத் தீவுகள்' என அழைக்கப்பட்டது. இன்றும் தொங்காவிற்கு நட்புத்தீவுகள் என்ற பெயர் பயன்பாட்டிலிருக்கிறது.

# வேலைவாய்ப்பு கார்னர்

## பூட்டான் நாட்டில் நர்ஸ் வேலை விண்ணப்பம் வரவேற்பு



சென்னை:பூட்டான் நாட்டின் சுகாதார அமைச்சக மருத்துவமனையில் பணிபுரிய, செவிலியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன.

இதுகுறித்து, தமிழக அரசின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பு:

பூட்டான் நாட்டின் சுகாதார அமைச்சக மருத்துவமனையில் பணிபுரிவதற்கு, குறைந்தபட்சம் இரண்டு ஆண்டு பணி அனுபவத்துடன், பி.எஸ்சி., நர்சிங் தேர்ச்சி பெற்ற, 23 முதல் 45 வயதுக்கு உட்பட்ட, ஆண், பெண் செவிலியர்கள் தேவைப்படுகின்றனர்.

இரண்டு முதல் ஐந்தாண்டு பணி அனுபவம் உள்ள செவிலியர்களுக்கு 65,000 ரூபாய், ஆறு முதல் 10 ஆண்டுகள் பணி அனுபவம் உள்ளவர்களுக்கு, 73,000 ரூபாய், 10 ஆண்டுகளுக்கு மேல் பணி அனுபவம் உள்ளவர்களுக்கு, 86,000 ரூபாய் ஊதியமாக வழங்கப்படும்.

ஊதியம் மற்றும் பணி தொடர்பான விபரங்களை www.omcmanpower.tn.gov.in வாயிலாகவும், 63791 79200 மற்றும் 044 - 2250 2267 என்ற தொலைபேசி எண்கள் வாயிலாகவும் தெரிந்து கொள்ளலாம்.

தகுதியும், விருப்பமும் உள்ளவர்கள் https://forms.gle/js2b341tf2tcpjn56 என்ற இணைப்பில் தங்கள் சுய விவரங்களை பூர்த்தி செய்து, கல்வி சான்றிதழ், பாஸ்போர்ட், அனுபவ சான்றிதழ் போன்றவற்றை ovemclmohsa2021@gmail.com என்ற இ - மெயில் முகவரிக்கு நவ., 3ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நவம்பர் மாத ராசிபலன்

## 01.11.2025 முதல் 30.11.2025 வரை

### மேஷம்

இந்த மாதம் மன வருத்தம் நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. பண தேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சமாளித்து முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும் குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பிள்ளைகளை அவர்களின் போக்கிலேயே விட்டு பிடிப்பது நன்மை தரும். பெண்களுக்கு மற்ற வர்களால் ஏற்படும் தொல்லைகளில் சிக்காமல் இருக்க கவனமாக செயல்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மெத்தன போக்கு காணப்படும். மிகவும் கவனமாக படிப்பது கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும்..

### ரிஷபம்

இந்த மாதம் வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். பயணங்கள் மூலம் அலைச்சல் அதிருப்தி உண்டாகலாம். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் பணத் தேவை ஏற்படலாம். கடன் விவகாரங்களில் கவனமாக செயல்படுவது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும். இயந்திரம், நெருப்பு, ஆயுதத்தை பயன்படுத்துவோர் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சனைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகி விடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம்.

பிள்ளைகளுக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கும். உறவினர்களிடம் கவனம் தேவை. பெண்களுக்கு மற்றவர்களின் வேலைகளுக்காக அலைய நேரிடும். மாணவர்களுக்கு கல்வியை தவிர மற்றவைகளில் கவனத்தை சிதற விடலாம். வாகனங்களில் செல்லும் போதும் எச்சரிக்கையாக செல்வது நல்லது.

### மிதுனம்

இந்த மாதம் பொருளாதார முன்னேற்றம் பண வரவில் திருப்தி ஆகியவை இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்கும். லாபம் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல்திறன் அதிகரிக்கும். மேல் அதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கு இடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும்.

திருமணம் தொடர்பான பேச்சுகள் சாதகமாக முடியும். வீடு, வாகனம் வாங்குவது அல்லது புதுப்பிப்பதில் நாட்டம் அதிகரிக்கும்.

### கடகம்

இந்த மாதம் வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல் ஆர்டர் கிடைப்பதில் தாமதம் போன்றவை ஏற்பட்டாலும், தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு, கூடுதல் பொறுப்புகள் உண்டாகலாம்.

அதிக உழைப்பின் பேரில் வேலைகளை செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கு இடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். உறவினர்கள், அக்கம் பக்கத்தினரிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு எடுத்த காரியம் தடைபட்டு பின்னர் நல்லபடியாக நடந்து முடியும்.

### சிம்மம்

இந்த மாதம் தந்தையின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும் ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். பயணத்தின் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும். வியாபார போட்டிகள் இருந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது. எதிர்பாராத இடமாற்றம் சிலருக்கு உத்தியோக மாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கு இடையே திடீர் மன வருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிப்பதாக இருக்கும். உறவினர்களிடம் பக்குவமாக பேசுவது நல்லது. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

### கன்னி

இந்த மாதம் வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற மனக் கவலை உண்டாகும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை.

உத்தியோகத்தில் சரியாக முடிக்க வேண்டுமே என்ற கவலை உண்டாகும். சக ஊழியர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே சிறு சிறு மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும்போது கவனம் தேவை. பெண்களுக்கு தேவையற்ற சில காரியங்களை செய்ய வேண்டி இருந்தாலும் அதன் மூலம் நன்மை உண்டாகும்.

### துலாம்

இந்த மாதம் பண வரத்து சீராக இருக்கும். வேலைப் பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். அக்கம்பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் ஏற்பட்டு சரியாகும். கவுரவம் பாதிக்கும்படியான சூழ்நிலை வரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். இயந்திரங்கள், ஆயுதங்கள், நெருப்பு ஆகியவற்றை கையாளும் தொழிலாளர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர் பிரச்சனைகள் அதனால் வாக்குவாதம் போன்றவை உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்று ஏற்படலாம்.

விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம்.

பெண்களுக்கு வீண் அலைச்சல், வேலைப் பளு ஆகியவை அதிகரிக்கும்.

### விருச்சிகம்

இந்த மாதம் தடைபட்ட காரியங்களில் இருந்த தடை நீங்கி நன்றாக நடந்து முடியும். எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகி சென்று விடுவார்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். எதிர்பார்த்த ஆர்டர் வரும். பண வரத்து திருப்தி தரும். கடன் பிரச்சனை கட்டுக்குள் இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களின் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும். மேல் அதிகாரிகள் ஒத்துழைப்பும் இருக்கும்.

குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவார்கள். வீட்டில் சுப காரியம் நடக்கும்.

திருமண காரியங்களில் சாதகமான போக்க காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். பெண்களுக்கு எந்த ஒரு சின்ன வேலைக்காகவும் மிகவும் பாடுபட வேண்டி இருக்கும்.

எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும். மாணவர்களுக்கு சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டு படிப்பது நல்லது. வகுப்பில் கவனத்தை சிதற விடாமல் பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

### தனுசு

இந்த மாதம் மன சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சனை வராமல் தடுக்கலாம். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். திடீர் பண தேவை உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. பதவி உயர்வு, சம்பள உயர்வு தாமதப்படலாம். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்பாடுகள் உங்களுக்கு டென்ஷன் தருவதாக இருக்கலாம். கணவன், மனைவிக்கு இடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும்.

பிள்ளைகளிடம் அனுசரித்து செல்வதும் அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. பெண்களுக்கு கோபத்தை கட்டுப்படுத்துவது நன்மை தரும். மாணவர்களுக்கு சக மாணவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். மிகவும் பொறுமையுடனும், கவனமாகவும் பாடங்களை படிப்பது அவசியம்..

### மகரம்

இந்த மாதம் அடுத்தவர்களது செய்கை உங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தலாம். எனவே நிதானமாக இருப்பது நல்லது. சொந்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம். சின்ன விஷயங்களால் மன நிறைவை அடைவீர்கள். எதிர்பாலினரிடம் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். மருந்து, ரசாயனம் போன்ற தொழில்களில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும். எளிதில் மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான கவலைகள் ஏற்படும். குடும்ப செலவை சமாளிக்க பணவரத்து இருக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

மனதில் ஆன்மீக எண்ணங்கள் ஏற்படும். வாழ்க்கை துணை மூலம் மகிழ்ச்சி உண்டாகும்.

உறவினர், நண்பர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும். பெண்களுக்கு எந்த பிரச்சனையையும் சமாளிக்கும் திறமை கூடும்.

### கும்பம்

இந்த மாதம் நீண்ட நாட்களாக தடைபட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். மனதில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அதிர்ஷ்டம் உண்டாகும். விட்டுக் கொடுக்கும் மனப் பான்மை இருந்தாலும் கொள்கைக்காக பாடு படுவீர்கள். அதிகம் பேசுவதை தவிர்ப்பது நல்லது. அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப்பற்றி ஆலோசனை செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் ஒரே குறிக்கோளுடன் இருப்பதை விட்டு வாடிக்கையாளர் தேவை அறிந்து செயல்படுவது முன்னேற்றத்திற்கு உதவும். பண வரத்து அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவார்கள். சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளால் நன்மையும் உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேற்றுமை குறைந்து நெருக்கம் அதிகரிக்கும். வாழ்க்கை துணையின் ஆதரவு இருக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். பெண்களுக்கு அதிகம் பேசுவதை தவிர்த்து செயலில் வேகம் காட்டுவது நல்லது.

### மீனம்

இந்த மாதம் எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். முதலீடுகளில் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. மனதில் தைரியம் உண்டாகும். வீண் வாக்கு வாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை லாபகரமாக செய்வார்கள். தேவையான பண உதவியும் கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்ப வர்களுக்கு அதிக உழைப்பும் அதற்கேற்ற பலனும் உண்டாகும். எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்வது நன்மை தரும். குடும்பத்தில் கலகலப்பு உண்டாகும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். அக்கம்பக்கத்தினரிடமும் உறவினர்கள், நண்பர்களிடம் விவாதங்களை தவிர்ப்பது நல்லது.

முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும். கணவன் மனைவிக்கு இடையே மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு மனதில் தைரியம் உண்டாகும்.

அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

# சுற்றுச்சூழல் பூங்காவில் நீர்நிலைகளின் கரைகளை சீரமைக்கும் பணி: ஸ்டாலின் துவக்கி வைத்தார்



சென்னை, நவ.2:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கிண்டியில் 118 ஏக்கர் பரப்பில் மாபெரும் சுற்றுச்சூழல் பூங்காவில்,முதற்கட்டமாக நீர்நிலைகளின் கரைகளை சீரமைக்கும் பணிகள், அரியவகை மரங்கள், அழகிய மலர்ச் செடிகள் நடவு செய்தல் மற்றும் நாற்றங்கால் பணிகள் ஆகியவற்றை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் கணபதி, பிரபாகரராஜா, அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ் குமார், இந்து குழும இயக்குநர் என்.ராம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பெ.அமுதா, நில நிர்வாக ஆணையர் கே.எஸ். பழனிசாமி, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், வேளாண்மை - உழவர் நலத்துறை செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தோட்டக்கலைத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்ட சென்னை கிண்டியில் உள்ள இந்நிலத்தில், பல்வேறு இயற்கை சார்ந்த அனுபவத்தினை அளிக்கும் வகையில் உலகத்தரம் வாய்ந்த சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இச்சிறப்புமிக்க சுற்றுச்சூழல் பூங்கா தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் அமைக்கப்பட உள்ள நிலையில் இன்றையதினம் முதலமைச்சர் அங்கு அமைந்துள்ள நீர்நிலைகளின் கரைகளை வலுப்படுத்துதல், மரக்கன்றுகளை நடவு செய்தல் மற்றும் நாற்றங்கால் அமைத்தல் ஆகிய பணிகளை தொடங்கி வைத்தார்.

## க்ரைம் கார்னர்

### ஆட்டோ மீது பேருந்து மோதிய விபத்தில் பெண் பலி: பள்ளி மாணவர்கள் காயம்

நத்தம், நவ.2:

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே பூதகுடியை சேர்ந்தவர் சந்திரன் (53).இவர் தனது ஆட்டோவில் சமுத்திராபட்டியில் இருந்து பள்ளி குழந்தைகள் மற்றும் பயணிகளை ஏற்றிக் கொண்டு நத்தம் நோக்கி வந்து கொண்டிருந்தார்.

நத்தம்- அம்மன்குளம் பகுதியில் வந்து கொண்டி ருந்த போது பின்னால் காரைக்குடியில் இருந்து பழனி நோக்கி சென்ற அரசு பேருந்து ஆட்டோ மீது மோதியது. இதில் ஆட்டோ தலைகுப்புற கவிழ்ந்து நொறுங்கியது. இதில் ஆட்டோவில் வந்த மேலூர்-பெரியகற்பூரம்பட்டியை சேர்ந்த நைனம்மாள்(43) என்ற பெண் சம்பவ இடத்திலேயே பலியானார்.

மேலும் சமுத்திராபட்டியை சேர்த்த பள்ளி மாணவர்கள் திவ்யா (17),குகன்(16), மௌனிகா(16), சாருமதி(15), பூமிகா(15), ஜோதிகா(15), ரியாராஜ்(15)ஹரிணி(14) மற்றும் சாகுல்அமீது (65) ஆட்டோ ஓட்டுநர் சந்திரன் உள்ளிட்ட 10 பேர் காயமடைந்தனர். இவர்கள் நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டுள்ளனர். இதில் ஆட்டோ ஓட்டுநர் சந்திரன் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையிலும், படுகாயமடைந்த 6 பேர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளனர்.

மேலும் இச்சம்பவம் குறித்து நத்தம் காவல் ஆய்வாளர் சிவ ராமகிருஷ்ணன், சார்பு ஆய்வாளர் கிருஷ்ணகுமார் ஆகியோர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### பைக்கில் இருந்து தவறி விழுந்து இளைஞர் பலி

நத்தம், நவ.2:

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் முஸ்லீம் மேலத்தெருவை சேர்ந்தவர் மைதீன்ஷா(49) .இவரது மகன் அன்சாரி(21). இவர் கடந்த 28 ஆம் தேதி இரவு தனது பைக்கில் கோவில்பட்டிக்கு சென்று விட்டு மீண்டும் வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்தார்.

கோவில்பட்டி பேருந்து நிறுத்தப் பகுதியில் வந்து கொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்த பைக் சாலையோரத்தில் கவிழ்ந்தது. இதில் பலத்த காயமடைந்த அன்சாரியை அக்கம் பக்கத்தினர் மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கபட்டார். ஆனால் அங்கு சிகிச்சை பலனில்லாமல் அன்சாரி உயிரி ழந்தார். இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### வேடசந்தூரில் லாரி மோதி துணை தாசில்தார் பலி

திண்டுக்கல், நவ.2:

வேடசந்தூரில் லாரி மோதி ஓய்வு பெற்ற பெண் துணை தாசில்தார் பலியானார். திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அய்யனார் நகரில் வசித்து வருபவர் செல்லம்மாள் (வயது 70 ). இவர் துணை தாசில்தாராக பணியாற்றி ஓய்வு பெற்ற வர். இவர் வெள்ளிக்கிழமையன்று சார் நிலை கரு வூலத்தில் அலுவலக பணிக்காக செல்வதற்காக ஒட்டன்சத்திரம் - வேடசந்தூர் சாலையில் வேடசந்தூ ரில் ஆத்துமேட்டில் நடந்து வந்து கொண்டிருந்தார்.

அப்போது சேனன்கோட்டை அரசு நுகர்வோர் கிட்டங்கியில் இருந்து கிராமப் பகுதி ரேசன் கடைகளுக்கு விநியோகம் செய்வதற்காக அரிசி மூட்டை உள்ளிட்ட பொருட்கள் ஏற்றிக்கொண்டு லாரி சென்றது. அப்போது எதிர்பாராத விதமாக முன்னால் நடந்து சென்ற செல்லம்மாள் மீது மோதி யது.இதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார். இந்த சம்பவம் குறித்து வேடசந்தூர் காவல் சார்பு ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் வழக்கு பதிவு செய்து செல்லம்மாளின் உடலை மீட்டு வேடசந்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். லாரியை ஓட்டி விபத்தை ஏற்படுத்திய லாரி ஓட்டு நரான திண்டுக்கல் அருகே உள்ள அப்பணம் பட்டியைச் சேர்ந்த சக்திவேல் (வயது 25) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

### கடற்கரையில் கரை ஒதுங்கிய 4 பெண்களின் சடலங்கள்

சென்னை, நவ.2:

சென்னை எண்ணூர் பெரிய குப்பம் கடற்கரை பகுதியில் 4 இளம் பெண்களின் சடலம் கரை ஒதுங்கியது. இது தொடர்பாக அங்குள்ள மீனவர்கள் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அங்கு கரை ஒதுங்கிய 4 பெண்களின் உடல்களை மீட்ட போலீசார் அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இறந்தவர்கள் யார்..என போலீசார் விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில், இறந்தவர்களில் ஒருவர் இலங்கையை சேர்ந்தவர் எனவும் அவர்கள் அனைவரும் கல்லூரி மாணவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இதில் உயிரிழந்தவர்கள் கல்லூரி மாணவி சாலினி, வேதகி செல்வம், பவானி, காயத்ரி ஆகிய 4 பேர் என அடையாளம் காணப்பட்டது. இதில் தேவகி செல்வம் இலங்கை அகதிகள் முகாமில் தங்கி இருப்பவர் எனவும் மீதமுள்ளவர்கள் கும்மிடிப்பூண்டியை சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது. கடலில் குளிக்கும் போது இவர்கள் இறந்தார்களா? அல்லது வேறு ஏதும் காரணமா என போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கடற்கரை அருகே 4 பெண்களின் சடலங்கள் கிடந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### இதயத்துக்கு எமனாகும் இரவு வெளிச்சம்

*இரவுப் பணி காரணமாக, செயற்கையான மின்விளக்கு வெளிச்சத்தில் அதிக நேரம் செலவிட வேண்டி உள்ளது. இதனால், உடலில் உள்ள இயற்கைக் கடிகாரம் குழப்பமடைந்து பல வித நோய்கள் வரக் காரணமாகிறது.*

*இது குறித்து உலகில் இதுவரை செய்யப்பட்ட ஆய்விலேயேமிகப்பெரியஆய்வைஆஸ்திரேலியாவின் ப்லிண்டர்ஸ் பல்கலை செய்து, முடிவுகளை வெளியிட்டுள்ளது.*

*இது 9.5 ஆண்டுகள் 40 வயதுடைய 88,905 மக்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் இரவு நேரம் விழித்திருந்து மின் விளக்கு வெளிச்சங்களில் வேலை செய்பவர்கள், பகலில் வேலை செய்பவர்கள் என்று இரு தரப்பினரும் ஈடுபடுத்தப்பட்டனர்.*

*இவர்களின் உடல்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது. ஆய்வு முடிவில் இரவு 12.30 முதல் காலை 6 மணி வரை செயற்கை வெளிச்சத்தில் இருப்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு பிறரை விட 56 சதவீதம் அதிகம் இருப்பது தெரியவந்தது.*

*வெளிச்சத்தின் அளவு 'லக்ஸ்' எனும் அலகில் அளக்கப்படுகிறது. இரவு வானத்தின் வெளிச்ச அளவு 0.01 லக்ஸ், இதுவே சிறிய இரவு விளக்கு பொருத்தப்பட்ட அறை என்றால் அதன் வெளிச்ச அளவு 5 லக்ஸ்.*

*105.3 லக்ஸ் வெளிச்ச அளவில் வேலை செய்பவர்களுக்கு மோசமான இதய பாதிப்பு ஏற்படும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.*

*எனவே இரவில் தூங்கி, பகலில் சூரிய வெளிச்சத்தில் அல்லது மின்விளக்கு வெளிச்சத்தில் வேலை செய்வதே சிறந்தது என்பது அறிவியலாளர்கள் கருத்து.*

### பணம் செலுத்த இனி இந்த மோதிரம் போதும்

*முதலில் அட்டை. பிறகு மொபைல், அடுத்து, பணமில்லா பரிவர்த்தனை தொழில்நுட்பத்தில் வருகிறது, மோதிரம். சென்னையின் ஐ.ஐ.டி., பட்டதாரிகள் துவங்கிய 'மியூஸ் வியரபிள்ஸ்' (Muse Wearables) என்ற புத்திளம் நிறுவனம், என் பி.சி.ஐ.,யுடன் இணைந்து, இந்தியாவின் முதல் அணியக்கூடிய பணம் செலுத்தும் முறையை (Wearable Payments Ecosystem) உருவாக்கியுள்ளது. பிரபல ரூபே (RuPay) நிறுவனத்தின் வாயிலாக தற்போது நடைமுறைக்கு வருகிறது.*

*'ரிங் ஒன்' (Ring One) என்ற இந்தக் கருவி, அலங்கார மோதிரம் போல இருந்தாலும், பக்காவான, பணப் பரிவர்த்தனை கருவியாகவும் செயல்படுகிறது. இதை எந்தவொரு என்.எப்.சி. டெர்மினல் கருவியின் மீதும் லேசாக ஒற்றினாலே, தொகையை செலுத்தலாம். இதனுடன் மொபைல் இணைப்புகூடத் தேவையில்லை.*

*கடவுச்சீட்டுகளில் பயன்படும் அதே தரத்திலான 'பாதுகாப்பு அம்சமுள்ள சில்லு' (Secure Element Chip) இதில் உள்ளதால், ஒவ்வொரு பரிவர்த்தனையிலும் வங்கிகளுக்கு இணையான பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.*

*ஏற்கனவே 40 நாடுகளில் பயன்பாட்டில் உள்ள 'மியூஸ் வாலெட்' தளம், இப்போது ரூபே ஒருங்கிணைப்புடன் இந்தியாவிற்கு களமிறங்குகிறது.*

*இந்தக் கருவி இந்திய தொழில்நுட்ப இறையாண்மையை நோக்கிய பயணத்தில் ஒரு முக்கியமான படி. இது வடிவமைப்பு நேர்த்தியுடன் நிதித் தொழில் நுட்பத்தை இணைக்கும் இந்த வசதி, விரைவில் நாடெங்கும் பரவும் என எதிர்பார்க்கலாம்.*

# எல்லா தவறுகளுக்கும் பொதுநல வழக்கு சர்வரோக நிவாரணி அல்ல: சென்னை உயர் நீதிமன்றம்



சென்னை, நவ.2

எல்லா தவறுகளுக்கும் பொதுநல வழக்கு சர்வரோக நிவாரணி அல்ல என சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

குற்ற வழக்குகளில், நீதிமன்றங்களுக்கு காவல் துறையினர் தவறான தகவல்களை அளிப்பதை தடுக்கும் வகையில், விதிகளை வகுக்கக்கோரி, டெல்லியைச் சேர்ந்த ஆதித்யா என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், தனக்கு எதிராக பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்திருந்த மனு உயர் நீதிமன்றத்தில் தனி நீதிபதி முன் விசாரணைக்கு வந்தபோது, அந்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் விசாரணை நடத்தி, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்று, தனது மனு தள்ளுபடி செய்யப்பட்டது எனக் கூறியுள்ளார்.

பின்னர், குற்றப்பத்திரிகை நகல் கேட்டு விண்ணப்பித்த போது, எந்த குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்படவில்லை என மனு திருப்பி அனுப்பப்பட்டது. அதனால், நீதிமன்றத்தில் தவறான தகவலை தெரிவித்த அரசு வழக்கறிஞர் மற்றும் பள்ளிக்கரணை காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் எனவும் கோரப்பட்டிருந்தது.

இந்த பொதுநல வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு, நீதிமன்றத்தில் தவறான தகவலை தெரிவித்திருந்தால், அதற்கு ஆதாரம் இருந்தால், சட்டப்படியான நடவடிக்கையை மனுதாரர் எடுத்திருக்க வேண்டும். அதை விடுத்து, அரசு வழக்கறிஞர், காவல்துறை அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, தனிப்பட்ட காரணத்துக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கை, பொதுநல வழக்காக கற்பனை செய்து கூட பார்க்க முடியாது எனக் கூறி, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

மேலும், எல்லா தவறுகளுக்கும், பொதுநல வழக்கு, சர்வரோக நிவாரணி அல்ல என வலியுறுத்திய நீதிபதிகள், நீதிமன்றத்தை நாட முடியாதவர்களின் பிரச்சினைக்காக மற்றவர்கள் நீதிமன்றத்தை நாட உருவாக்கப்பட்ட பொது நல வழக்கை, தனிப்பட்ட பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக பயன்படுத்த அனுமதிக்க முடியாது எனவும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றங்களில் தவறான தகவல்கள் தெரிவிப்பதை தடுக்க சட்ட விதிகள் ஏற்கனவே உள்ளன. இது சம்பந்தமாக விதிகள் வகுப்பது அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்டது. மனுதாரர் தனது குறைகளுக்கு உரிய அமைப்பை நாடி, நிவாரணம் பெறலாம் எனவும் நீதிபதிகள், தங்கள் உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அண்ணா தி.மு.க.வில் இருந்து செங்கோட்டையன் நீக்கம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, நவ.2:

*சசிகலா, ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரனை சந்தித்த செங்கோட்டையனை அண்ணா தி.மு.க.வில் இருந்து அதிரடியாக நீக்கி எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.*

*அண்ணா தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், அண்ணா தி.மு.க.வில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் கட்சியில் இணைத்து பலப்படுத்த வேண்டும் என்று கூறியதோடு பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு காலக்கெடுவும் நிர்ணயித்தார்.*

*இதனால் அவரது கட்சிப்பதவிகள் அதிரடியாக பறிக்கப்பட்டன. இருப்பினும் கட்சி உறுப்பினராக நீடித்து வந்தார்.*

*இதற்கிடையே பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரின் 118-வது ஜெயந்தி விழா மற்றும் குரு பூஜை நேற்று முன்தினம் ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் நடைபெற்றது.*

*இதில் பங்கேற்க செங்கோட்டையன் மதுரையில் இருந்து முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துடன் ஒரே காரில் பசும்பொன் சென்றார்.*



*அங்கு அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன், ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் ஆகியோர் ஒன்றாக சேர்ந்து, தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் ஆகியோர் இந்த விழாவில் பங்கேற்க வந்த சசிகலாவை சந்தித்து பேசினர்.*

*இந்த நிலையில் சேலத்தில் உள்ள வீட்டில் அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை நேற்று மாலை துணை பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி, பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன், தலைமை நிலைய செயலாளர் எஸ்.பி.வேலுமணி, துணை பொதுச்செயலாளர் நத்தம் விஸ்வநாதன் ஆகியோர் சந்தித்து திடீரென ஆலோசனை நடத்தினர்.*

*இந்த ஆலோசனையின் போது, செங்கோட்டையனை அண்ணா தி.மு.க.வில் இருந்து நீக்க எடப்பாடி பழனிசாமி முடிவு எடுத்தார்.*

*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-*

*அண்ணா தி.மு.க.வின் கொள்கை குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும், கட்சியின் சட்ட திட்டங்களுக்கு மாறுபட்டு, கட்சியின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்து கொண்டதாலும், கட்சியில் இருப்பவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்களுடன் எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்பது தெரிந்திருந்தும் அவர்களுடன் ஒன்றிணைந்து கட்சியின் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில், கட்சிக்கட்டுப்பாட்டை மீறி அண்ணா தி.மு.க.வுக்கு களங்கமும், அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்ற காரணத்தால் ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டத்தை சேர்ந்த செங்கோட்டையன் இன்று (அதாவது நேற்று) முதல் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உள்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார்.*

*அண்ணா தி.மு.க. தொண்டர்கள் யாரும் இவருடன் எவ்விதத்தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என கேட்டுக்கொள்கிறேன்.*

# 10 ஆண்டு ராணுவ ஒப்பந்தம்: இந்தியா-அமெரிக்கா கையெழுத்து

**கோலாலம்பூர், நவ.2:**

மலேஷியாவில் நடந்த, 'ஆசியான்' உறுப்பு நாடுகளின் ராணுவ அமைச்சர்கள் மாநாட்டில், இந்தியா அமெரிக்கா இடையே, 10 ஆண்டுகளுக்கான ராணுவ செயல்பாட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மந்திரி சபையில் ராணுவத்துறை மந்திரியாக பீட்டர் ஹெக்செத் பொறுப்பேற்றார்.

கடந்த ஜூலையில் மத்திய ராணுவ மந்திரி ராஜ்நாத் சிங் அமெரிக்கா ராணுவ மந்திரியிடம் தொலைபேசியில் பேசினார்.

அப்போது இருநாட்டு ராணுவ உறவுகளை வலுப்படுத்த புதிய ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும் என முடிவானது.

இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாக தேஜஸ் போர் விமானத்திற்கான ஜி.இ.எப். 404 என்ஜின்கள் அமெரிக்காவில் இருந்து கொள்முதல், இந்தியாவில் எப்-14 போர் விமானம் தயாரிக்க இந்துஸ்தான் ஏரோநாட்டிகல் நிறுவனத்துடன் அமெரிக்காவின் ஜி.இ. ஏரோஸ்பேஸ் நிறுவனம் கைகோர்ப்பு உள்ளிட்டவை அடங்கியிருந்தன.

இருப்பினும் இருநாடுகளிடையே ஏற்பட்ட வர்த்தக மோதலால் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாவதில் தாமதம் ஏற்பட்டது. இந்த நிலையில் மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் ஆசியான் உச்சி மாநாடு நடந்து வருகிறது.



இதில் மத்திய ராணுவ மந்திரி ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார். அமெரிக்கா ராணுவ மந்திரி பீட்டர் ஹெக்செத் பங்கேற்றநிலையில் இருநாடுகளிடையேயான 10 ஆண்டுகள் ராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது.

10 ஆண்டு ஒப்பந்தம் இதுகுறித்து ராஜ்நாத் சிங், "அமெரிக்கா-இந்தியா இடையேயான முக்கிய ராணுவ கூட்டாண்மை அமைப்புக்காக 10 ஆண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம். இது வளர்ந்து வரும் மூலோபாய ஒத்துழைப்புக்கான அடையாளம்" என்றார்.

பீட்டர் ஹெக்செத், "இந்த ஒப்பந்தம் எங்களுடைய பாதுகாப்பு கூட்டாண்மையை மேலும் முன்னேற்றும்.

இது ஆசிய- பசிபிக் பிராந்தியத்தின் நிலைத்தன்மைக்கும், அமைதிக்கும் தூணாக அமையும். ராணுவம் தொடர்பான ஒத்துழைப்பு, தகவல் பகிர்வு, தொழில்நுட்ப ஒத்திசைவு ஆகியவற்றை கூட்டாக இணைந்து மேம்படுத்துவோம்" என்றார்.

## மிரட்டும் குளிர் ஜம்மு-காஷ்மீரில் பள்ளி வேலை நேரம் மாற்றம்

**ஜம்மு, நவ.2:**

கடும் குளிர் காரணமாக ஜம்மு -காஷ்மீர் பள்ளத்தாக்கு முழு வதும் பள்ளிகள் செயல்படும் நேரங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக யூனி யன் பிரதேச பள்ளிக் கல்வி இயக்குநர கம் அறிவித்துள்ளது. இதுதொடர்பாக காஷ்மீர் பள்ளிக் கல்வி இயக்குநரகம் பிறப்பித்த உத்தர வில், "பள்ளத்தாக்கில் குளிர்காலம் தொடங்கியதைத் தொடர்ந்து, பள்ளி நேரங்களில் பருவகால மாற்றத்தின் ஒரு பகுதியாக அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, நவம்பர் 1ஆம் தேதி முதல் பள்ளத்தாக்கு முழு வதும் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பள்ளிகள் செயல்படும். அதே போன்று ஸ்ரீநகர் நகராட்சி எல்லைக்கு வெளியே உள்ள பள்ளிகளுக்கு, காலை 10:30 மணி முதல் பிற்பகல் 3:30 மணி வரை செயல்படும்" என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும், திருத்தப்பட்ட நேரங்களை எந்தவித மாறுதலும் இல்லா மல் கண்டிப்பாக அனைத்து கல்வி நிறு வனங்களும் கடைப்பிடிக்குமாறு கல்வி இயக்குநரகம் அறிவுறுத்தியுள்ளது. குளிர்காலத்திற்கு முன் ஸ்ரீநகர் நகராட்சி எல்லைக்குள் உள்ள பள்ளி களுக்கான நேரங்கள் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரையிலும், வெளியே உள்ள பள்ளிகள் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் செயல்பட்டன.

## மூச்சு திணறும் டில்லி தலைநகரை விட்டு வெளியேற மருத்துவர்கள் அறிவுரை

**புதுடெல்லி, நவ.2:**

தீபாவளி பண்டிகைக்குப் பின்னர் தில்லியில் காற்று மாசு தீவிர மடைந்து வருகிறது. தற்போது தில்லியின் காற்று மாசு விகிதம் 301 முதல் 400 வரை என்ற அளவில் மிக மோசமான நிலை யில் உள்ளது. இதனால் நுரையீரல் தொற்று பாதிப்புகள் மற்றும் மூச்சு விடு வதில் சிரமத்துடன் பலரும் மருத்துவ மனைகளை நாடுவது அதிகரித்துள்ளது.

மருத்துவமனைகளின் சுவாச நோயாளி களின் பிரிவும் நிரம்பி வழிகிறது. இந்நிலையில், தில்லி - என்சிஆர் பகுதியில் நுரையீரல் பிரச்சனை இருப்ப வர்களாக இருந்தால் டிசம்பர் மாதம் இறுதி வரை தில்லியிலிருந்து வெளியேறி விடுங்கள் என்று மருத்துவமனைகளின் நுரையீரல் மருத்துவர்கள் அறிவுறுத்துவ தாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தில்லியில் நிலவும் காற்று மாசு, தற்காலிக மற்றும் நிரந்தர பிரச்சனைகளை நுரை யீரலில் ஏற்படுத்திவிடும். மேலும் மற்ற உடல் உறுப்புகளையும் கடுமையாக பாதிக்கும். குறிப்பாக குழந்தைகளுக்கு நுரையீரல் வளர்ச்சியையே பாதிக்கும்.

நாட்டின் மற்றப் பகுதிகளை விடவும், புது தில்லியில் வாழும் குழந்தைகளுக்கு ஆஸ்துமா பிரச்சனை அதிகரித்து வருகிறது. இதனால் சிரமப்படுபவர்கள் தில்லியை விட்டு வெளியேறுவது நல்லது என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## அமலாக்கத் துறைக்கு உச்சநீதிமன்றம் குட்டு

**புதுடெல்லி, நவ.2:**

கடந்த ஜூன் மாதம் பிரபல மூத்த வழக்கறிஞர்களான அரவிந்த் தாதர் மற்றும் பிரதாப் வேணுகோபால் ஆகியோருக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியிருந்தது.

வழக்கறிஞர்களுக்கு தன்னிச்சையாக சம்மன் அனுப்பிய விவகாரம் தொடர்பாக உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது. இந்த வழக்கு வெள்ளியன்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதி கே.வினோத் சந்திரன், நீதிபதி என்.வி.அஞ்சாரியா ஆகி யோர் அடங்கிய அமர்வு இருதரப்பு வாதத்திற்குப் பின், "உரிய காரணமின்றி, வழக்கு விவரங்களை அறிய வழக்கறி ஞர்களுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பக்கூடாது.

அதே போல எவ்வித விசாரணை அமைப்புகளும் வழக்கறிஞர்களுக்கு தன்னிச்சையாக சம்மன் அனுப்பக் கூடாது. சம்மன் அனுப்பினால் எந்த விதியின் கீழ் அனுப்பப்படுகிறது என்பதை விசாரணை அமைப்பு தெரியப்படுத்த வேண்டும்" என உத்தரவிடப்பட்டுள்ளது.

## உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் வழக்குகளில் தலையிடக் கூடாது! உத்தரகண்ட் உயர்நீதிமன்றத்திற்கு தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் எச்சரிக்கை

**புதுடெல்லி, நவ.2:**

பாஜக ஆளும் உத்தர கண்ட் மாநிலத்தின் நை னிடால் மற்றும் பவுரி கர்வால் மாவட்ட ங்களில் அமைந்துள்ளது கார்பெட் புலிகள் காப்பகம். இது இந்தியாவின் முதல் தேசியப் பூங்கா ஆகும்.

இந்த தேசிய பூங்காவில் சட்டவிரோத கட்டுமானத்திற்காக வனத்துறை அதிகாரி ராகுல் மீது சட்ட நடவடிக்கை எடுப்ப தை உத்தரகண்ட் உயர்நீதிமன்றம் நிறுத்தி வைத்தது. இதுதொடர்பான வழக்கு உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஆனால் உத்தரகண்ட் உயர்நீதிமன்றம் தலையிட்டு வனத்துறை அதிகாரி ராகுல் மீது சட்ட நடவடிக்கை எடுப்ப தை நிறுத்தி வைத்ததற்கு உச்சநீதி மன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள் ளது.





இருதரப்பு வாதத்திற்குப் பின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதி கே.வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு, "உயர்நீதிமன்றம் ஒரு அரசியலமைப்பு நீதிமன்றம் என்பதில் எந்த சந்தேக மும் இல்லை.

ஆனால் உச்சநீதிமன்றத் தில் ஒரு வழக்கு விசாரிக்கப்படும் போது, உயர்நீதிமன்றம் அதிலிருந்து விலகி இருக்க வேண்டும். வனத்துறை அதிகாரி உத்தரகண்ட் உயர்நீதிமன்றத் திற்குச் சென்றதற்கும், உயர்நீதி மன்றம் இந்த வழக்கில் தலையிட்ட தற்கும் கடும் கண்டனம் தெரிவிக்கிறோம். மேலும் வனத்துறை அதிகாரிக்கு நீதிமன்ற அவமதிப்பு நோட்டீஸ் அனுப்ப பரிந்துரை செய்கிறோம்" என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டது. உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளில் தலையிடக் கூடாது என்பது சாதாரண வழக்கறி ஞர்களுக்கு கூட தெரியும்.

ஆனால் உத்தரகண்ட் உயர்நீதி மன்ற நீதிபதிகள் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் தலை யிட்டு உத்தரவு பிறப்பித்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

## என் குடும்பத்துக்கு எதுவும் செய்ததில்லை; மக்களுக்காக உழைத்தேன்: இன்னும் ஒரு வாய்ப்பு தாருங்கள்

### வாக்காளர்களுக்கு வீடியோ வெளியிட்ட நிதிஷ்குமார்

**பாட்னா, நவ.2:**

என் குடும்பத்திற்காக அல்ல, மக்கள் அனைவருக்காகவும் உழைத்தேன். இன்னும் ஒரு வாய்ப்பை மக்கள் தர வேண்டும் என வாக்காளர்களுக்காக இன்று வெளியிட்ட வீடியோவில் பீகார் முதல்வர் நிதிஷ் குமார் தெரிவித்துள்ளார்.



பீகாரில் முதலமைச்சர் நிதிஷ்குமார் தலைமையில் ஐக்கிய ஜனதா தளம், பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடக்கிறது. 243 தொகுதிகள் கொண்ட சட்டசபைக்கு இரு கட்டங்களாக தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் கட்ட தேர்தல் நவம்பர் 6ம் தேதி 121 தொகுதிகளுக்கு நடக்கிறது. இந்நிலையில் முதல் கட்ட தேர்தலுக்கு 5 நாட்களுக்கு முன்பு இன்று நிதிஷ்குமார் வீடியோவில் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிரு ப்பதாவது:

எனது அன்புக்குரிய பீகாரின் சகோதர சகோதரிகளே, என்னை 2005ம் ஆண்டு முதல் பீகார் மக்களுக்காக உழைக்க நீங்கள்தான் வாய்ப்புக் கொடுத்தீர்கள். எப்போது என்னிடம் பீகார் ஆட்சி கிடைத்ததோ அதுநாள் முதல் நான் இரவு பகலாக கடும் பணியாற்றி முழு நேர்மையுடன் இருந்து வந்துள்ளேன்.

ராஷ்ட்ரிய ஜனதா தளம் அதன் 15 ஆண்டுகால ஆட்சியில் காட்டாட்சி ராஜ்ஜியம் நடந்தது. தேசிய ஜனநாயக கூட்டணி அரசு சட்டம் ஒழுங்கை மேம்படுத்தவும், பெண்கள் இரவில் தனியாகப் பாதுகாப்பாகப் பயணிக்க முடியும் என்பதை உறுதி செய்யவும் பாடுபட்டது. முதலில், அவர்கள் பாழ்படுத்திச் சென்றதை மீட்கவே பணியாற்ற வேண்டியதாக இருந்தது. அதனுடன் சேர்த்து பிற துறைகளின் முன்னேற்றங்களில் கவனம் செலுத்தினோம். இன்று பல துறைகளில் நாம் முன்னேறியிருக்கிறோம். கல்வி, சுகாதாரம், சாலைகள், மின்சாரம், நீர் வழங்கல், விவசாயம் மற்றும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு ஆகியவற்றின் நிலைமை கணிசமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

பீகாரின் முதல்வராக இருந்த லாலு, மாநிலத்துக்காக எதுவுமே செய்யவில்லை. வெறும் குடும்ப அரசியல் மட்டும்தான் செய்துகொண்டிருந்தார். முந்தைய அரசு பெண்களுக்காக எதையும் செய்யவில்லை. தற்போது நாங்கள் பெண்களுக்காக பாடுபட்டு வருகிறோம். அவர்கள் யாரையும் சாராமல் வாழ வழிவகை ஏற்படுத்தி வருகிறோம். இந்துவாக இருந்தாலும் சரி முஸ்லிமாக இருந்தாலும் சரி, அனைவருக்காகவும் பாடுபட்டு வருகிறோம். நான் என் குடும்பத்துக்காக எதையும் செய்ததில்லை. தற்போது, பீகாரியாக இருப்பது அவமரியாதைக்குரியது அல்ல, மரியாதைக்குரியது என்ற அளவில் மாற்றியிருக்கிறோம்.

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு, பீகாரின் வளர்ச்சிப் பயணத்திற்கு முழு ஆதரவையும் அளித்து வருகிறது. தேசிய ஜனநாயக கூட்டணியால் மட்டுமே பீகாரை மேம்படுத்த முடியும்.

மத்தியிலும் மாநிலத்திலும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசுகள். இருவருமே ஆட்சி செய்வதால் வளர்ச்சியின் வேகம் அதிகரித்துள்ளது. மாநிலம் வளர்ச்சியடைய பிரதமர் மோடிக்கு ஆதரவு அளியுங்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள். மீண்டும் ஒரு வாய்ப்புக் கொடுங்கள். மேலும் உங்களுக்காகப் பணியாற்றுவோம். முன்னணி மாநிலமாக வளர்ச்சியடைவதைப் பார்க்கலாம். நவம்பர் 6 மற்றும் 11ம் தேதிகளில் வாக்குப் பதிவு மையங்களுக்கு வந்து தவறாமல் வாக்களியுங்கள் என்று தெரிவித்துள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

## ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 20 ஓவர் போட்டி: இந்திய அணி தோல்வி

**மெல்போர்ன், நவ.2:**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2-வது 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 125 ரன்னில் சுருண்டு படுதோல்வி அடைந்தது.

ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் கான்பெர்ராவில் நடந்த முதலாவது ஆட்டம் மழையால் பாதியில் ரத்தானது. இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2-வது 20 ஓவர் போட்டி மெல்போர்னில் நேற்று நடந்து. 82,438 ரசிகர்கள் குவிந்ததால் ஏறக்குறைய மைதானம் நிரம்பி வழிந்தது.

'டாஸ்' ஜெயித்த ஆஸ்திரேலிய கேப்டன் மிட்செல் மார்ஷ் முதலில்பந்து வீசுவதாக அறிவித்தார். இதன்படி அபிஷேக் ஷர்மாவும், சுப்மன் கில்லும் இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கினர்.

ஆடுகளத்தில் கொஞ்சம் ஈரப்பதம் காணப்பட்டதுடன், வேகத்துக்கு உகந்த வகையில் நன்கு பவுன்சும் ஆனது. அதை நேர்த்தியாக பயன்படுத்தி கொண்ட ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஹேசில்வுட் இந்திய பேட்ஸ்மேன்களை மிரட்டினார். சுப்மன் கில் (5 ரன்) அவர் வீசிய பந்தை தூக்கியடித்து கேட்ச் ஆனார். அடுத்து வந்த சஞ்சு சாம்சனை (2 ரன்) நாதன் எலிஸ் வெளியேற்றினார்.

தொடர்ந்து கேப்டன் சூர்யகுமார் யாதவ் (1 ரன்), திலக் வர்மா (0) ஆகியோர் ஹேசில்வுட்டின் ஒரே ஓவரில் விக்கெட் கீப்பர் இங்லிசிடம் சிக்கினர். இதனால் 32 ரன்னுக்குள் 4 விக்கெட்டுகளை இழந்து இந்தியா திண்டாடியது. அக்ஷர் பட்டேலும் (7 ரன்) தாக்குப்பிடிக்கவில்லை. ஒரு பக்கம் விக்கெட் சரிந்தாலும் மற்றொரு தொடக்க வீரர் அபிஷேக் ஷர்மா நிலைத்து நின்று தனக்கே உரிய பாணியில் அதிரடியாக விளையாடி ரசிகர்களை மகிழ்வித்தார். அவருக்கு ஹர்ஷித் ராணா நன்கு ஒத்துழைப்பு தந்தார்.

அபிஷேக் ஷர்மா 23 பந்துகளில் தனது 6-வது அரைசதத்தை நிறைவு செய்தார். 15 ஓவர்களில் இந்தியா 5 விக்கெட்டுக்கு 105 ரன்கள் எடுத்திருந்ததை பார்த்த போது எப்படியும் ஸ்கோர் 150-ஐ தாண்டும் என்றே தோன்றியது. ஆனால் இந்த கூட்டணி உடைந்ததும் மறுபடியும் இந்தியா சீர்குலைந்து போனது. ஹர்ஷித் ராணா 35 ரன்களில் (33 பந்து, 3 பவுண்டரி, ஒரு சிக்சர்) கேட்ச் ஆனார். அபிஷேக் ஷர்மா தனது பங்குக்கு 68 ரன்கள் (37 பந்து, 8 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்த நிலையில் எல்.டபிள்யூ. ஆனார்.

முடிவில் இந்தியா 18.4 ஓவர்களில் 125 ரன்னில் ஆல்-அவுட் ஆனது. அபிஷேக், ஹர்ஷித் ராணா தவிர இந்திய அணியில் வேறு யாரும் இரட்டை இலக்கத்தை தொடவில்லை. ஆஸ்திரேலிய தரப்பில் ஹேசில்வுட் 4 ஓவர்களில் 13 ரன் மட்டுமே வழங்கி 3 விக்கெட்டுகளை சாய்த்து அமர்க்களப்படுத்தினார். நாதன் எலிஸ், சேவியர் பார்லெட் தலா 2 விக்கெட் எடுத்தனர்.

அடுத்து 126 ரன் இலக்கை நோக்கி ஆடிய ஆஸ்திரேலிய அணியில் கேப்டன் மிட்செல் மார்சும், டிராவிஸ் ஹெட்டும் (28 ரன்) முதல் விக்கெட்டுக்கு 51 ரன்கள் (4.3 ஓவர்) திரட்டி வெற்றிப்பாதையை எளிதாக்கினர். மார்ஷ் 46 ரன்களும் (26 பந்து, 2 பவுண்டரி, 4 சிக்சர்), அடுத்து வந்த ஜோஷ் இங்லிஸ் 20 ரன்களும் விளாசினர். இதன் பிறகு சில விக்கெட்டுகளை இழந்தாலும் அதனால் அந்த அணிக்கு பாதிப்பு இல்லை. ஜஸ்பிரித் பும்ரா, வருண் சக்ரவர்த்தி, குல்தீப் யாதவ் தலா 2 விக்கெட் வீழ்த்தியது மட்டுமே ஒரே ஆறுதல்.

ஆஸ்திரேலியா 13.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 126 ரன்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 40 பந்துகள் மீதம் இருந்த நிலையில் ஆஸ்திரேலியா இலக்கை எட்டிப்பிடித்தது. அதிக பந்து எஞ்சியிருந்த வகையில் இந்தியாவுக்கு 2-வது மோசமான தோல்வியாக அமைந்தது. ஹேசில்வுட் ஆட்டநாயகன் விருதை பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் ஆஸ்திரேலியா 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இவ்விரு அணிகள் மோதும் 3-வது 20 ஓவர் போட்டி ஹோபர்ட்டில் இன்று நடக்கிறது.

## மகளிர் உலகக்கோப்பையை இந்தியா வென்றால் இத்தனை கோடி ரூபாய் பரிசு? - பிசிசிஐ திட்டம்

**மும்பை, நவ.2:**

இந்தியாவில் நடைபெற்று வரும் மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் நவிமும்பையில் நடந்த பரபரப்பான அரையிறுதியில் இந்திய அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியாவை விரட்டியடித்து 3-வது முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

இதில் ஆஸ்திரேலியா நிர்ணயித்த 339 ரன் இலக்கை ஜெமிமா ரோட்ரிக்ஸ் (127 ரன், 14 பவுண்டரி), கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் (89 ரன்) ஆகியோரது அசாத்தியமான பேட்டிங்கால் இந்திய அணி 48.3 ஓவர்களில் எட்டிப்பிடித்தது. இதன் மூலம் பெண்கள் ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிகபட்ச ஸ்கோரை விரட்டிப்பிடித்த அணி என்ற புதிய சாதனையை இந்தியா படைத்தது.

இந்த சூழலில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 3 மணிக்கு நவிமும்பை மைதானத்தில் நடக்கும் இறுதிப்போட்டியில், தங்களது முதலாவது உலகக்கோப்பைக்காக இந்தியா- தென் ஆப்பிரிக்க அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

இந்நிலையில் இந்த உலகக்கோப்பையை வென்றால் இந்திய மகளிர் அணிக்கு ரூ.125 கோடியை பரிசுத்தொகையாக வழங்க பி.சி.சி.ஐ. முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த ஆண்டு டி20 உலகக்கோப்பையை வென்ற இந்திய ஆண்கள் அணிக்கு 125 கோடி ரூபாயை பரிசுத்தொகை வழங்கிய நிலையில், மகளிர் அணிக்கும் அதே தொகையை வழங்க பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# ஒற்றை நாகரிகத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகம் - எகிப்தில் திறப்பு



**கெய்ரோ, நவ.2:**

எகிப்து நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையிலும், அதிகமான சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் நோக்கிலும் கடந்த 20 ஆண்டுகளாக கட்டப்பட்டு வரும் 'கிராண்ட் எகிப்தியன் அருங்காட்சியகம்' இன்று திறக்கப்படுகிறது. இந்த திறப்பு விழாவில் மன்னர்கள், மந்திரிகள் மற்றும் பல்வேறு உலகத் தலைவர்கள் கலந்து கொள்ள உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்தை "மனித கலாச்சாரம் மற்றும் நாகரிக வரலாற்றில் ஒரு விதிவிலக்கு" என்று எகிப்து ஜனாதிபதி அலுவலகம் பாராட்டியுள்ளது. இது ஒற்றை நாகரிகத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் பண்டைய எகிப்தின் வாழ்க்கையை விவரிக்கும் 50,000-க்கும் மேற்பட்ட கலைப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அருங்காட்சியகம் கெய்ரோவிற்கு வெளியே, 3 பிரமிடுகள் மற்றும் ஸ்பிங்க்ஸ் ஆகியவை அமைந்திருக்கும் கிசா பீடபூமியில் கட்டப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகம், 2014-ம் ஆண்டு எகிப்து ஜனாதிபதியாக அப்தெல்-பத்தா எல்-சிசி பதவியேற்றபோது முன்னெடுக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றாகும். சுமார் 1 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள இந்த அருங்காட்சியகத்தின் கட்டுமானம் 2005-ல் தொடங்கப்பட்டு, பின்னர் அரசியல் காரணங்களால் கைவிடப்பட்டது.

தற்போது முழுமையாக கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகம், அருகிலுள்ள பிரமிடுகளைப் போலவே உயர்ந்த, முக்கோண கண்ணாடி முகப்பைக்கொண்டுள்ளது. இதில் மொத்தம் 24,000 சதுர மீட்டர் (2,58,000 சதுர அடி) நிரந்தர கண்காட்சி இடம் உள்ளது. மன்னர் துட்டன்காமூனின் சேகரிப்பில் இருந்து எடுக்கப்பட்ட 5,000 கலைப்பொருட்களுக்காக 2 அரங்குகள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. ஆங்கிலேய தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஹோவர்ட் கார்ட்டரால் 1922-ம் ஆண்டு துட்டன்காமூனின் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு கிடைத்த பொருட்கள் முதல் முறையாக காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

மேலும், அருங்காட்சியகத்தை பிரமிடுகளுடன் இணைக்கும் ஒரு பாலம் கட்டப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் அவற்றுக்கிடையே கால்நடையாகவோ அல்லது மின்சார வாகனங்கள் மூலமாகவோ செல்ல அனுமதி வழங்கப்பட உள்ளது. அருங்காட்சியகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளையும் அருகிலுள்ள கிசா பிரமிடுகளையும் எகிப்து அரசு புதுப்பித்துள்ளது. அருங்காட்சியக வாயில்களுக்கு வெளியே ஒரு மெட்ரோ நிலையம் கட்டப்பட்டு வருகிறது. மேலும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக கெய்ரோ நகரத்திற்கு மேற்கில், அருங்காட்சியகத்தில் இருந்து 40 நிமிட தூரத்தில் ஸ்பிங்க்ஸ் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகம் வரும் செவ்வாய்க்கிழமை முதல் பொதுமக்களுக்காக திறக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

## தான்சானியா தேர்தல் வன்முறையில் 700 பேர் பலி



**டொடோமா, நவ.2:**

கிழக்கு ஆப்பிரிக்க நாடான தான்சானியாவில் கடந்த 29-ந்தேதி நடந்த தேர்தலில் அதிபர் சாமியா சுலுஹூ ஹாசன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். ஆனால் தேர்தல் முடிவை எதிர்த்து நாடு முழுவதும் பெரும் போராட்டம் வெடித்தது. இது வன்முறை மற்றும் கலவரமாக மாறியது. இதை கட்டுப்படுத்த போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்த போராட்டம் மற்றும் வன்முறையில் 700 பேர் வரை உயிரிழந்ததாக பிரதான எதிர்க்கட்சியான பதேமா தெரிவித்து உள்ளது. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டிருக்கலாம் என பாதுகாப்புத்துறை வட்டாரங்களும் உறுதிப்படுத்தி உள்ளன. பலியானோர் எண்ணிக்கையை வெளியிட பல ஆஸ்பத்திரிகள் மறுத்து உள்ளன. இதனால் உயிரிழப்பு குறித்த துல்லிய எண்ணிக்கை வெளியாவதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது.

## கரீபியன் நாடுகளை தாக்கிய புயல் - 49 பேர் பலி



**கிங்ஸ்டன், நவ.2:**

பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவுக்கூட்டமைப்பு நாடுகள் கரீபியன் தீவுநாடுகள் என அழைக்கப்படுகின்றன.

பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவுக்கூட்டமைப்பு நாடுகள் கரீபியன் தீவுநாடுகள் என அழைக்கப்படுகின்றன. இதில் கியூபா, ஹைதி, ஜமைக்கா, டொமினிக்கன் குடியரசு உள்பட 13 நாடுகள் உள்ளன.

இதனிடையே, பசிபிக் பெருங்கடலில் மொலீசா என்ற புயல் உருவானது. இந்த புயல் நேற்று கரீபியன் நாடுகளை தாக்கியது. புயலால் பலத்த காற்றுடன் கனமழை கொட்டித்தீர்த்தது. புயலால் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன. சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மொலீசா புயலால் 49 பேர் உயிரிழந்துள்ளனர். ஹைதி நாட்டில் 30 பேரும் ஜமைக்கா நாட்டில் 19 பேரும் என மொத்தம் 49 பேர் உயிரிழந்துள்ளனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். புயலால் 52 பில்லியன் டாலர்கள் அளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மொலீசா புயல் தற்போது பெர்முடா நோக்கி நகர்ந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையே போர் நிறுத்தம்; 6ஆம் தேதி முக்கிய முடிவு

**காபூல், நவ.2:**

ஆப்கானிஸ்தான் மண்ணில் இருந்து எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பொறுத்துக்கொள்ள முடியாது என பாகிஸ்தான் ராணுவ தளபதி கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021-ம் ஆண்டு தலீபான்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அண்டை நாடான பாகிஸ்தானுடனான மோதல் போக்கு அதிகரித்தது. இந்த மாத தொடக்கத்தில் காபூலில் குண்டு வெடிப்பு சம்பவம் நடந்தது. இதற்கு பாகிஸ்தானின் வானவெளி தாக்குதல் தான் காரணம் என ஆப்கானிஸ்தான் குற்றம் சாட்டியது. இதற்கு பதிலடியாக நடத்தப்பட்ட தாக்குதலில் பாகிஸ்தான் வீரர்கள் 58 பேர் கொல்லப்பட்டதாக ஆப்கானிஸ்தான் கூறியது. ஆனால் இந்த எண்ணிக்கையை பாகிஸ்தான் மறுத்தது. 23 வீரர்கள் மட்டும் உயிர் இழந்த தாகவும், இது எல்லை தாண்டிய பயங்கரவாதம் என்றும் பாகிஸ்தான் தெரிவித்தது.

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதிகளின் மறைவிடங்களை குறி வைத்து பாகிஸ்தான் நடத்திய தாக்குதலால் மேலும் பதற்றம் அதிகரித்தது. இரு நாடுகளுக்கு இடையே வர்த்தகம் மற்றும் போக்கு வரத்து துண்டிக்கப்பட்டதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

இந்த போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் கத்தார் மற்றும் துருக்கி ஈடுபட்டது. இது தொடர்பாக இஸ்தான்புல்லில் தொடர்ச்சியாக 4 நாட்கள் அமைதி பேச்சு வார்த்தை நடந்தது. ஆனாலும் இதில் உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. நேற்று மீண்டும் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் இரு நாடுகளும் போர் நிறுத்தத்தை கடைபிடிக்க ஒப்புக்கொண்டதாக துருக்கி வெளியுறவு துறை அமைச்சகம் தெரிவித்து உள்ளது. துருக்கியும், கத்தாரும் நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்காக இரு தரப்பினருடன் ஒத்துழைக்க தயாராக இருப்ப தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தலீபான் செய்தி தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாகித் வெளியிட்ட அறிக்கையில், பாகிஸ்தானுடன் நல்லுறவை ஆப்கானிஸ்தான் விரும்புகிறது. இந்த நிலையில் இரு நாடுகளுக்கு இடையே போர் நிறுத்தம் செய்வது தொடர்பாக வருகிற 6-ந்தேதி பேச்சுவார்த்தை நடக்கிறது. இதில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட உள்ளது. இதன் மூலம் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையே நடந்து வரும் போர் முடிவுக்கு வரும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் பாகிஸ்தான் ராணுவ தளபதி அசிர் முனீர் ஒரு நிகழ்ச்சியில் பேசும் போது ஆப்கானிஸ்தான் உள்பட அனைத்து அண்டை நாடுகளுடன் பாகிஸ்தான் அமைதியை விரும்புகிறது. ஆனால் ஆப்கானிஸ்தான் மண்ணில் இருந்து எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பொறுத்துக்கொள்ள முடியாது. என கூறி உள்ளார்.

## கனடா: கொலை வழக்கில் இந்திய வம்சாவளி இளைஞருக்கு 25 ஆண்டுகள் சிறை - கோர்ட்டு உத்தரவு

**ஒட்டாவா, நவ.2:**

இந்திய வம்சாவளி இளைஞர் பல்ராஜ் பஸ்ராவின் தண்டனை விவரங்களை பிரிட்டிஷ் கொலம்பியா கோர்ட்டு அறிவித்தது.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கடந்த 2022-ம் ஆண்டு அக்டோபர் 17-ந்தேதி, போலேவார்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள கோல்ப் கிளப் மைதானத்தில் 38 வயதான விஷால் வாலியா என்பவர் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார். அவரை கொலை செய்த நபர்கள் அங்கிருந்து தப்பியோடியபோது ஒரு வாகனத்திற்கு தீவைத்துவிட்டுச் சென்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய போலீசார், கொலையாளிகளான இக்பால் காங்க்(24), டீன்ரே பாப்டிஸ்ட்(21) மற்றும் பல்ராஜ் பஸ்ரா(25) ஆகிய 3 பேரை அதிரடியாக கைது செய்தனர். இந்த வழக்கு தொடர்பான விசாரணை கோர்ட்டில் நடைபெற்று வந்தது. இதில் இக்பால் காங்க் மற்றும் டீன்ரே பாப்டிஸ்ட் ஆகிய இருவரும் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து இக்பால் காங்கிற்கு 17 ஆண்டுகள் சிறை தண்டனையும், வானகத்திற்கு தீ வைத்த குற்றத்திற்காக கூடுதலாக 5 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது. மற்றொரு குற்றவாளி டீன்ரே பாப்டிஸ்டுக்கு வாழ்நாள் சிறை தண்டனை விதித்து கோர்ட்டு உத்தரவிட்டது. தொடர்ந்து இந்த வழக்கில் மூன்றாவதாக கைது செய்யப்பட்ட குற்றவாளியான இந்திய வம்சாவளி இளைஞர் பல்ராஜ் பஸ்ராவின் தண்டனை விவரங்களை பிரிட்டிஷ் கொலம்பியா கோர்ட்டு இன்று அறிவித்தது. அதன்படி பல்ராஜ் பஸ்ராவுக்கு 25 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

## இங்கிலாந்து இளவரசர் ஆண்ட்ரூ அரச பட்டங்கள் பறிப்பு; வீட்டை காலி செய்ய சார்லஸ் உத்தரவு

**லண்டன், நவ.2:**



இளவரசர் ஆண்ட்ரூ கிழக்கு இங்கிலாந்தில் உள்ள சாண்ட்ரீஸ் ஹாம் எஸ்டேட்டில் உள்ள மாற்று தனியார் தங்குமிடத்துக்கு செல்ல இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது

அமெரிக்காவைச் சேர்ந்த வர்ஜீனியா ஜியூப்ரே என்ற பெண், மறைந்த இங்கிலாந்து ராணி எலிசபெத் இரண்டாம் அவர்களின் இரண்டாவது மகனும் இளவரசருமான ஆண்ட்ரூ (வயது 65) மீது பாலியல் புகார் அளித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தனது இளம் பருவத்தில் பாலியல் தொந்தரவுக்கு ஆளானதாக அவர் குற்றம் சாட்டினார்.

ஆனால் இந்த புகாரை இளவரசர் ஆண்ட்ரூ தொடர்ந்து மறுத்து வந்தார். இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் வர்ஜீனியா ஜியூப்ரே திடீரென தற்கொலை செய்து கொண்டார். இது இளவரசர் ஆண்ட்ரூவுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியது. அவருக்கு எதிராக கண்டனமும் விமர்சனமும் எழுந்தன.

இதைத்தொடர்ந்து அவர், "அரசுப் பட்டங்களைத் துறக்கிறேன்; என்மீதான குற்றச்சாட்டுகள் மன்னர் மற்றும் அரச குடும்பத்தின் பணிகளுக்கு இடையூறாக உள்ளன.

எனவே பொது வாழ்க்கையிலிருந்து விலக முடிவு செய்துள்ளேன்," என தெரிவித்தார்.

இந்த சூழ்நிலையில் தனது தம்பி இளவரசர் ஆண்ட்ரூவின் அனைத்து அரசுப் பட்டங்கள் மற்றும் சலுகைகளை பறிப்பதற்கான முறைப்படி நடவடிக்கையை மன்னர் சார்லஸ் தொடங்கி உள்ளார். அவருக்கு எதிரான நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளார். மேலும் ஆண்ட்ரூவின் விண்ட்சர் இல்லத்தை காலி செய்யுமாறு பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

அரண்மனை சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், "இளவரசர் ஆண்ட்ரூவின் உடை, பட்டங்கள் மற்றும் கவுரவங்களை திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. இப்போதிலிருந்து அவர் ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன் விண்ட்சர் என்று அழைக்கப்படுவார். அவரது விண்ட்சர் இல்லத்தை காலி செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது; அவர் மாற்று தனியார் தங்குமிடத்துக்கு செல்வார்," என கூறப்பட்டுள்ளது.

மன்னர் சார்லசின் இந்த உத்தரவின் பேரில், இளவரசர் ஆண்ட்ரூ கிழக்கு இங்கிலாந்தில் உள்ள சாண்ட்ரீஸ் ஹாம் எஸ்டேட்டில் உள்ள மாற்று தனியார் தங்குமிடத்துக்கு செல்ல இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவரிடமிருந்து யார்க் டியூக் பட்டமும் கவுரவ ராணுவப் பட்டமும் பறிக்கப்பட்டுள்ளன.

பதவிகளை இழந்த ஆண்ட்ரூ, ஒரு காலத்தில் துணிச்சலான கடற்படை அதிகாரியாக பணியாற்றியவர். 1980 ஆம் ஆண்டுக்கு முன்பு அர்ஜென்டினாவுடன் நடந்த பால்க்லாந்து போரின் போது ராணுவத்தில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இளவரசருக்கு எதிராக மன்னர் சார்லஸ் மேற்கொண்டுள்ள நடவடிக்கை இங்கிலாந்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மியான்மர் அகதிகளுக்கு பாதிப்பா? ஐ.நா. நிபுணர் குற்றச்சாட்டை நிராகரித்தது இந்தியா

**காசாசிட்டி, நவ.2:**

பஹல்காம் பயங்கர தாக்குதலுக்கு பிறகு இந்தியாவில் மியான்மரில் அகதிகள் பாதிக்கப்பட்டதாக கூறிய ஐ.நா. நிபுணரின் குற்றச்சாட்டை இந்தியா நிராகரித்தது.

ஐ.நா. சபையின் சிறப்பு நிபுணர் தாமஸ் ஆண்ட்ரூஸ் மியான்மர் மனித உரிமைகள் குறித்து தாக்கல் செய்த அறிக்கையில் கூறியிருந்ததாவது:- இந்தியாவில் கடந்த ஏப்ரல் மாதம் 22-ந் தேதி காஷ்மீரின் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் மியான்மரை சேர்ந்த யாரும் ஈடுபடவில்லை என்றாலும், மியான்மரை சேர்ந்த அகதிகள் இந்தியாவில் கடுமையான அழுத்தத்துக்கு உள்ளாகினர்.

அந்த சம்பவத்துக்கு பிறகு இந்திய அதிகாரிகளால் சுமார் 40 மியான்மர் அகதிகள் காவலில் வைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு நாடு கடத்தப்படுவார்கள் என்று அச்சுறுத்தப்பட்டனர். கடந்த மே மாதத்தில் இந்திய அதிகாரிகள் ஏராளமான ரோஹிங்கியா அகதிகளை வங்காள தேசத்துக்கு நாடு கடத்தினர். இந்த நாடு கடத்தல்கள் குறித்து இந்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டது.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

இந்நிலையில் நியூயார்க்கில் நடந்த ஐ.நா. பொது சபையின் 3-வது குழுவில் மியான்மர் அகதிகள் குறித்து ஐ.நா. நிபுணர் அறிக்கை ஆதாரமற்ற பாரபட்சமான கருத்தாக உள்ளது அசாமை சேர்ந்த பா.ஜனதா எம்.பி. திலீப் சைகியா அறிக்கை அளித்தார். அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருந்தாவது:-இந்தியா தொடர்பான அறிக்கையில் உள்ள ஆதாரமற்ற மற்றும் பாரபட்சமான கருத்துகளுக்கு கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கிறேன். கடுமையாக கண்டனம் தெரிவிக்கிறேன். பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் மியான்மர் அகதிகளை பாதித்தது என்ற குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை. சிறப்பு நிபுணரின் இத்தகைய பாரபட்சமான மற்றும் கண்மூடித்தனமான பகுப்பாய்வை இந்தியா நிராகரிக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 30 பாலஸ்தீனிய கைதிகளின் உடல்களை ஒப்படைத்த இஸ்ரேல்

**காசா சிட்டி, நவ.2:**

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தியது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டது. 2 ஆண்டுகள் நடந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 68 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

அதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பின் முயற்சியால் கடந்த 10ம் தேதி இஸ்ரேல் , ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. ஹமாஸ் தங்கள் வசம் உயிருடன் இருந்த 20 பணய கைதிகளை இஸ்ரேலிடம் ஒப்படைத்தது. மேலும், கொல்லப்பட்ட 28 பணய கைதிகளில் 17 பேரின் உடல்களை இஸ்ரேலிடம் ஒப்படைத்தது. இன்னும் 11 இஸ்ரேலிய பணய கைதிகளின் உடல்கள் ஹமாஸ் ஆயுதக்குழுவிடம் உள்ளன.

இதனை தொடர்ந்து ஒப்பந்தப்படி இஸ்ரேல் தங்கள் பிடியில் உள்ள பாலஸ்தீனிய சிறைக்கைதிகள் (ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட) பலரையும் விடுதலை செய்து வருகிறது. மேலும், உயிரிழந்த பாலஸ்தீனியர்களின் உடல்களும் ஒப்படைக்கப்படு வருகிறது. இந்நிலையில், 30 பாலஸ்தீனிய கைதிகளின் உடல்களை இஸ்ரேல் இன்று ஒப்படைத்துள்ளது. இஸ்ரேலிய சிறைகளில் உயிரிழந்த ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 30 பாலஸ்தீனிய கைதிகளின் உடல்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. காசா முனையில் ஹமாஸ் ஆயுதக்குழுவால் நிர்வகிக்கப்பட்டு வரும் சுகாதாரத்துறையிடம் உடல்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.